பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# திருமெஞ்ஞானசாகரம்.

இஃது

திருநெல்வேலிஜில்லா ஏர்வாடிநகரிலுதித்த தெய்வீக நிலைமைக்க மெஞ்ஞானசொரூபராகிய காமில் முகம்மல்

(ஷெய்கு சதக்கதுல்லா)

ஹிபத்துல் ஆரிபுபில்லா ஷெய்கு ஹஸன் முஹ்யித்தீன் சாஹிபுல்காதிரி அவர்களாலியற்றிய அஹதுமணிமாலை, அக்தாபுமாலை, மஃமூதுமாலையும், அவர்களின் பௌத்திரராகிய

(ஷெய்கு முஹம்மது அப்துல்காதிர்)

சாஹிபுல காதிரி யவர்களா லியற்றிய

மெஞ்ஞான

## அலங்கிர்த பாமாலையும்,

அவர்களின் முரீதீன்களான சிஷ்யர்களி...

மனோ தயவுள்ள தனுபகாரத்தால்

திருநெல்வேலி தாருல்இஸ்லாம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1343-ம் வருஷம் 1925- வருஷம் மேமீ 26-உ

இதன் விலை முதற்பதிப்பு. ரூ. 2—0—0

காப்பிரைட் ரிஜிஸ்டர்ட்.

Registered Copyright

பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் றஹீம்.

## குன்

ஆகென்றசொல்லால் ஆலமனைத்தும் சிருஷ்டித்தருளும் ஆதிபர வஸ்த்துவாகவும் ஹம்தும் ஹாமிதும் மஹ்மூதெனும் புகழும் புகழ்பவனும் புகழப்பட்டவனுமான உவமைகொண்டறிந்து ஒப்புவமை கொவ்வா பரிசுத்தனாகவும் தான் தானான தயாபரக்கடவுளுமாகிய அல்லாஹுத்தஆலாவை போற்றிப்புகழ்ந்து அவனது திருவொளிவாலமைத்து திசையெங்குமிலங்கும் தீன்நபி முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்மீதும் அவர்களுறவினர்கள் நேசர்கள் சகலர்கள்மீதும் சலவாத்தும் சலாமும் கூறிய பின்னர் அல்லாஹுத்தஆலாவுக்கு தொண்டுசெய்யும் ஊழியனும் செய்குமுஹம்மது அப்துல்காதிறென்ற நாமத்துடையவனும் ஷெய்கு அலீ சலாஹுத்தீனுல் காதிரி அவர்களின் குமாரனும் கவிபாவுமாகிய ,,யான் தெரிவிப்பது யாதெனில்,, தர்க்கலை மெஞ்ஞான சுரூபராகிய காமில்முகம்மல் பீர்முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்களின் திருவருட்சீடராகவும் காயல்மாநகரிலிருந்து ஏர்பதி நகருக்கேகிய நீதிநெறியமைந்த மெஞ்ஞான தீபமாகிய செய்குமுஹம்மதுமீரான் ஆரிபு பில்லா அவர்களின் புத்திரராகிய செய்குஹஸன் முஹ்யித்தீன் சாஹிபுல் காதிரி அவர்களின் தவப்புத்திரராகவும் ஏர்பதிநகரில் ஹிஜ்ரி 1235-ம் வருஷம் ஷவ்வால் மீ 13-உ உதயமாகி ஹிஜ்ரி 1292-ம் வருஷம் ஷவ்வால் மீ 5-உ ஷை நகரில் ஸமாதியாயமைந்த எந்தையரின் திருத்தந்தையாகிய ,,ஷெய்குசதக்கத்துல்லாஹில் ஆரிபுபில்லா,, அவர்களால் இயற்றிய (அறுதுமணிமாலையும், அக்தாபுமாலையும், மஹ்மூதுமாலையும்,) ஷை நன்னூல் தொன்னூல் முதலிய இலக்கணவிலக்கிய நூலொன்றும் பார்வைசெய்யாத இச்சிறியேனாகிய யான் இயற்றிய மெஞ்ஞான அலங்கிர்தபாமாலையும் சேர்த்து கோர்வையாயிருக்கின்ற இந்தமெஞ்ஞான சாகரமென்று பேர் சூட்டப்பட்ட புஸ்தகத்தை நோட்டமிட்டு உதயமாகிபார்க்கும் அறிவாளர்களும் மெஞ்ஞானிகளும் இலக்கணவித்துவான்களுமாகிய கனவான்களான எனது இகுவான்களிடம் தஸ்லீமுடன் யான்கேட்டுக்கொள்வதாவது [அல் இன்சானு மஅல்கத்தாயி வன்னிஸ்யான்] ஒவ்வொருமனிதரும் தவறுடனும் மறதியுடனுமாயிருக்குமென்று ஆன்றோர்வாக்கியம்வந்திருப்பதாலும் இப்புத்தகத்தில் செய்யுளிலக்கணவழு சொல்வழு முதலியஎவ்வழுவிருக்கபோதிலும் கிருபையென்றகண்கொண்டுபார்த்து அவ்வழுக்களைத்திருத்திபொறுத்தருளும்படி தயவாய் விரும்புகின்றேன். இன்னும் இதில் பிழைதிருத்தம் போடாததால் எழுத்து கூடுதல் குறையுதல் மாறுதல் இருப்பதையும் கற்றோர்களாகிய கனவான்கள் திருத்திவாசிக்கும்படியிவும் கேட்டுக்கொள்கிறேன்

இங்ஙனம்

**ச. அ. மு. செய்தமுஹம்மது அப்துல்காதிர்.**
சாஹிபுல் காதிரிய்யில் ஐதுருஸிய்யி,
1 வது தெரு ஏர்வாடி திருநெல்வேலி ஜில்லா.



யாஹூ—

பிஸ்மில்லாஹிர் றகுமானிர்றஹீம்.

# திருமெய்ஞ்ஞான

# அஹதுமணிமாலை.

—(*)—

திருவினுந்திருவாய் மணியினுந்தெளிவாய்
திசையெல்லாம் புகழும் நற்பரமாய்
யுருவினுமுருவாய் யொளியினுமொளிவாய்
யொன்றினுமடங்கிடாப் பொருளாய்
மருவினுமருவாய் வாசமுற்றிலங்கும்
மறைபொருளஹதெனும் தாத்தாய்
கருவினுங் கருவாய் காணுமெய்ப்பொருளை
கருத்தினிற்றெளிவது கருத்தே. 1.

அஹதெனும் பொருளே அஹ்மதுக்கிடமாய்
அஸ்லஹ்மது வினுக்கஸ்லாய்
உஜூதினில் அஹதாய்விளங்கிய பொருளாய்
வல்லமைச் செலுத்துஞ்செங்கோலாய்
தகுமுறும் வாஹிதிய்யத்தில் இஸ்மாய்
சங்கையுற்றோங்கும் முத்தலகாய்
ஜெகமெலாமமைத்தாள் தனியவனருளை
தரித்தவர் தனையறிந்தவரே. 2.

தருதியாம் இல்லை யறிந்திடாமிஸ்க்கின்
தனியவனருளினை நோக்கி
அஹ்றெதனுமணியின் மாலையை மனுக்கள்
அனைவரும் மகிள்உறஉரைத்தேன்
நிகரரும்சஷி முன்மின்மினுப்புழுப் போல்
நிகர்க்கும் இன்னூலினை பெரியோர்
நகைத்திடா திழுக்குப்பிளைகளை திருத்தி
நயமருள் புரிவது நலமே. 3.

## வேறு விருத்தம்.

பழுதொன்றுமில்லாநாயன் பாரபரனரியகோமான்
மொளியினில்வேறுய்கல்கு முழுதுமேதானுயோங்கி
அழுதிநிதிரைஞ்சுவோர்கள் அகத்தினிற்றுலங்கிஎன்றும்
அளிவிலாதிருக்குந்தூய ஆதியைப்போற்றிசெய்வாம். 4.

பழுதகல்நபிமார்க்கெல்லாம் பண்புறும்இமாமாய்நின்று
தொழுதுநல்மிஃறுஜென்னும் தோத்திரமதனைநாடி
விழிதரும்உறாஜிலேறி விளம்பொணுஞானம்பேசும்
வளிதருமிறசூல்தம்மால் வழுத்தினேன்வளங்கவேதான் 5.

தானவன்சொரூபமில்லான் தருதிகொண்டெங்குமாகி
கோனவன்குதுறத்தாலே குலம்பலதெல்லாந்தானுய்
ஈனமொன்றணுகாவண்ணம் இருந்திடுமியல்பையோரார்
வானவன்முனிவிலாகி வழிகெட்டுவருந்துவாரே. 6

வான்தருவழிதீன்தன்னில் வள்ளலெம்மிறசூல்தம்மால்
தெரிந்திடும்சித்திக்கென்ற திரல்அபூபக்ரினோடு
அருந்தவஉமறும்நல்லோன் அருள்உதுமானுமின்னும்
அறிந்திடும்அலியும்ஹசனேன் அனைத்தயும்போற்றுவாமே 7.

போற்றிச்செங்கமலப்பாதம் புகழ்ந்தரிஇல்மேள்பங்காம்
யேற்றமாம்சிபத்துமேழு இணங்கியவகழும்பின்னும்
தோற்றியஉறாஜிலேழும் துலங்குநன்மகாமில்காணும்
யேற்றியேஇவையறிந்தோர் இறைதனையறிந்தோராவார் 8.

பூரணப்பொருளாய்வந்த புகழ்பெறும்ஐதரூஸி
தாரணிதனில்உஸ்தாதாய் தலிலெனக்கருளவந்தோர்
மாறணமகற்றுமன்னோர் மலரடிச்சிரமேற்கொண்டு
ஆறணப்பொருளதான அஹ்றெதனுமணிசொல்வாமால் 9

குறித்திடும்எனதுஸ்தாது குவலயகுதுபாய்வந்த
திறத்தொடுசெங்கோலோச்சி திஷயெலாஞ்செலுத்திநேராய்
நிறுத்திடும்தாரகுபோல நீதமேபரப்பிமேலாம்
அறத்துடன்ஆதிபாலில் அடைந்தகமகிழ்வுற்றோரே 10.

தேன்பொளில்ச்சூழ்தென்காசி திருஅபூஹனீபாவென்போர்
தானருள்சிருமலுக்கர் தவத்திஞனுதித்தவள்ளல்
கோனொளிவிளங்கும்பீர் முகம்மதாம்ஒலிப்பொருளை
யான்மிகப்பணிந்தேன்யாஹூ யாறப்பல்ஆலமீனே 11.

செந்நெலங்களனிசூழும் சீறியவேறுபாடி
தன்னில்வாழ்மீரான்லெப்பை தானருள்மைந்தரான
மன்னியஹசன்முஹியித்தீன் வள்ளலின்சுதனாம்சதக்கு
என்னுனர்பெயரோனிந்த யெளிதுறுமாலைசொன்னான் 12

அஹதெனுப்பொருளதான ஆதியின்நாட்டம்மீறி
தகுமுறும் வஹ்தத்தாகி தன்சிபத்தேழுங்கொண்டு
அஹ்மதில்மலுஹூறுகி அடங்கலுமானதாலே
அஹதெனுமணிநாமத்தை அறைந்தனன்இதற்குத்தானே 13.

மணியெனும்அஹ்மதான மலுஹூறுய்தோன்றிமிக்காய்
யணிபெருதீன்மார்க்கத்தை யகிலமீதெவர்க்குமன்பாய்
துணிப்புடன்செலுத்திமோட்க்ஷ துறையையுங்காட்டிநின்ற
ருணியிலாமுத்தலகேளாம் குறிப்பினில்முகய்யதாமே. 14.

முகய்யதுவெனுமின்சான்றன் முதல்வழிசரீஅத்தாகும்
பகையகல்தரீக்கத்தாலே பாரபரநருளுண்டாகும்
வகைபலுதோற்றங்காணும் மகத்துவஹகீகத்தாலே
தகையறும்மஃரிபத்தால் தனியவனறிவுண்டாமே. 15.

ஷறஇனைபிடிப்போயின் சலாத்தினில்ஹாஹூறுகாணும்
துறவாதரீகத்தாலே துலங்கியசிறப்புண்டாகும்
மறுவிலாஹகீகத்தாய்ந்தால் மறையினுட்பொருள்கள்தோணும்
அறம்விளைமஃரிபத்தால் அஹதினிற்சேரலாமே. 16

அய்யமாம் அம்மாறுவை அடைத்திடும்ஷரீஅத்தாலே
துய்யனல்தரீகத்தாலே துணித்திடும்லௌவாமாவை
வுய்யவேமுல்ஹிமாவை உரிந்திடும்ஹகீகத்தாலே
துய்யவன்மஃரிபத்தால் துலங்கிடும்கல்புதானே 17.

மௌத்தின்முன்மௌத்தாகென்று மறைநபியுரைத்தசிர்றை
மகத்துவஅலியும்மேலோர் மகிள்உறவிரித்துச்சொன்னார்
தருத்தென்னும்தவிசிற்பார்வை தரித்துபார்ப்பயாகில்
மிகுத்திடும்மகனக்கண்பார்வை வியப்பொழிஷிறப்பும்காண்பாய் 18.

காணவேதப்பிடாது கடந்துமேல்சென்றிடாது
வூணதின்மருளுமுன்றன் உயர்மதிமருளுமின்றி
பேணிவாகல்கில்ஹக்கை பிஷகஅமலில்முங்கு
ஆணியாமிதனைபெற்றால் அதபுடன்அஹதில்சேர்வாய். 19.

ஷேரவேவழியைக்கேளாய் செய்திடும்பாவமெல்லாம்
தீரவேதௌபாவென்னும் திவ்வியமருந்தைத்தேடி
நேர்பெருங்கலிமாகொண்டு நபிமுகம்மதுசொற்பேணில்
சீறிய அருஷின்மேலே சென்றிடுங்குணமுண்டாமே. 20

ஆமெனஉரைத்தவாறு அறுசுநிற்சென்றோர்தம்மை
பூமியில்பகீரென்பார்கள் புகள்ஜலால்ஜமாலில்முங்கி
சாமுனம்செத்தேஹக்கை சிருஷ்டியிற்றோற்றமாக்கி
நேமமாயிருப்பார்மேலோன் பிஷ்டையைப்புரிகுவாரே. 21.

மோகமாம்மஹப்பத்தென்னும் முக்கியபொருளைக்கொண்டு
சாகுவார்சங்கையான ஷஹாதத்தைபிடித்தேசிற்பார்
யேகுவார்தனையேதள்ளி இறைதனைஇதுபாத்தாக்கி
ஆகுவார்தன்னில்தானாய் அணிபெரும்அஹதில்தானே. 22.

## வேறு.

இர்வைசிபத்தீரேளின்சானுக்கு
இறையோன் கொடுத்திட்டபடியினாலே
மருவாகிய உன்றன் மனதினுள்ளே
மௌஜூதானவன் அல்லாவென்றும்
உருவமுலகெல்லாம் அவனேயென்றும்
உறுதியாய் காமில்தனைப்பிடித்து
விரிவாய்முஷாஹதாச்செய்துபார்க்கில்
விளங்கும் முகம்மதினொளிதோணுமே. 23

## வேறு.

தோணுனல்மகாமாம்லாஹூத்தெனும்பரவெளியில்றாஹூ
காணுமோரொளிவாயோங்கி கதிரெறித்திலங்கிநிர்க்கும்
பூணுமோர்திக்றைக்கொண்டே புகழ்பெறவேண்டும்அந்த
மானுறுமொழிவுஷூழும் மகாமதுமஹ்மூதாமே 24.

அகமிய அஹதில்மூங்கி ஆஷிகுமஃஷூகானல்
அகமெனும்ஹகீகத்தான அறுதியாம்இன்சான்தன்னில்
அஹ்மதுவெனவேயான அச்சரம்அகத்திற்றேனும்
வகைஇஃதறியாமாந்தர் வருந்துவர்நரகில்தானே. 25.

தானெனும்நரகம்சொற்கம் தனக்கென அமல்செய்யாமல்
கோனெனும்தாத்திர்கூடும் குணமதையெடுத்துமேவி
தேனெனும்கலிமாக்கொண்டு திருந்தியமௌஜூதாகி
தீனருள்புகலையன்பாய் தெரிந்துக்கொள்மௌத்துக்காக 26

மௌத்தையேமறந்தமோச மனமது அம்மாருவாம்
சவுத்தினையுயர்த்திதிக்கிர் ஜல்லியைமிகுதமாக்கி
கவுத்துவஇப்லீசானை கருத்தினின்றெடுத்துவீஷி
அகத்தினிலருளைபூட்டி அறைகுவாய்அல்லாஹூவை. 27.

ஹூவெனும்இஸ்மைபோலே குறித்திடும்இஸ்மொன்றில்லை
மாவுறுங்கலிமாவாய்ந்து மனமதிலறுபத்தாறை
தாவியேசிற்றைநோக்கும் தரமுளர்காமிலாகும்
ஹூவென்றும்ஹீஹூவென்றும் கருதுவர்கத்தோர்தாமே. 28

தாமொனவிருந்துபார்க்கி ற்றறிப்பதுதௌஹீதாகும்
ஆமதையறிந்தபேர்கள் அகத்தினில்அல்ஹம்தான.
பூமியிற்றோற்றம்பஞ்ச பூதியக்களையறுத்து
காமமுற்றரியஹக்கை கமலத்தில்கருதுவாயே. 29.

உள்ளத்தில்தோற்றுப்ஞான ஒளிசுடர்கண்டபேர்கள்
விள்ளறும்மமுதமுண்பார் விருப்பொடுங்குறையாஞானம்
அள்ளுவார்அமலில்மூங்கி யனுதினம்மூச்சிநோடு
கொள்ளுவார்தௌஹீதாசை குருபதம்சிறமேற்கொண்டே 30.

ஆகுமாம்வணக்கம்செய்யும் அறிஉள்ளபேரேகேளும்
தாகமாய்தௌஹீகாய்ந்து தனித்தவனருளையேற்றி
யேகமாய்இஷ்களெல்லாம் எழுப்பியேஇறையைநாடி
சாகுமுன்சாவீராகில் சமூகத்தில்புகுதுவீரே. 31.

ஆட்டியஅம்மாறுவை அடைத்திடும்ஹற்புமூன்று
காட்டியலௌவாமாவை களைந்திடும்ஹற்புமூன்று
ஓட்டியமுல்ஹிமாவை உரிந்திடுஹற்புமூன்று
நாட்டியமுத்மஇன்னு நயம்பெறும்ஹற்புமூன்றே. 32.

கூறியஹற்பிராறில் குறித்திடும்ஹற்புஹ—வை
வேறினையகற்றிஹாவை விலக்கியேநாவிலொன்றை
வீறுடன்பிடித்தெப்போதும் விழித்தினிதிருந்துகொண்டு
மாறிடாமவுனமுற்றால் முஹம்மதைதுயருவீரே. 33.

துயர்ந்திடும்கல்பினுள்ளே துணிந்தரஷாளுகின்ற
உயர்ந்ததோர்ஹக்குநூறு உரைத்திடும்இசம்இம்மூன்றோ
டயர்ந்திடும்நபுசுபுத்தி அரும்பொருள்றாஹிம்மூன்றும்
பகர்ந்திடும்வஸீறைப்போல பகுத்திநிதரிக்குவீரே. 34.

நபுசென்னும்ஷெய்தான்றன்னை நஷித்ததின்றீங்கைவிட்டும்
நபசெனும்மூச்சிலென்றும் நயம்பெறகாவற்றேடி
தபசினைகைநுஷற்று தனையறிந்தியற்றுவீரேல்
நபுசுடன்அற்ஷிமேலறும் ஹபீபருள்வழியிலாவீர். 35

ஆனதோர்விந்துநாதன் அதனுளேசமனுசேர்ந்து
கோனெனும்இன்சானாகி குவலயத்துதித்தபின்பு
ஈனமாய்வேங்கையொன்று இவன்றனைதுரத்தக்கண்டு
கானகக்கிணற்றிற்பாய்ந்து காக்கப்பொய்வேர்பிடித்தான் 36.

புலியதுகிணற்றின்மேலே பொறுப்புடனிருக்கரண்டு
எலிஇவன்பிடித்தவேரை இறுக்கமாய்நறுக்கக்கீளே
சலித்திடும்நெருப்புந்தேளும் கடிவிஷப்பாம்புங்கண்டு
சலித்தகமெலிந்துவாடும் தன்மையைகூறக்கேளே. 37.

தூரத்தியவேங்கைமௌத்து சூழ்ந்திடுங்கிணறுதுன்யா
உரத்தபொய்வேரின்னாட்கள் உறுமெலிமதிவெய்யோனே
கரித்திடுநெருப்புந்தேளும் கடுங்கபுறுகும்பொய்யாய்
தரித்தஇவ்வாழ்வைநீக்கி தனையறிந்திடுவாய்நெஞ்சே. 38.

மறைந்திடாமௌஜூதான மக்கனல்மஹ்மூதீந்த
குறைந்திடாஈமானோடு கொண்டிடும்இஸ்லாம்தானும்
அறைந்திடும்தௌஹீதான அழகுள்ளம்ஃரிபத்தும்
உறைந்திடவிருப்பமுற்றால் உஸ்தாதினைச்சேருவீரே. 39.

காதொடுநாஷிகண்வாய் கருத்துடன்ஹவாசயெல்லாம்
வேதனைச்செய்திடாமல் மெலமெலவிறுத்திபாங்காய்
காதல்கொண்டுமனுசெய்கின் காறணைச்சூட்ச்சத்தாலே
மேதினியதனில்மேலோன் மஹப்பதையகங்கொள்வீரே. 40.

கூடியசம்போகத்தின் குணத்திலும்ஊண்டன்றன்னை
நாடியநேரந்தானும் நலமுடன்நினைவைப்பூட்டி
தேடியேயிருந்துஞான திறவுகோல்கிடைத்தபின்பு
பாடினேன்படைத்தோன் இல்லை பலன்பெறபேஷினேனே 41.

பேஷினேன்பெரியோன்றினை பிடித்துநான்பிஷகில்லாமல்
கூஷினேன்சிறிதுகாலம் குணமுள்ளவகைத்தோனாமல்
யோஷனைமிகுதம்செய்தே இறையருளுதவிபெற்று
வர்சனைநாகரும்வண்டின் வாருபோல்தொழில்புரிந்தேன் 42.

தேனினையுண்டேனென்றன் திருந்தியகாமில்சொல்லால்
மானையேபிடித்தேன்வேட்டை மலிந்தமைதானில்லின்று
தானெனும்பொருளைக்கண்டேன் தன்மனை தகுதிகொண்டு
ஆனையதனுவிநாலே ஆகப்படுவாரிசாமே. 43.

வாறினையறியாநாளில் வெறிகொண்டுமஜனூன்போலே
மீறியேநடந்தேன்யென்றன் விதிதனைநினைந்துநொந்தேன்
நூறெனும்ஒழிஎன்மீதில் நுழைந்திடும்படியாய்வந்து
கூறினார்குருமெஞ்ஞானம் குணமுடன்விளங்கினேனே. 44.

விளங்குமோர்வகையைக்கேளும் வெற்றியாம்அனுசிற்தன்னில்
ஒழுங்குள்ளமண்டுவப்பு உற்றதண்ணீர்புளிப்பு
விளங்கியகார்த்துறைப்பு விளம்புத்திகஷட்பாகாஷம்
கழங்கமில்லாதநாய கடிகமளமுதமாமே 45;

யேகமாம்ஞானம்விண்ணோ டிசைந்திடும்விதத்தைக்கேளும்
மோகமாயானும்பெண்ணும் மௌனமுற்றிருந்துக்கொண்டு
தாகமாய்சமதில்மூங்கி சத்தியுன்சிவனுமாகி
பாகமாயுலகிற்றோன்றும் பாங்கிதென்றறிகுவீரே. 46.

அறிகுவீர்இல்லைத்தேன் அருந்துவீருவமைகேளும்
சிறப்புறும்வங்கம்பாயில் செழுமையாங்காற்றுவீச
சிறந்தெழுந்தோடுமாப்போல் சிந்தையைச்செலுத்துவீரேல்
குறையில்லாதுறைபோய்ச்சேர்ந்து குருபதமிறைஞ்சுவீரே. 47

இறைஞ்சுவீர்லாஇலாஹ இல்லல்லாஹுவென்றோதி
அறஞ்செறிந்தோங்குமிஸ்முல் அஃலமாம்பொருளைக்காண்பீர்
நறுஞ்சுவைதரும்உஸ்தாதால் நாட்டியநிலையின்வண்ணம்
உறுஞ்சதுஹற்புநாவில் உவந்துமூன்றினைக்கொள்வீரே. 48.

கொண்டிடில்வினைகள்தீரும் கொடும்மௌத்துற்றவேளை
கண்டனைக்காளாகாமல் கருணையாய்றூஹு தன்னை
விண்டிடாகௌசைன்தன்னில் விரைவுடன்கொடுபோய்ச்சேர்த்து
எண்டிசைபுகழுமேலோன் இடத்தினிற்செல்லுவீரே. 49:

செல்லுவீரிரையைநோக்கி சிறப்புடனகமகிழ்ந்து
சொல்லுவீரவனைப்பார்த்து சுஜாதினைவிதித்தகோவே
நல்லவேதனக்குட்டானாய் நலம்பெறும்சுஜாதுசெய்து
அல்லலையகற்றிவிட்டாய் அடங்கலுந்தானென்றே. 50.

காவலாம்சிர்றினோடே கமலத்தில்கலிமாநாட்டி
பூவதைமுகக்கும்வாறாய் புந்தியைபெலமாய்ஏற்றி
தாவியேகுருபொற்பாதம் தனையறிந்திறைஞ்சிடாதார்
சாவியாம்வார்த்தைபேசும் சிறப்பிலாமூடராவார் 51.

மூடமேமிகுத்துதுன்யா மயக்கமும் ஆகூஷதானும்
கூடியேமோஷமென்னும் கோட்டையில்அடைத்துப்பூட்டி
தாடியும்வெளுத்துமீசை தானுமேநரைத்து பின்பு
நாடியுந்தளர்ந்துயிர்போய் நரகினிர்சேருவாரே. 52.

நரகினிர்ச்சேராவண்ணம் நலம்தருமெனதுஸ்தாது
அருகினிலணைத்தெனுள்ளே அரும்பொருளொளியைக்காட்டி
திருகியகோணமெல்லாம் திருத்திவைத்தாண்டதாலே
உருகியே இல்மையெல்லாம் உவப்புடன்விரித்துச்சொன்னேன் 53

சொன்னதோருஸ்தாதிந்த துணிகரமில்லாவிட்டால்
உன்னதக்கோட்டைவாஷல் உனக்குவக்தகப்படாது
இன்னதென்றறியசூட்சம் இபம்பிம்உலமாசொல்லை
தன்னிதயத்தாராய்ந்தால் தான்றனை அறியலாமே. 54.

காணுமோரறிவுகேளும் கமலத்தின்றெளிவுவேண்டில்
பூணுமூன்றையுமேயொன்றாய் பொருத்தியோருருவதாக்கி
தோணுனற்றிரியுநெய்யும் தீபமும்துலங்கும்வாறாய்
ஆணியாம்பொருளையொன்றாய் அகத்தினிலிருத்திப்பாரும். 55.

கோலமாங்குருவாய்த்தோற்றும் குணிப்பிலாறாஹாதானும்
ஆலமில்அஹதைநாடி அறிந்திடும்அறிவினாலே
மூலமாம்முதல்கான முதர்பொருடானும்கூடி
சீலமாயிருக்கக்கண்டு சிறப்புடன்அஹதில்சேர்வாய். 56.

சேருநல்விதத்தைக்கேளாய் செப்புறேன் அன்பு கூர்ந்து
நேரதாய்லாஹிர்பாத்தின் நலங்கொள்ரண்டையுமேயேணி
சிறியஷஹாதத்தென்னும் சொஹாஷள்ளக்லிமாதன்னை
கூர்மையாம்மூச்சிலேற்றி குணமுடனடைத்துவாங்கே. 57.

ஷஹாதத்துகலிமாக்கொண்டு சங்கையாம்பொருளைநாடி
மகாதவஇபாதத்தன்பாய் மனமுடன்புரிந்தென்னாளும்
அகாவுடன்அருளைநோக்கி ஆஷிகுமஃஷூகாகி
தஹாறத்தாயிருப்பாயாகில் தனியவன்றஹ்மத்தாமே. 58.

றஹ்மத்தேமிகுக்கும்மேலாம் றப்பினையறிந்தபேர்க்கு
ஹிஃமத்துமதிகமுண்டாம் சிறப்பமும்தெளிவுமுண்டாம்
பஹாமறும்கஷப்புத்தோனும் பகீர்நிலைஇல்லாதார்கு
தருந்தநல்தெளஹீதாலே தெவிட்டிடாதமுதுண்பாயே. 59

அமுதினையுண்டபேர்கள் அனுதினம்அசுலைப்பார்ப்பார்
சமதியாய்கல்கைஹக்கில் சினேகித்துநிர்பாரின்னும்
தமதுநல்ஹகீகத்தான தகுதியைக்கொள்கையாக்கி
அமுதினும்மேலாமின்பம் அருந்துவார்பொருந்துவாரே 60.

தூங்குவாருறக்கமின்றி தொழிலினைதுலக்கமாக்கி
யேங்குவாரெந்தநாளும் இருதயமசைந்திடாமல்
பாங்குடன்பதவிதேடி பகீரெனும்குருவைநாடி
ஆங்கவருரைத்தவண்ணம் அமல்செய்வாரறிவுள்ளோரே. 61.

அறிவுள்ளோரங்கமெல்லாம் அஞ்சியேஅசலைத்தேடும்
நெறியுள்ளநெஞ்சில்நேமநிஷ்டையைபழுதாக்காமல்
குறியுள்ளபெரியோர்ஞெக்கும் குறிப்பதைநாடிநின்று
வெறிகளையகற்றிவேத விஷழத்தைவிரும்புவாரே. 62.

விரும்புவார்வேதநீதம் விவரமொன்றறியாமாந்தர்
தளும்பினல்கிடைக்குமோசொல் தன்சிபத்தறிந்திடாமல்
குழம்பியமனத்தார்மேலாம் குருநிலையறியமாட்டார்
விளம்பும்நம்மாதிவித்தை விகஷிதவித்தையாமே. 63.

ஆதியையறியாரெந்த அறிவையுமறியமாட்டார்
வேதியர்சொன்னாருதி விளங்கிய அஹமதென்றே
ஷாதினைப்பிரித்துக்காட்டும் சூட்சமேயனாதினென்றும்
நீதியாம்முஹம்மதென்றும் நிட்க்ஷயித்தறிகுவீரே. 64.

ஆதியாம்யெமதுநாயன் அனைத்தையும்குதுறத்தாலே
நீதியாய்ப்படைத்துவேத நெறியையும்கொடுத்தானந்த
சோதியாம்சிர்றைநன்றாய் சுனநஹ்மூத்வில்பார்த்தால்
பாதகமகலுமெல்லாம் படைத்தவாறறியலாமே. 65

படைத்தவாறறியாவிட்டால் பங்கமேபலதும்சூழும்
கிடைத்ததோர்பொருளினைஷ கிருபயுமகலுமின்னும்
புடைத்தெழும்புத்திஎல்லாம் புகழிழந்தழியுமென்று
சடைத்தகம்அறுவஷளாவும் திருநபிச்செப்பினாரே. 66.

செப்பிடும்விஷழங்கேளும் செஞ்சுடரொழிவுதானும்
ஒப்பிடர்கரிதாம்யாரும் உவந்திடும்பொருளாம்ஆசை
ஹாப்புடன்காவிகென்னும் குதுறத்தையுடயோன்சிர்றை
செப்பிடும்மகக்லூகெல்லாம் சிறப்புடனாயவேண்டும். 67.

ஆய்ந்திடில்குதாயைப்போலே ஆலத்திலொன்றுமில்லை
மாய்ந்திடும்இஷ்கிலாகி மனமொடுசூஜாதுசெய்து
காய்ந்தறமெலிந்துமேலோன் ஹபீபுதம்உபயதாளில்
பாய்ந்துநன்மூச்சில்ஹாவை பாடுவாய்தேடுவாயே. 68.

ஹாவெனும்ஒசையாலே குதுறத்துபலதுந்தோணும்
கோவெனவிலங்கும்சோதி கோணமெங்கணும்பரந்து
மாவுறும்இல்லல்லாவின் மகுத்துவமெல்லாங்காணும்
தாவியவெனக்கவ்வாவை தாமஹ்பூபுஹக்கே. 69.

ஹக்கனேகல்பில்நீதான் சுனதியைவிளக்கும்செல்வன்
மிக்கவேயுதவிசெய்யும் மிகுந்தநல்லிரக்கமுள்ளோன்
சக்கெலாம்றுத்தென்சிந்தை திருத்துமென்தம்பிரானே
தக்கவாஉனக்குவேறோர் சமதியுங்கண்டிலேனே. 70.

கண்டனர்காட்சியெல்லாம் கமலத்திறவெரிஷித்தாப்போல்
விண்டுரைசெய்யேன் இந்த மேதினி இன்சுக்கெல்லாம்
அண்டிடேன்யார்முன்னாலும் அவர்செய்யுங்கொடுமைக்கஞ்சி
பண்டுளவழியிலேகி பழகுவேன் அழகில்லானே. 71.

அழகில்லாமிஸ்கீனென்றே அஞ்சினேன் அடங்கனுக்கும்
பழகியபெரியோர்தம்மை பண்புடன் அடுத்துக்கெஞ்சி
இழகினேன்எனக்குமேலாம் இஷ்கெனும்குடிப்பைதந்தார்
அழகியஜலாத்தாவானோன் அருள்தரும்வல்லபேர்க்கே. 72.

வல்லவர்வகுத்தோன் தீனின் வளியினிற்றவறிடாமல்
சொல்லினும்சியல்ஹாலின்றும் ஷரீஅத்திலும்தெளிவுபெற்று
அல்லலையகற்றிநாயன் அருளியதௌஹீதாய்ந்து
வெல்லுநல்லொளிவுகாட்டும் மஃரிபத்தறிந்தபேரே. 73.

நல்லவர்தீனைப்பேணி நடந்தவர்நமதுதோழர்
அல்லுமேபகலும்நன்றாய் அவருடன் இணக்கம்வேண்டும்
புல்லரையடுத்தபேர்கள் புகளிளந்தரியயீமான்
நல்லொழியகப்படாமல் நரகினுக்களாவாரே. 74.

முஃமினானவர்கள்தம்மை முடுகியே இருந்தோர்க்கெல்லாம்
சேமமா இறையோநன்பாய் சொற்கவாள்வதனையீவான்
நேமமாம்நிஃமத்தோடே நெடியவன்லிகாவுங்காண்பார்
நாமிதையறிந்துநேராய் நடப்பதுநலமதாமே 75.

தன்னையும்அறிந்துதங்கள் தகுதியும்குணமும்கண்டு
முன்னமேயறிந்தமூல முச்சுடரதையுங்கண்டு
அன்னையும்பிதாவுங்கூடி அமைத்திடும்மௌனங்கண்டு
தன்னையேயறிந்தால்கல்பு தளும்பிடாதிருக்குந்தானே. 76.

தானெனவிருந்தஞான தனிப்பொருளதனைக்கண்டு
கோனினையறிந்தநெஞ்சின் கொடும்பிணியெல்லாம்நீங்கி
கானனேருலகவாழ்க்கை கஷ்டெனுமறிவுந்தோன்றி
ஆனதோர்மஹ்பூபான அஸ்லினில்தரிக்கும்பாரே. 77.

அஸ்லதின்விஷயங்களாய் ஆஹரியத்திருந்தசோதி
பஸ்லதாய் அர்வாஹென்னும் பலபலப்பிரிவதாகி
அஸலபதெல்லாமொன்றாய் அடங்கிய இன்சானென்னும்
கஸஹுறும்வரிகளாகி காஷினிமீதிலாச்சே. 78.

ஆனதையறிந்தேயுள்ளம் அசைந்திடாதறிவைப்பூட்டி
தேனினும்இனியதௌஹீ தினைமிகத்தரிப்பாய்க்கொண்டு
மானமும்மதியுமில்லா மடயரைவிட்டேநீங்கி
கோனருள்பகீனைஹக்காய் காணவேகருதுவாயே. 79.

காணவேகருதிமேலோன் ஹறுறத்தில்முடிவிச்சென்று
பூணவேவேதநூலோர் புகன்றிடும்அமலைக்கொண்டு
வீணநாம்செய்த்தான்தீங்கை விலக்கியேஎந்தநாளும்
ஆணிமந்திரமாம்பாஹூ வானதையறிந்தோனே. 80.

அறிந்திடும்விதம்போல்கஸ்பில் அமலினைப்பிரிஷமாக்கி
எறிந்திடுவம்மாறானவை எடுத்திருதயத்தைவிட்டும்
சிறந்திடும்ஹபீபுல்லாதம் சிர்றினைக்கொண்டேஹக்கை
மறந்திடாதிருந்துநேறப்பில்மகிழ்ந்திடுஷவ்ஹைதைக்கொண்டே 81.

கூடியஷவ்ஹைதைக்கொண்டு சுஆதொடுசஜாதைச்சேர்த்து
தேடுவாயிடைவிடாமல் தெவிட்டிடாதமுதையுண்டு
ஆடுவாய்பஞ்சுமொன்றாய் அகத்தினிலானபின்பு
நாடுவாய்நப்ஸைநீக்கி நமறித்தாத்தைக்கொண்டே 82.

என்றுமேயிறையின்நாட்டம் இருதயமதனில்பூட்டி
நன்றிசேர்மற்றுதன்னில் நலமுடநறிவைப்போற்றி
குன்றிடாவருளைக்காட்டும் குதாயிறஹூலைக்கொண்டு
நின்றிடில்குத்றத்தான நிலைபாய்கிடைக்குந்தானே. 83.

தானவனுரைத்தவேத தகுதியாம்வழியைப்பார்த்து
ஈனமேஇன்னதென்று இருதயமதனில்ஆய்ந்து
கோனவன்செங்கோல்கஞ்சி குற்றமும்பழுதும்நீக்கி
ஆனதோர்அருளைநோக்கி அகந்தெளிந்திருக்கவேண்டும். 84.

பாரமாம்பிணைகள்போக்கும் புகள்றப்பல்ஆலமீனை
பாரறிவாளரெல்லாம் பகாவினில்பகாவைத்தேடி
சீருடநறிவார்செல்வ சிபாத்தினையறிந்தபேர்கள்
நேர்தரும்ஒலிமாரான நல்உலமாக்களாமே. 85

ஆமனைதமதியால்க்கண்டு அஹ்மதைவஹ்றத்தாக்கி
ஹமதைநினைவிலாக்கி குதுறத்தால்ஹக்கைநாடி
நேமமாய்ச்சரத்தைப்பூட்டி நெடியதோர்லீலைசெய்தே [ரே
சேமமாய்ஹூஹூவெண்ணும்.ஜெபங்கொண்டோரகங்கண்டோ
86.

கண்டதைகருத்தில்நித்தம் கருதுவார்கவனமாக
கொண்டனல்ஸீமான்றன்னை குணமுடன்பேறுவார்கள்
விண்டிடாநிலைதப்பாமல் மேவுவாரொளிவுதன்னை
தொண்டரிநிறைதூதான தூயநல்முஹம்மதென்றே. 87.

துய்யவனுதவியாலும் துடர்ந்தநல்பறக்கத்தாலும்
மெய்யுள்ளோர்பொருட்டினாலும் மேவுநல்புருகாநாலும்
அய்யமதகற்றிமேலாம் அமலுடன்தஸ்பீஹ்ஓதி
பய்யவேபழகுவீர்நீர் பாதயிலாசைகொண்டே. 88.

ஆஷையையறியாவீணர் அலமலப்பட்டேசொந்த
பாஷையில்பலதும்பார்த்து பலனதைஎடுத்திடாமல்
ஒஷயைக்கண்டேனென்பார் ஒன்றுமேஇல்லையென்பார்
தோஷிகளவரைக்கண்டு துடருவாரடருவாரே. 89.

துடர்ந்தவர்மோசம்போவார் தொலினையறியமாட்டார்
திடமருள்மௌனமென்னும் திஷையினைகிப்லாவாக்கி
படிந்தெழுப்நினைவுதன்னை பலன்றரும்அருஷதாக்கி
தடந்தரும்இறசூலோதும் ஸலாதினைதுடருவாயே. 90.

ஸலாத்தினில்பற்லுசுன்னத் ஷஹாதத்தில்மஃரிபத்தும்
தலாலத்தாம்கலிமாதன்னில் தனியவனுடையசிர்றும்
விலாயத்தைவிரும்பிநீதான் விழங்கியேநடத்திவந்தால்
சலாமத்தாய்ஹய்யுன்கய்யூம் சமுகத்தில்சேருவாயே. 91.

ஹய்யுமாய்ஆலமெல்லாம் காதிறாய்துலங்குகின்ற
துய்யவன்றனையேநித்தம் தொடர்ந்திடற்றுலங்கும்ஈமான்
மெய்யதாம்மீசான்தன்னில் மிகுந்திடும்அமலுள்ளோர்கள்
உய்யுவாரல்லாஉக்கே உவந்தநல்லடியாராமே. 92.

நெடியவன்அஹதியத்தின் நேர்மையைநீங்கள்பார்த்து
கொடியவனிடம்சேராமல் கொண்டிடும்கொள்கைதன்னால்
அடிபணிந்தல்லாஹுவை அஹ்மதிலுரைப்பிராகில்
படியினில்பதவிதேடி பலன்பெற்றீர்நலம்பெற்றீரே. 93.

பெற்றவரொன்றும்சொல்லார் பேஷவும்இடம்அங்கில்லை
கற்றவர்ஹறாமைக்கண்டால் கண்ணையேமூடுவார்கள்
சுத்தமாய்சுபுஹானல்லா துய்யவன்றன்னைநாடி
மெத்தவேயழுதுநொந்து மீளுவார்மாளுவாரே. 94

மாளுவார்ஷெய்கின்சூட்ச மயமதில்ஆஷையாகி
நாளுமேதக்வாவென்ற நலமதைபிடித்துநின்று
மீளுவார்அல்லாதன்னில் மிகபுகள்ஸுஜூதைநாடி
கோளையாய்நப்ஸைப்பேணி கருதுவார்பொருதுவாரே. 95.

பொறுதிடும்விதத்தைக்கேளும் புலன்அஞ்சைஒன்றாய்ச்சேர்த்து
கருதியேஹக்கைகல்கில் காணுனன்முயர்ச்சிசெய்து
மிருதுவாய்நபுசம்மாறு மிசைப்பினைதடுத்துத்தாக்கி
விரதமாய்ஷஹுவதைக்கொண்டே விருப்பமாய்போற்றுவீரே 96

பொறுதியாய்ருளியாவும் புகள்பெறுமருளியாவும்
உறுதிதியிலாகிஉண்மை ஓர்மையுந்தரிபாடாக்கி
மறதியும்உலகத்தாஷை மயக்கமும்மேர்கொள்ளாமல்
சுறுதியாய்சுகூனில்கல்பை ஷசிட்டுவீர்பாட்டுவீரே. 97

ஆதியாம்இறையோன்இன்சான் அனைவருப்பிருக்கவேண்டி
பாதகமறுநாணூற்று பதினெட்டுபற்லுதன்னை
நீதியாய்பகலும்ராவும் நிபந்தனைபுரிந்தானந்த
சோதியாம்பற்லைநாளும் சடைவிலாதியற்றுவீரே. 98

பலந்தருயீமான் தன்னில் பருளிருப்பதொடஞ்சு
நலந்தரும் இஸ்லாம் தன்னில் நவின்றிடும் பர்ளுபத்து
இலகுனித்திரயினின்றே எழுப்புங்கால் பர்ளோரஞ்சு
நலமுறுவுழுவினாறு நலமுடன் அறிந்துகொள்வீர். 99.

கொள்ளுவீர் தொளுமுன்னே கூறிய பர்ளுமஞ்சு
விள்ளருங்கஸுலுதான் முறிந்திடுமிடத்திலஞ்சு
தெள்ளியதாலுபத்து சிறப்புறுஞ்சுபுஹானதன்னில்
வெள்ளறைம்பத்திநாலாம் வெளிக்கமீரிபினில்தானே. 100.

தானவன் லுஹறாறுமின்னும் தரித்திடும் அஸர் இஷாவும்
ஆனவிடமொன்றிலெவ்வொன் றனைத்திலும் அறுபத்தெட்டு
யீனமாம்முறிவில்முப்பத் தேழுடனிரண்டுவேறே
யானதுமிருபத்தைந்தாம் அவைகளைப்பின்சொல்வாமே. 101.

சொல்லும்நல்லீமானுள்ளோர் சுகப்பெறும்வழியைத்தேடி
நல்லவேவகலிமாதன்னில் நயப்பெரும்பொருளையுன்னி
அல்லலாம்துன்யாவாசை அணுகுதற்கிடங்கொடாமல்
மெல்லவேஅமலில்றப்பை மேன்மையாய்நாடுவாரே. 102.

நாடுவாரிடைவிடாமல் நாயகன்மக்கூசைத்தான்
தேடுவார்மலைகூசாக்கி திருப்பியேமாற்றிவைத்து
நீடியஅமலைக்கொண்டே நிலைத்திடும்பகாவிலாக்கி
கூடுவார்குதுரத்தானகுணமதிற்சேருவாரே. 103.

சேருவாறஹைதிற்றென்றும் சிற்றினைத்தெரிந்துகொண்டு
நேர்தாம்ஹகீகத்தென்னும் நேத்திரமதனால்நோக்கி
கூறியதிக்ரைகல்பில் குறித்தருள்காட்டவந்த
சீறியவிறசூலுல்லா ஷறாஅதைபற்றுவாரே. 104.

பற்றுவார்வஹ்றதத்தென்னும் பழகியமற்தபாவில்
அற்றெரிவார்கள்துன்யா ஆசையகத்தைவிட்டும்
சுற்றுவார்கல்பதல்லா சுஜூதினில்வீழ்ந்தொழுந்து
முற்றலைபுடையநயினார் முறாக்கபமினிதுகேட்பார். 105

முளங்குமே வாய்க்கண்நாஷி முதலிருகாதுமொன்றாய்
ஒழுங்குடநிறுத்தியுன்றன் உயர்நினைவதனைதாக்கி
அழுங்குபோலிருந்துநோக்கில் அலியருள்ஞானமெல்லாம்
விழங்குமேவெளிச்சமாக விரித்திதையறிந்துகொள்வீர். 106

கொள்ளுவீராகில்மேலாம் குதுறத்தையறமும்ஞானம்
அள்ளலாம்ஒளலியாக்கள் அணிதனிற்கூடினின்று
கொள்ளலாம்காட்சிஎல்லாம் குருவருளுதவியாலே
தொள்ளலாப்துல்துமேலறி துணிப்புடன்செல்லலாமே. 107

செல்லலாம்மலக்கூத்தென்ற சிறப்புள்ளமைதான்தன்னில்
வெல்லுநல்மிஃறுஜெகி வீறுடன்பவனிசென்று
மெல்லவேமக்ஸூதென்னும் மேன்மையை அடைந்துகொண்டு
நல்லவேசெல்வம்பெற்று நலமுடன்வாழலாமே 108

செல்வமாம்அவ்வல்ஆகிர் சேர்ந்திடும்ளாஹிற்பாத்தின்
நல்விதமறிந்தீர்பங்காய் நாமவைகளைப்பிரித்தே
கல்வியைக்கருதிஹக்கன் ஹுலுறத்தால்உஜூதைக்கண்டு
செல்வமாய்வாழ்வதர்க்காய் சுஜூதினைச்சூட்டுவாமே. 109

ஷூட்டும்இல்முல்யெகீனில் சொகுசுடனிருந்துகொண்டால்
நாட்டம்ஐநுல்யெகீனில் நலமுடன்ஹாவிலாகும்
காட்டும்ஹக்குல்யெகீனை கமாலுல்யெகீனிலாக்கும்
தேட்டமாயதனைக்கொண்டே சிறப்பினைதேடுவீரே. 110

## வேறு.

சிறப்புற்றோங்கும் நல்இஸ்லாம்தன்னில்
சிறந்தபறுலுபத்தையுமேகேளும்
நிறப்பமாம்கலிமாஷஹாதா
நிஷமாய்க்கலப்பற்றுச் சொல்லுவதும்
மறப்பில்லாமலேயதனையுண்மை
மனதிர்க்கொள்வதும்றசூலுல்லாவின்
குறிப்பாகியசுன்னத்தினைத்தொடர்ந்து
கூடியேநடந்திடுவதுமே. 111

இன்னும் இஸ்லாத்தில் செவ்வையுடன்
இருப்பதுடன்யீமான் இன்பமதை
தன்னிலனுபவித்திடுவதுவும்
தனியோன் ஷஹாதத்தை மொழிவதுவும்
மன்னும் தொழுகையையிறுப்பதுவும்
மணமாய் ஸக்காத்தினைக் கொடுப்பதுவும்
பன்னும் நோம்புடன் ஹஜ்ஜுமிவை
பத்துமிஸ்லாத்தில் பறுலாகுமே. 112.

யீமான் தனினுள்ளபற்றுகளாம்
இருபத்தஞ்சையும் இயம்பக்கேளும்
சீமானிறை உஜூதெனுமுள்ளமை
சிறந்தகிதம் பூர்வபகாதரிப்பு
கோமானொன்றுக்கு மொவ்வாமையும்
கூறும் நிலைபாடும் ஒருமையுடன்
நீமானே இவை இறைதனக்கு
இடமாய்யுண்டுமென் றறிவதுவும் 113

இன்னும் சிவனோடறிவு நாட்டம்
இணங்கும் தத்துவம் கேள்விபஸற்
என்னும் பார்வையும் கலாமும் தானும்
இறையோன்றனக் குண்டென்றறிந்துமவன்
பன்னும் ஹைஹுலிம் முரீதுகாதிர்
பகரும்ஸமீஉ பஸீருடனே
உன்னும் முதக்கல்லிம் மெனும் வஸ்பை
உடயோனென்றுமே யறிவதுவும் 114

மலக்குகளைக்கொண்டும் உண்மையான
வேதங்களைக்கொண்டும் நீதுகளை
விலக்கியீடேற்றும் றசூல்களெனும்
வேந்தர்களைக்கொண்டும் கியாமமெனும்
கலக்கமாகிய நாளைக்கொண்டும்
கைறுஷர்றானகதுறைக்கொண்டும்
துலக்கமாயீமான் கொள்வதுவும்
துலங்கும் யீமானில் பறுலாகுமே. 115

உறக்கிமுளிக்கிற இடந்தனிலே
உற்றபற்ளஞ்சின்வி வரங்கேளும்
திறங்கொள்புடவை கொண்டவுறத்தினை
இருந்த மறைப்பத்துமப்புடவை
பிறங்கியேதுயிதாயிருப்பதுவும்
பின்னும் தண்ணீரைத் தேடுவதும்
நிறங்கொண்டது துயிதாயிருப்பதுவும்
நிலைத்த நஜீசினைக்கழுகலுமே. 116

உழுவிற்றுலங்கிடும் பற்ளாறயும்
அறைகிறேன் நன்றாயுவந்துகேளும்
வனுவாய்நிய்யத்து செய்துகொண்டு
முகமும் இருகையும் கழுகுவதும்
தலயின் மஸ்ஹூடன் கறண்டைமட்டும்
திறமாயிருகாலும் கழுகுவதும்
நலமாய்தற்தீபாய் நடத்துவதும்
நவிலும் உழுவினில் பற்ளாகுமே. 117

துய்யதொழுகைக்கு முன்பதாக
துலங்கும் பற்ளஞ்சும் செப்பக்கேளும்
உய்யும் வக்தினை யறிகுவதும்
உடயோன் கிப்லாவையறிகுவதும்
அய்யமாகிய ஔறத்ததை
அதபாய்மறைப்பதும் புடவைதலம்
துய்யதாகவே யிருப்பதுவும்
துய்யோன்றனை நின்று தொழுதலுமே. 118

வெர்ழுதான் முறிந்திடும் இடத்திலஞ்சு
உண்மை பற்ளினை யுவந்துகேளும்
சொல்லுமுனும்பினு முறுந்துவாரம்
தன்னில்னின்றேதும் புறப்படலும்
கொலுவாம் அகல்நீங்கல் உறக்கமபம்
கூறும் அகங்கையாற்றொடலுமாண்பெண்
வனுவாம் சரீரங்கடிரையில்லாமல்
மன்னிச்சந்தித்தலிவை அஞ்சுமே 119

அஞ்சி இவைகளைப் பேணுவது
அடுத்த பற்ளாகும் எவர்மீதிலும்
தஞ்சமாம் நாலுறக் அத்துள்ள
தொழுகைதனில் பற்ளறுபத்தெட்டும்
வஞ்சமறவேதானுரைக்கிறேன்
மகிழ்ந்தன் பாகவேகேட்டுநீங்கள்
நெஞ்சிறுநுருக்கமாய் நெடியவனை
நேமமாகவே தொழுகுவீரே. 120.

முந்நிய்யத்தும் தக்பீறதும்
மேவும் நிலையுடன் பாத்திஹாவும்
விந்தைறுகூஅதுமதின் தரிப்பும்
மீழும் நிலையதும அதின் தரிப்பும்
சொந்தசுஜூததும் அதின் தரிப்பும்
செப்பும் நடுஇருப்பதற்றரிப்பும்
பிந்திமேயாண்டாம் சுஜூததுவும்
பின்னும் அதிலேதான் தரிப்பதுமே. 121.

இந்தசுஜூதுனின்றெழும்புவதும்
இனிதாய் நிலயினில் நிற்பதுவும்
அந்தமுறுமிவை பதினாறுமே
ஆனபற்ளுமுன்றக் அத்திலே
கந்து முறமற்றமுன்றிலயும்
கருதும் நிய்யத்தும் தக்பீறதும்
சந்தமுடன் நீக்கிப்பார்க்குங்காலை
தரித்த பற்ளம்பத்தெட்டாயின. 122.

பத்துபற்ளினில் தஷஹ்ஹுதுலே
பகருமிருமூன்றருகுன்களுண்டும்
அத்தஹிய்யாத்தும் நபிபேரிலும்
அழகாம் முஃமின்கள்தம் பேரிலும்
சுத்தமுடனோதும் இருஸலாமும்
சுகிர்த ஸலிமத்து தெஹறதந்தைனும்
உத்தஸலவாத்தும் தஷஹ்ஹுதுவும்
அவற்றின் இருப்புடன் சலாம்ஒழுங்கே. 123.

கூறுமிவ்வண்ணம் கணக்குப்பார்த்து
குறித்தசுப்ஹிருறக்அத்திலும்
தேறும்முப்பது பற்லுடனே
சேரும்தஷஹ்ஹூதின் பற்லுபத்தும்
ஊறும்மஃரிபின் மூன்றினிலும்
நுவலும் நாற்பத்திரா லுடனே
வீறுய்தஷஹ்ஹூதின் பத்தும்சேர்ந்தால்
விரித்தபைத்தஞ்சும் நாலுமாமே. 124.

ஆகஇருநூற்றுதொன்றுதெட்டு
அழகாம் பற்ளாந்து தொழுகைக்குமே
வகா இவைகளை யெடுத்துரைத்தார்
வரிசைகொஸ்ஸாலி இமாமவர்கள்
மோகமாகவே அமலில்மூங்கி
மோட்சந்தனைத்தேடும் முஸ்லீம்களே
பேகந்தொழுகையை பாத்திலாக்கும்
இடயூறு முப்பத்தொன்பதாமே. 125.

பேஷல்சிரித்தலும் மிகுசியலும்
பேணும் ஹததுடன் அகல்நீங்கலும்
மோஷமாகிய நித்திரயும்
மேவும்தகர்து புற்தனைத்தொடலும்
தோஷமாகவே பெண்ணுண்களின்
சரீரம்மற்றதை சேருதலும்
வாசநிய்யத்தை பேதித்தலும்
முறிக்கும் கருமத்தை கருதலுமே. 126

இன்னும் கிப்லாவை திரும்புதலும்
இலங்கும் ஜும்ஆவை அஸறுக்கில்
உன்னிலொஹூருக தொழுகுதலும்
உமது ஔறத்து வெளிப்படலும்
பன்னும் சலஸலில் பவுல்சுகமாய்மறு
படியும் தொழுகையில் கண்டிடிலும்
மின்னுளி ஸ்திஹாளாவதுதான்
விலகியற்றற்று விடுதலுமே 127

தலையை வெள்ளாட்டி இறந்துதொழும்
தருணமுரிமை சீட்டதை பெறலும்
துலைக்கும் சபறினில் கஸ்ருடயோன்
சுகமாய் இகாமத்தைக் கருதிடலும்
நிலத்தகுப்பின்மேல் மஸ்ஹுச்செய்வோன்
நேராய் கழுகயில் வெளிகாணலும்
மலைவில்லாமலே மஸ்ஹதுவின்
முத்தத்தெனும் காலம்செல்தலுமே. 128

அணியாமிமாமின்ரண்டிறக் அத்தின்முன்
அமைந்தே யிருத்தாலும் தொழுகையதின்
மணியாம் பற்லுகள் தனியொன்றினை
மாறாய் விடுதலும் மங்கை பின்னால்
துணிப்பாயாண்பிள்ளை தொழலுங்கெட்ட
துரோககஸாருக்கள் பின்றொளலும்
இணைச்சேர் குன்தாக்கள் பின்றொளலும்
இஸ்லாம்தனை விட்டுமாறலுமே. 129

தொழுவோன் சரீரத்தில் புடவயினில்
சாரும் நஜீசினில் தரிபடலும்
அழுகாமிமாமினைப் பிரிந்தவெண்ணம்
அகத்திற்றோணலும் நின்றுகொண்டு
தொழுவதேலுமா யிருக்கயிலே
தரிப்பிலிருந்துக் கொண்டேதொழலும்
பழுதாம் சத்திதான எடுக்குதலும்
பாயும்குருதிதான் தோன்றலுமே. 130

உண்ணல் குடித்தல் பேசலும்தர்தீ
பதனைவிடுதலும் நஜீஸதான
தண்ணீராலுழூச் செய்தோமென்று
ஷக்கில்லாமலே யறியுதலும்
மண்ணால் தயம்மமதினைச் செய்தபின்
மனதில் ஜலமுண்டென் றறியுதலும்
நண்ணும் புடவயற்றே தொழுவோன்
நலமாய தனையே கான்றலுமே. 131

இப்போதுரைத்திட்ட வகைகளெல்லாம்
ஈமான் இஸ்லாத்தோடணித் தொழுகை
செப்புமிவைகளை தொழுகிற்கும்
இயல்சேர் பற்லாகுமினி இவ்வற்றை
யொப்பஇருக்கின்ற வேறதான
ஒளிவாம் பற்லுகளிருபத்தஞ்சும்
தப்பாதுரைக்கிறேன் எக்காலமும்
தயவாயிருப்பீர்கள் முஸ்லீம்களே. 132

அல்லாகுத்தஆலா நம்மனோரை
அழகாய் இஸ்லாத்தில் நேர்காட்டிய
வல்லநிஃமத்துக்காகஷுக்று
வன்மையாகவே நாம்செய்தலும்
நல்லான்ரிஸ்கினை தருவானென்று
நல்லவிஷுவாஷம் வைக்குதலும்
பொல்லாஹறாமான உடமை நீக்கி
புகழும் ஹலாலினை தேடலுமே. 133

நல்லஹலாலான ஒஜீபனத்தை
நாடியருந்தலும் நலவைக்கொண்டு
எல்லோர் தமயுமேயே வித்தீமை
இகழும்படியேவல் புரிந்திடலும்
பொல்லாதஷய்தானுக் கிடங்கொடாமல்
பேர்செய்தலும் உண்மை பேஷுதலும்
கொல்லும் கோபத்தும் பரிகாஷமும்
கொடுமையாகென்றே நீக்கலுமே. 134

பேணும் முஸ்லிம் மேல்நல்லெண்ணம்
பெலமாய் வைத்தலும் முஸ்லீம்களில்
தோணும் ஐபுகளாயாமலே
தூய்தாய்மிருத்தலும் கொடும் பெயரை
யூணியொருவரைக் கூப்பிடாமல்
உவந்தபேர் சொல்லி கூப்பிடலும்
வீணும்ஹறாமினை பாராமலே
விழிகள்ரண்டையும் பேணலுமே. 135

கள்ளசத்தியம் செய்யாமையும்
 கெட்டவீண் பேச்சுபேஷாமையும்
உள்ளபொருளன்றி பிறர்தமக்கே
 புரித்தாம்பொருடனை யெடுக்காமயும்
தள்ளும் பேச்சதை காதுதனில்
 தாள்த்ரிகவனமாய் கேளாமயும்
விள்ளும் விலக்கான இடங்களுக்கு
 விரும்பி போகாமலிருத்தலுமே. 136

அல்லாபக்கலில் பரஞ்சாட்டலும்
 அவனின் கலாவினை பொருத்துதலும்
வெல்லும் அமலினை கலப்பாலாய்
 மேவிச்செய்தலும் ஹதீதின்படி
யல்லாதொன்றயும் செய்யாமயும்
 அனியாயத்திர்க்காயுதவுதலும்
நல்லவணக்கமாம் அமல்செய்தலும்
 நாளும்மறுமயை நினைத்தலுமே. 137

சிறப்புற்றோங்கிய முஸ்லீம்களே
 செப்பும் நானூற்றுபதினெட்டையும்
இறப்பும் பிறப்புமில்லான்றனக்காய்
 இரவும்பகலுமே பழுதாக்காமல்
பொறுப்பாயுரைப்பீரேல் சுவனவாழ்வும்
 பெரியோன்நிஃமத்தும் றஹ்மத்தும்
குறிப்பாய்க்கிடைக்குமென்றே நிஷமாய்க்
 குருவாம் முஹம்மது நபியோதினர். 138

ஆதியிடத்திலே முஹம்மதென்ற
 அழகுவெழியாகியதின்பிறகு
ஓதுமண் தண்ணீர் தேயுவாயு
 உடயோன்குத்றத்தால் வெளியாக்கியே
நீதர்ஆதமின் குகையில்னின்றும்
 நீதிசிரசினில் ஒழிவைவைத்தான்
யேதுமணுகாத கொப்பூளிலே
 இறையோன் அழகியகாற்றைவைத்தான் 139

மண்ணின்வீடுதான் பல்குத்தியாம்
வாசல்வாயாகும் அதர்க்கிராஜா
அண்ணல்ஜிப்ரீலாம் அறிந்திதனை
அன்பாய்மனதினிற் றரித்தபின்பு
தண்ணீரதின்பங்கை கேளுமூனை
சளித்துன் மூத்திரத்தோடுவேர்வை
கண்ணீரொடுரெத்தம் உமிள்நீரிவை
குறித்ததண்ணீரின் பங்காமென்றார் 140

நாவிற்றண்ணீரை நலமாய்வைத்தான்
நலமாம்விலாவினில் மண்ணைவைத்தான்
தாவும்வயிற்றினிற் றீயைவைத்தான்
சரியாஇவற்றினின் றெவ்வொன்றுக்கும்
மேவும்பங் கேழுண்டவைகளிலே
மண்ணின்பங்கது நரம்பெலும்பு
சீவுமுடித்தொலிஷ ஷையுடனே
சௌவ்வு நரையீரலிவையேழுமே 141

கண்ணுமதன்வீடு வாசலது
கரியவீரில் மன்மீக்காயிலாம்
நண்ணுவாயுவின் பங்கைகேளும்
நடுக்கல்நடை சிரிப்புடன்கனைப்பு
புண்ணும்வியாகூலம் நினைப்புடனே
புத்தியிவை யேழாம்வீடதுதான்
எண்ணு நுரையீரல் வாசல்நாஷி
ஏந்தல்இஸ்ரா பீல்மலக்காகுமே 142

தீயின்பங்கது ஷோம்பல்பஷி
தாகம்வறட்சியோ டெரியுங்கோமம்
தேயுமுறக்கமு மிச்சயுமாம்
தரித்தவீடுதான் பித்தமதுவாம்
ஆயுமதின்வாஷல் காதெனவும்
அண்ணல்இஸ்றுயீல் மன்னெனவும்
தூயபெரியோர்களெ டுத்துச்சொன்ன
சூட்சமிதை நன்றாயறிவீர்களே 143

இன்சானெனும் மரம்ஜர்ஹூத்துவாம்
இதிலேவித்தது பாலூத்துவாம்
மின்சேர்மூடது ஹாஹூத்துவாம்
மீட்டும்கொப்பது லாஹூத்துவாம்
பிஞ்சாற்றிலயது ஜபறூத்துவாம்
பகரும்பூவதுமலக் கூத்துவாம்
இன்சானெனும் மரக்கனியானது
இயம்பும்நாஸூத்தேயாகுமென்றார் 144

என்றுமிவைகளை நீரறிந்து
யேகபெரியோனை தொழுமுறையும்
நன்றாயறிந்து நீரகந் தெளிந்தால்
நல்லமுஹம்மதி நருள்பெறுவீர்
வென்றிஉலமாக்கள் இமாம்களெல்லாம்
விரிவாயுரைத்திடும் இம்முறையை
ஒன்றுமறியாதான் மனமுவந்து
உலகமறியவே கூறினனே 145

கூறும்விஷேளங்கேள் பலனுலயும்
குறிப்பாயறியாமல் செய்யும்செயல்
தேறும் மௌத்துக்குச் சரிவராது
சீவன்மிகநொந்து பயப்படுங்காண்
வேறுபடுமிந்த செயல்களெல்லாம்
விசனப்படுவதற் கிடமதாகும்
சீறும் நரகினுக்காளாகாமல்
சிறப்பாய் அமல்செய்யல் நன்றாகுமே. 146

ஆகும்மனுஷர்கா ணீங்களெல்லாம்
அழகாம் அமலினைப்பிடித்துக்கொண்டால்
வாகுபெறு மெங்களிறசூலுல்லா
வரிசைஷபா அத்தின்பொருட்டினாலே
யேகபெரியோனின் கிருபைகொண்டு
இலங்கும் சொர்க்கத்திலூழிகாலம்
சாகாதிருப்பீர்கள் சுகமுடனே
சொகுஷாய் நிஃமத்தைப் பெறுவீர்களே 147

கெட்டசெயலெல்லாம் விட்டுநீங்கி
கிருபைகலிமாவை தொட்டுநின்று
கிட்டும்ஷஹா அதினை இடைவிடாமல்
கருதிஇரவெல்லாம் முளித்திருந்து
நட்டப்படுத்திடும் ஷெய்த்தான் றன்னை
நாடஒட்டாமல் கலிமாக்கொண்டு
கெட்டியாகவேப் பிலத்திருந்து
கிருபைகிப்லாவை நோக்குவீரே. 148

நோக்கும் கிப்லாதான் கல்பதாகும்
நுணுக்கம் வெளியாகும் தலைமுமாகும்
ஊக்கமுடன் ஷெய்கின் சூட்சமதை
உரமாய்ப் பிடித்ததின் பிரகாரமே
தாக்கிப்பார்க்கநற் புதுமை எல்லாம்
தானே வெளியாகும் கலிமாவினால்
ஆக்கும் வித்தையாமிதை யிழந்தால்
அஹதை மறந்தோரிற்சேருவீரே. 149

குதுறத்தாகிய குல்ஹுவல்லா
கூறும் சிற்றெல்லால் கல்பிலாக்கி
சித்றத்துல் முந்தஹா இடத்திற்ச்
சேரக்கூடிய அமலைத்தேடி
பத்றுத்தோத்தமா மொழிவைக்கண்டுப்
பலன்பெற்றோங்கவே பழகிமனம்
செதறிதவிக்காமல் ஷஹாததிலே
சிக்கிக்கிடப்பது ஷிறப்புத்தானே. 150

தானுஇருந்திடில் தம்முண்டாகும்
தரித்தஅஷிபதும் தோற்றமாகும்
நீனுஇருந்திடில் ஷெய்த்தான் தோணும்
நிஷமாயொன்றுமே துலங்கிடாது
ஆனால் அஹமதை அஸ்லதாக்கி
அனைத்துமானபின் ஆங்கிருக்கு
தீனோர்களைத் திருத்தமாக்கி
திருந்தும் வழியினிலாக்கியதே. 151

வழியில்நடப்பதே வேதவிதி
வழக்கமறிவதே போதமாகும்
கழிவாம்தீமையைப் போக்கிவிட்டு
கருத்தாயிருந்திடில் வருத்தம்நீங்கி
சுழியாமுனையினில் சுகூனைக்கண்டு
சும்மாஇருந்துநீ சுகம்பெற்றுக்கால்
அழியாவாழ்வையும் நிஃமத்தையும்
ஆண்டோனிடம் பெற்றன்பாயிருப்பாய். 152

வித்தாயிருப்பது விருக்ஷந்தேடும்
விருக்ஷமானது வித்தைத்தேடும்
வித்தும் விருக்ஷமும் ஒன்றேயல்லால்
விகர்ப்பமதிலில்லை விளங்குவோர்க்கு
சுத்தமாகிய சுஜூதைக்கொண்டு
சும்மா இருந்தாக்கால் நன்மைதோணும்
கத்தனறுடோணும் காட்சிதோணும்
ஹக்கும்கல்கும் ஒன்றுகும்பாரே. 153

பாரதுன்யாவின் மயக்கம்விட்டு
பகீரின் கோலமாயிருக்கவேணும்
தாரும்தாருமென் றிற சூற்றம்மை
தன்மைபாரூட்டத் திடமும்வேணும்
நேர்மையிருந்தாக்கால் ஸலாத்துவேணும்
நல்லமனம்வேணும் ஷரீஅத்திலே
ஆராய்ந்திவைகளை யறிந்துணர்ந்து
அணுவும்பிஷகாமல் சரீகிர்ப்பாயே. 154

சரியாய்நிர்க்கவே ஸபுருவேணும்
சங்கை ஷஹாதத்திற்றரிக்கவேணும்
பெரியஉலகத்தின் காட்சியெல்லாம்
பகரும்கனவென்றே கருதவேணும்
அரியபெரியோர்கள் பின்றொடர்ந்து
அரிவைபடித்தமல்ச் செய்யவேணும்
உரியபொருளி தன்றறிந்துணர்ந்தால்
உற்றபெரியோரிர்ச் சேருவாயே 155

கத்தனிறசூலின் பறக்கத்தாலும்
கருதும்நியத்தின் பொருட்டினாலும்
பத்தியுடன் நன்றாயிருந்துக்கொண்டு
படைத்தோன் தனைக்காண பிரிஷமுற்றால்
சித்துத்துலங்கவே சிற்றினைப்பார்
ஜிகத்திணைசையை ஷற்றதாய்ப்பார்
முத்துத்துலங்கவே முன்பினிற்பார்
முஸ்தபாவள்ளலிடம் சேருவாய். 156

பத்திஇதனைநீ விட்டிடாதே
பெலமாய்கல்பினைத் தரிபடுத்தி
புத்தியாகவே இஸ்லாம்தன்னில்
புகலும்வரம்பினைக் கடந்திடாதே
செத்தேபோகுமுன் ஆகிறத்தில்
சேமமுறும்படி நன்மைகளை
கத்தோன்றனைத் தேடிக்கல்பினாலே
கருதியலகாலும் தேடுவாயே. 157

செத்தமையித்து போலிருந்து
ஷிறுக்குவாரமல்ப் பேணவேணும்
சத்தன்குறானிலே சொன்னபடி
கருத்தாய் நாவினைக்காக்கவேணும்
சுத்தபெரியோர்கள் புறமால்ச்சென்று
துய்யசெயர்க்களைப்படிக்க வேணும்
தத்தம்மனதினால்கல் கைஹக்கில்
தரிப்பித்திடும் நல்லவகையிதாமே. 158

காட்சிபெறுமெண்ணம் கல்பினுள்ளே
கடுகும்பிஷகாம லிருக்கவேணும்
ஷம்ட்ச உஸ்தாதை அணுகிநின்று
ஷாஹறதின் பலவகையறியவேணும்
தாட்சிளவர்க்குமேச் செய்யவேணும்
தயவாய்பறுலெல்லா மிறக்கவேணும்
மோட்சமுஷா ஹதா தனிலிருந்து
மொளிபொணுவின்பம் பெறவேணுமே. 159

யேற்றும்அஹதென்ற ஹுற்புமென்று
இதனில்அஹ்மது வந்தவாறும்
போற்றுவஹ்தத் தினட்ச்சாத்தில்
புகழும்முஹம்மது பிறந்தவாறும்
தேற்றும்வாஹி திய்யத்திலே
சிறந்தஆதமி பெழுந்தவாறும்
ஆற்றும்பீரான ஷேய்கிடத்தில்
அதபாய்க்கேட்டகங் கழித்தல்நன்றே. 160

ஆலமறுவாஹின் கோலங்களும்
அதனில்மிதால் வந்தபெருமைகளும்
கோலம்அஜ்ஸாமும்இன்ஸானுமே
குதுறத்தால்வந்த விவரங்களும்
சாலவும்நன்றாய் வகையுடனே
சரியாயறிந்திட கருதுவீரேல்
மாலாய்க்குருபத மிறைஞ்சியின்று
மனமாயறிவது விதியாகுமே. 161

கேளும்முதல்கா யிருந்ததுதான்
இருபைவிபத்தாகி வஹ்தத்தாகி
மீளவும்அந்த வஹ்தத்திலே
மேன்மை அஹ்மதுதானுமாகி
வாழும்வாஹி திய்யத்ததாகி
வடிவாம்ஆதமி தானுமாகி
தாழும்அர்வா ஹுமானபின்பு
சாற்றும்முஜய்யதாய் வெளியானதே. 162

நீங்களறியுங்கால் முத்தலக்கும்
நிஷமாய்முகய்யது மான இன்ஸான்
பாங்காய்முகய்யதை நிழல்போலவும்
பகலும்முதலகை உடையான்போலும்
ஓங்கியொலித்தோடும் ஜலம்போலவும்
ஓதுங்கும்நுரைபோலும் அறிந்தபின்னர்
தூங்காமற்றூங்கி சுகம்பெறவே
துணிந்துமுபல்வது கடனாகுமே 163

பூணும் அறிவது இன்ஸான்குணம்
பொல்லா அறிவது ஹைவான்குண
வினையடுப்பது ஷெய்த்தான்குணம்
மாய்கையானது விந்தின்குணம்
காணும்தாட்சியே மண்ணின்குணம்
குதுறத்தாவது சிற்றின்குணம்
தோணும்வஸ்தெல்லாம் படைத்தாள்கிற
தூய்யோன்றனையஞ்சி வணங்குவீரே. 164

(கலிச்சந்த விருத்தம்.)

வணக்கமெடுத்தவர் வல்லபம்பெற்றவர்
வஞ்சகம்போக்கினவர்
இணக்கம்இன்ஸான் குணம் எட்டிப்பிடித்தவர்
எங்களுடப்பிறந்தார்
கணிக்கும்பறுலுகளொன்றும் விடாதவர்
ஹக்குநபிஉம்மத்தில்
பிணக்கமில்லாமல் நடந்தபெரியவர்
பின்செல்லத்தக்கவரே. 165

தக்கபுகளுக்குரிய நம்மாண்டகை
செங்கமல பதத்தார்
மிக்கநலமுடனே மிஃறாஜினில்
மேன்மைகள் பெற்றவராம்
ஹக்கனருள்பெருமான்பிள்ளை சிங்கம்
அஹ்மது வெம்பிறசூல்
மக்கப்பதியில் அரஷியல்செய்தனன்
முன்முஸ்தபா நபியே. 166

யாநபியே யாமுஹம்மதுவே எங்கள்
யாமுஸ்தபா நபியே
கோன்நபியே நும்பதமல ரெஞ்சிரம்
கொள்வேன் எழியவனின்
ஆனபிழைகளெல்லாமகன்றோட
அன்புமிகப்புரிந்தே
ஈனப்பயலெனவே இகழாமல்
இரங்கி கிருபைசெய்வீர். 167

யாசினே தாசீமே யார்க்குமிரங்கிய
யாகொபூருற்றஹீமே
காசிமேஹல்றதல்குது சினிலுற்றிடும்
ஹக்கன் மஹபூபே
வரஷிமுனயிலமுகாயிலங்கிய
வான்மதியே நிதியே
நேசம்வைத்தே இந்ததாசனையாண்டிட
நேரருள் செய்வீரே. 168

வேறு,

மேலாம்இன்சாளின் ஸஹிறத்தது
மேன்மைறஹ்மானின் ஸஹிறத்தாகும்
கோலமாய் இன்சானுவதர்க்கு
கூறும்ஆண்பெண்ணும் றாஹமேனும்
மேலும்மூன்றும் றாஹகல்பு
விள்ளும் நப்சென்றும் றாஹதுவே
மேலோநவப்னென்றுல் கல்பாணென்றும்
விள்ளும்நப்சது பெண்ணுமென்றார் 169
ஆண்கள் ஆண்டவன்றனைப்பயந்து
அன்பாய்வணக்கங்களி யற்றுமாய்போல்
நாணும்பெண்களும் பளுதில்லாமல்
நல்லோன்வணக்கத்தைப் பூணவேணும்
காணும்வஸ்தெல்லாம்குதாயுடைய
கனமாம்மள்ஹரல்லாதிலென
தோணும்படிகல் பில்தரிபடுத்தி
தன்னையறிவது தகுமாகுமே 170
தகுமாம்றாஹது எப்போதுமே
தனியோன்றனை நன்றாய்முடுகிநிற்கும்
அகமாம்கல்பதும் அப்படியே
யன்பாய்முடுகுதர்க்கே முயலும்
பஹமோ இவைகளை நங்குணர்ந்து
பலனைப்பெறுவீரேல் மருமைதனில்
சுகமாய் ஹாமீமுஹம்மதுவின்
சிறந்தகூட்டத்தி லாகுவீரே. 171

ஹாமீமெனும்பொருள் அஹதாகிய
ஹாதியாய்வந்த அஹ்மதுவாம்
சேமனிலயினைக் காட்டிவிக்கும்
திரத்த ஆண்பிள்ளை சிங்கமதாம்
கோமான் அறுஷினில் பாதமணி
கபுசோடேறிய காரணராம்
சீமானவர்களின் உபயதாளைச்
சிறமேர்கொண்ட பின்றனையறிவாய். 172

றப்பைதரிஷிக்கும் பேர்களுக்கு
ராஜாநபிமுஹம்மது கலிமா
ஹாப்பாயதிலுறும் ஹற்புரண்டும்
கூறும்தாத்துமே ஸிபத்துமாகும்
தப்பொன்றணுகாமல் தன்னைக்காத்து
தனியோனருளினைத் தாபரமாய்
செப்பமுடன்கல்பில் தரித்துக்கொண்டால்
சிறப்பாய் அஹதினில்ச் சேரலாமே. 173

அல்லாஹுத்த ஆலாதனையறிந்து
அவனுக்கியற்றிடும் வணக்கமதை
சொல்லாலுளத்தினார்ச் செயலினாலே
சகலநேரமும் இடைவிடாமல்
பொல்லாவிப்லீசின்பேரைநீக்கி
பேணிஹுப்புடன் நடத்திவந்தால்
நல்லார் கூட்டத்திலாகினாளை
நரைசேர் சுவனத்திலாகுவீரே 174

ஆகும்அல்ஹம்தின் சிற்றைக்கேளும்
அலிபுமண்ணுடன் ஷரீஅத்துமாம்
வாகுபெற நல்லலாமானது
வண்மை தண்ணீரும் தரீகத்துமாம்
மோகமுறுகின்ற ஹேயானது
வரிசைவாயுடன் ஹகீகத்துமாம்
வேகமாகிய தாலானது
வீறும்தீயுடன் மஃரிபத்தாம் 175

கலிமாப்பொருளினை கருத்துடனும்
கவனத்துடனேயும் கருதிக்கேளும்
வலியநாயன் அல்லாஹ்வொழிய
வணங்கற்குரியவன் யாருமில்லை
சலிப்பும் பிறப்புமேயிறப்புமில்லான்
சமதாய்சர்வமும் தானானவன்
கலிகுளசல யோடாகாயமும்
காணும் வஸ்தெல்லாம் படைத்தவனே 176
கூறுங்கலிமாவின் லாமண்ணுக்கும்
குறித்தஇலாஹா தான் ஜலமதாகும்
தேறும்இல்லாதான் வாயுவாகும்
தெளிந்தஅல்லாதான் தேயுவாகும்
நூறும்ஹூவதா காயமாகும்
நுணுக்கமாகிய விவ்விவரம்
மாறலில்லாம்லுணர்ந்தறிந்து
மகிழ்ச்சியாய் அமல்செய்குவீரே. 177
ஒன்றும்பொருளான அல்லாஹ்வில்
உற்றஹற்பது ஹூவாகுமே
குன்றுபொருளின மடங்கலையும்
கூட்டிச்சுருட்டியே நிற்குமதை
நன்றாய்ப்பீரிடம் சென்றுகேட்டு
நாடும்சூட்சமு மறிந்துகொண்டால்
என்றுமழியாதப் பெரியவாழ்வை
இறையோனுனக்கருள் புரிந்திடுவான் 178

(கலிச்சந்த விருத்தம்)

அறிந்துவிளங்கிய வைம்பத்தொன்றான
வழகிய வட்சரத்தில்
பிறந்திடிரண்டு ஹற்பதுவந்த
புதுமைதனைக் கேட்டு
திறந்திடுநற்றி ஷயொக்கயும்பேணி
சிறப்புறு பொற்குருவின்
திறந்தருசூட்சி யினின்றிடுவீரேல்
சிறந்தபலன் தருமே. 179

நீந்திடும்வேதியர் முந்தவேசொன்ன
தரிப்பிடம் நீயறிந்து
முந்திடசிந்தையில் வந்திடும்நற்பொருள்
முச்சுடராட் சாத்தை
சிந்திடநெஞ்சினிலே ஷிறுக்கோடிட
ஷெய்கின் நிலைப்படிநில்
வெந்திடும் வென்னரக்காங்கும்செயல்களை
விட்டுப் பிரிந்துகொண்டே 180

விட்டுப்பிரிந்திடு கிட்டமுடுகாமல்
வீண் அமல் தோஷிகளை
தொட்டுப்பிடித்திடு கட்டி அணைத்திடு
தூதர் நபிஷறஅய்
ஷ ஈட்டித்தலைசெய வெட்டிமுறித்திடும்
சூமன்கெடுதி செய்வசன்
மட்டிப்பயலை மிரட்டியேயோட்டும்
மருந்து முஹம்மதுவாம் 181

ாமலராகிய மக்கமுஹம்மதை
மன்னிய பார்வைசெய்தால்
பூமலராகவணங்கும் சுஜூதினில்
பூறண மெய்ப்பொருளில்
ஊறுமலர்வாசம் கருதியேயுண்டு
குலாவிய வண்டதுபோல்
தேமலர்பொங்கும் திருக்குசுளியினில்
தேனமு துண்டிடலாம். 182

உண்டுகழிக்கவும் ஓர்மைமிகுக்கும்
ஒழுங்கு படித்திடவும்
கண்டுகளித்திடும் ஹக்கைதுயர்ந்திடும்
காறண மெத்திடவும்
விண்டுவிளங்கிடும் விண்மணிவீஷிடும்
வேதவிலாஷமதை
நண்டுசெய்காதமே நல்லருள்செய்குவீர்
நன்முகியித்தீனே. 183

தீனருள்பொங்கும் திருக்கஃபாவினுள்
திக்றுமுழங்கிடவே
கோனைப்பிடித்து ஷாவளிவட்டமானதில்
கோனருள் பெற்றிடவும்
கானகமீதிர் குலாவியுலாவியே
கைக்கடங்காத செழும்
மானைப்பிடித்து மகிழ்ந்திடவும் அருள்
வீர்முஹ்றயியதீனே. 184

மங்காமலெங்குமே நல்லொளிவீஷிய
மாமதியே மணியே
தங்காமலெங்கும் தரித்தரஷாண்டிடும்
சற்குருவே நிதியே
சிங்காரமானச்சிறுமணி வாஷலில்
செப்பமுடன் றோன்றி
தங்கியருள்புரிந்தே சுகம்தந்திடும்
சம்முஹியிதீனே. 185

ஆண்டிடும்அட்சரங் கொண்டேயத்தின்வழி
அன்புகொண்டே புகழ்ந்து
பூண்டிடுமுன்மனதானதை எழுப்பி
புலன்களெல்லாம் ஒடுக்கி
ஆண்டவதன்றியனைத்தையும் போக்கி
அடங்காதமௌனமுற்று
மாண்டவர்போன்மனம் அற்றறுளுற்றிடில்
மஃஷூபிதுகிட்டிடுமே. 186

கிட்டிடும்வல்லபம் வள்ளல்நபிவழி
கண்டிடில் மஹ்ஷறிலே
கட்டப்படுத்திடும் வேதனைக்கஞ்சியே
கல்பதனைபேணி
துட்டதனங்களை நீக்கி அமல்களை
தூய்மையுடன் புரிந்தால்
நட்டப்படாமலே நாளைகியாமத்தில்
நண்ணிடுமே சுகமே. 187

சகமருநன்னபிதம் மொளிவாலிறை
தூய்றசூல் மார்கள்
மிகுலகூத்திருப்த்திஞலாயிரம் மெ ன
வீண்டிடு நபிமார்கள்
தகுமுறுகுத்பொலிமார்கள் அவ்தாதுகள்
சங்கைமுஸ்லீம்கள்
சிகுமுறுக்காபிற் முதலியயாவையும்
செவ்வையுடன் படைத்தான். 188

அற்ஷம்குற்ஸு அவற்றிலிலங்கும்
அனேகமலக்குகளும்
புருஷுனும்பூமியும் வானகமாதிய
பலபலகைல்குகளும்
மருஷற்றுமேயனுகாம லுதித்த
மறைநபிதம் மொளிவால்
உறுசுத்தமானவரிய பெரியோன்
உவப்புடனே படைத்தான். 189

புடவிகளேழும் கதிர்மதிவானுடு
பொன்னகர் ஹறுமுடனே
கடலதிலுற்றிடு மீன்கள்பறவைகள்
காணரிதாம் பொருளும்
இடங்கொளும்பூதரமாதிய நல்ல
இனங்களுமே இறயோன்
திடந்தருநம்பிறசூ லொளிவால்வெகு
செப்பமுடன் வகுத்தான். 190

வகுத்தவிவரங்கள் நல்லாகவாய்ந்து
மனங்களித்தானந்தமாய்
தருத்ததுவான சிங்காஷனமேறி
தகும்பெறு நன்னபியின்
மகத்துவமான உம்மத்ததிலேயுமை
மகிமைகள் பெற்றிடவே
வகுத்தவனுக்கிய நன்றியாராய்ந்து
வணங்கி இணங்கிடுவீர். 191

(வேறு)

நீதியறிவாள ருரைத்தஞானம்
நிலைக்கும்படியன் பாய்இல்மைக்கேட்டு
சோதியொழிவினை விளக்கிநெறி
சொல்லும்உஸ்தாதின் முன்பிலாகி
ஆதிவழிதனில் நடந்தேகியே
யன்பாய்ஹல்றத்தில்ச் சேர்ந்தபேர்கள்
வேதநூல்களின் படிநடந்து
மேன்மைதுலங்கிய முதியவரே. 192

அன்புக்குரியோரே அற்றப்பீகுல்
அல்லாதனை நீங்களறிந்துகொண்டு
இன்பமாகவே இறையோன்றனை
இணங்கவணங்கியே தெளிவுபெற்றால்
துன்பமணுகாததுறைகளெல்லாம்
துலங்கும்தவுஹீதின் வழியில்தோணும்
பின்புபயமில்லை சலிப்புமில்லை
பகுத்தன்பாயதை யறிகுவீரே. 193

அறிவாம்நாஹறயும் ஹயாத்த்தையும்
அப்புமண்டேயு வாயுவையும்
நெறிசேர்த்தரய் தந்தைகூறதையும்
நேர்மையுடன் கூட்டிகளாவின்படி
குறியாய்இன்சானை குவலயத்தில்
கோமான்வகுத்த வாறதை யுணர்ந்து
பொறிகளனைத்தயும் பேணிநீங்கள்
பெரியோன்பணிவிடை புரிகுவீரே. 194

பெரியோன்குறு ஆனில்கபிதமக்கு
பெலமாய்இன்சானின் சிர்றுகளை
சரியாய்பலபல விடங்களிலும்
சாற்றும்வாறதை இனிதெடுத்தே
யறியகருத்துறும் உலமாக்களும்
அவுலியாக்களாம் நாதாக்களும்
விரியவெடுத்துரைத்தார்களதை
விளங்கியறியுங்காள் முஸ்லீம்களே, 195

விளங்கும்முஹம்மது நபிநாயகம்
மேலோன்றனுறத்தில்ச் சென்றபோது
களங்கமறவேதான் பலஞானமும்
ஹக்கனிடத்திலே பேசிநின்றார்
ஒழுங்காயவைகளை யுலகமதில்
ஓர்மையுடயோர்கள் தகுதிபார்த்து
முழங்கும்தீனெனும் வழியாகவே
முறையாயுரைத்தனர் முஃமின்களே. 196

முறையாக்கேட்டதின் படிநடந்தோர்
மேலோனிடத்திலும் றசூலிடத்தும்
மறையோரிடத்திலும் உவந்தவராய்
வரிசைப்பெற்றோங்கும் முதியவராய்
நறைசேர்சுவனத்தை யாள்பவராய்
நல்லதீதாரும் பெற்றவராய்
குறையொன்றணுகாத பரிசுத்தராய்
குன்றாவாள்வினைப் பெற்றார்களே. 197

பெற்றவிவரமும் கேட்டுநீங்கள்
பெரியோன் நபிசொல்லை விட்டுவிட்டு
உற்றபெரியோரை பின்செல்லாமல்
உங்கள்மணம்போலே நடந்துகெட்டால்
வெற்றிதரும்ஞான வழிமறந்து
மேன்மைஈமானி னொளியிளந்து
பற்றும்குறுஆனின் விதியின்படி
பாரநரகினுக் காளாகுவீர். 198

ஆளும்நபியுல்லா தனித்துநின்று
அன்பாய்ழுதழு திரந்தேயிரு
தாழும்வீங்கியே பூதுமட்டும்
தேம்பிஇரவெல்லாம்தொழுதுநின்று
நாளும்இறைபாலில் உம்மத்தோர்கள்
நயமும்ஜெயமுமே பெறுவதர்க்காய்
சாளயப்பாடாய்து ஆக்கேட்டதை
தயவாய்சிந்தையில் பூட்டுவீரே. 199

பூட்டி அமல்செய்பார் தமைநரகில்
பொல்லாவேதனை செய்வதற்காய்
சாட்டப்படுகின்ற மலக்குகளாம்
ஸபானியாக்கள் தீ விலங்குகளை
மாட்டியவர்களை நரகமதின்
வகையதான தீவினைகளிலே
வாட்டி அதாபுகள்ச் செய்யுமந்த
வாறைப்பறிந்த அமல்செய்வீர்களே. 200

செய்வீரீமானினு றுதிகொண்டு
ஷெய்தான்கலைவினி லகப்படாமல்
மேவியிராமுற்ற முஹம்மதுதம்
மேன்மைபொருந்திய சொர்க்கமாறுய்
பொய்வீரமெடுத்தறி வில்லாமற்
பெரியோன்வணக்கத்தைப் பிறக்கணித்தால்
உய்வீரோசொல்லும் ஒருக்காலமும்
உதவியுமக்கில்லை உண்மைதானே. 201

உதவியாகவந்துதித்த வெங்கள்
உண்மைறசூலுல்லா தகுதிதன்னை
பதவிமிகுத்திடும் முன்னுண்டான
பெரியோன்நபிமார்கள் றசூல்மார்களும்
மதுவினுமிகப்பிரியமுற்றே
மனம்வைத்ததவர்களினும் மத்தான
சதினில்லாக்கூட்ட மதனிர்ச்சேர்ந்து
சிறப்புப்பெறுவதற்க் காசைகொண்டார் 202

ஆசைப்பிறகார மவர்களெல்லாம்
அண்ணல்நபிமிகிறாஜிராவில்
ஆசையகற்றியே மோட்சமருள்
அழகாகியபைத்துல் முகத்திஸிலே
நேசமுடன்வந்து கூடிநின்று
நேர்மைநபியின்னுல் மஉமூம்களாய்
வாசமுடனின்று தொழுதல்லாவின்
வரிசைதனைமிகப் பெற்றூர்களே. 203

வரிசைநபியுல்லா சொல்லதனை
விளங்கிஆராய்ந்தே யகத்தில்பூட்டி
பிரிஷமாய்முன்னோ ரனைவோர்களும்
பேணிஅமலெனும் வணக்கம்செய்து
அரஷர்போலவே யுல்லாஷமாய்
அரியபெரியோனின் சொர்க்கமேகி
பரிஷமிகப் பெற்றாதுபோலவே
பெரியோன்அமலினை பேணுவீரே 204
பேணும்நபியுல்லா ஷறஅதனை
பெரிதாஎண்ணாமல் பிறக்கணித்து
தோணும்படியெல்லாம் மனம்போலவே
தலைகீளாகநீர் வணங்கிடினும்
வீணாய்பலனெல்லாம் பாத்திலாகி
வீளும்நரகினுக் காளாகுவீர்
வேணுமறிவதாய் இதைமனதில்
மேவியிருப்பீர்கள் மேலோர்களே 205
மேலாம்பெரியோரும் உலமாக்களும்
வேந்தர்நபிறசூலின் ஹதீதுகளை
சீலமாய்ப்படித்தறிந் ததுபோல்
சிறந்தஉம்மத்தோ ரவர்களுக்கும்
மாலாய்ச்சொல்லியே காட்டாவிட்டால்
வாயில்நெரிப்பினால் கடிவாளத்தை
மேலாம்மலக்குகள் பூட்டித்தொல்லை
மிகவாய்செய்வா ரென்றிறசூல்சொன்னார் 206
சொன்னாரிறயவன் குறுஆனிலே
செவ்வைஉலமாக்க டம்மைநோக்கி
நன்னேர்நலவையும் தீங்கதையும்
நலமாயெவர்கட்க்கும் சொல்வீரென
மன்னோனேவலை எடுத்துக்கொண்டு
விலகல்தனைவிட்டும் நீங்கிக்கொண்டால்
பொன்னூராம் சொர்க்கம்புகுவீரென
பெரியோன்நபியுல்லா புகலலுற்றார் 207

புகலுமறிவெல்லாம் ஷறஅதனை
பொதிந்ததாகவே இருப்பதல்லால்
இகலும்வகை யொன்றும் கருதாமலே
இனியநபியுல்லா சொல்லைப்பேணி
பகலுமிரவுமாய் படைத்தோன்றனை
பயந்துவணங்கியே மூத்திபெற்றால்
சகலநிஃமத்தும் பெரியவாழ்வும்
சங்கையாய் அல்லாவிடம்பெறுவீர் 208

சங்கையாகிய ஷறஇல்லாமல்
தறணிதனிலெல்லா நாளுநீங்கள்
துங்கஅமல்களை மிகவாய்ச்செய்து
துதியையுலகெல்லாம் பரப்பினாலும்
பொங்கும்பலனொன்றும் கிடைத்திடாது
புகழும்கீர்த்தியும் இழந்துநீங்கள்
பங்கப்படுவீர்கள் பெலமாயிதை
பேணிநடப்பீர்கள் முஸ்லீம்களே. 209

பேணும்கலிமாவில் லாஇலாஹா
பெலத்தஉடல்போலாம் சேருமின்னும்
தோணும்இல்லல்லா வென்பதுதான்
செப்புமுடலுக்கு உயிரைப்போலாம்
பூணும்முஹம்மது வென்றநாமம்
புகழும் கல்பாகும் றூஹெலன்பது
வேணும்தஸ்பீஹாச் செய்வதற்கு
விளங்கும் நாவைப்போலாகுமென்றார் 210

ஆகும்அறிஉள்ள முஸ்லீம்களே
அணிசேர் முஷாஹதா வகயின்முறை
வாகாய நிந்திடும் வழியைத்தேடி
வல்லபெரியோரை முடுகினின்று
தாகம்தீர்த்துக் கொண்டாலலது
தப்புப்வழியொன்றும் காணவில்லை
வேகமாம்மௌத்து வருமுன்னாலே
மேலோன் லிகாவினைத்தேடுவீரே. 211

## வேறு.

தேடும்ஷில அறிவானது செவ்வை பெரியோரை
நாடிப்பிடித்தாலன்றி யென்னளுக்கிடையாது
கூடித்தினமவர்தாளிலே கெஞ்சிச்சிரமீதிர்
சூடித்திரிவீரெல் அருள் சுகம்வாய்த்திடும்மிகவே 212

## வேறு.

சுகமேயருளுநர்க்கலிடமாவினில்
சூட்சமறியாமற்ச் சொன்னதினல்
அகமும்தெளியாதே யொருக்காலமும்
அஸ்றுரும்உங்கட்க் ககப்படாது
தருமாம்பெரியோரைச் சார்ந்துநீங்கள்
ஷஹாதத்ததினுறும் சிர்றுகளே
மிகவாய்கேட்டதின் படிநடந்து
மேலாம்முத்தியைத் தேடுவீரே. 213

வித்தைவீட்டி லேவைத்திருந்தால்
விஸ்தீறணமேது விளைவுமேது
வித்தைமுளைப்பித்தால் விருக்ஷமுண்டும்
வேணஇலைபூவும் கனியுமுண்டும்
முத்துமுஹம்மதை வைத்துப்பார்த்தால்
வனுப்பம்தோணுமோ மதிஇல்லாரே
செத்தேஇறந்திடும் முன்னரெங்கள்
சிமான்முஹம்மதை ஷாஹதுசெய்வீர். 214

சிமான்முஹம்மதின் ஷாஹதைக்கொண்டே
தனியோன்றன்னை நாமறியவேண்டும்
கோமானிறசூலையு வந்தவர்கள்
குதாயையுவந்தவர் போலாகுவார்
யிமானுள்ளேரை ஈடேற்றிடும்
இறசூலொருவரை யுவப்புவைத்தால்
ஆமீனகவே அல்லாதானும்
அவரையுவப்பானென் றறிவீர்களே

அறிவுக்கடங்காத அல்லாஹுத்தான்
ஆலமடங்கலும் நபியொழிவால்
குறியாய்ப்படைத்தெல்லா கல்குகட்கும்
கூறும்விதியெ தென்றுலிவரை
நெறியாய்ப்பிடித்தவர் சொர்க்கமாள்வார்
நோமிவர்சொல்லை தட்டினோர்கள்
பொறியாம்நரகத்தில் வீழ்ந்தழுந்தி
பொல்லாவேதனைப் பெறுவார்களே 216

அல்லாகுத்தஆலா பேரிலொரு
அடியான்றனக்கு மேஹுஜ்ஜத்தில்லை
நல்லாரரசாளும் சொர்க்கத்தையும்
நரகமதனையு மவன்படைத்து
எல்லாமனுடர்க்கும் அகில்கொடுத்து
யேவல்விலக்கலைக் காட்டிவிட்டான்
பொல்லாப்பாவிகள் கெடுவதெல்லாம்
பெரியோன்றனை மறப்பதினாலேயே 217

நாலாம்வேத மாகியநமது
நலஞ்சேர்குர் ஆனின்பொருளுணர்ந்து
மேலாம்பெரியோர்கள் இல்முகளை
மேவிப்பார்த்துத்தான் பிடித்துக்கொண்டு
மாலாய்அமல்களை செய்யாவிட்டால்
மவுலாவெனும் நாயனிடந்தனிலே
மேலாம்வரிசைகளேதுவு முண்டோ
விளம்புவீரெங்கள் முஸ்லீம்களே 218

இலங்குமறிவுள்ள முஸ்லீம்களே
இடும்புசெய்கின்ற கன்னுசுவை
விலங்கில்மாட்டியே திக்ரைக்கொண்டு
மேவும்அம்மாறுத்தனையும் வென்று
துலங்குமீமானின் ஒழிவைப்பெற்று
தூய்யோன்ஹலுறத்தைச் சேருவீரேல்
கலங்கமாட்டீர்கள் கபுரகம்
காதவழிக்கப்பால் அகன்றிடுமே 219

கர்தவழிமட்டும் கஸ்தூரிதான்
கமளுமிறசூலினை வர்ப்படி
ஓதும்தொழுகை நோம்பொடுசகாத்தும்
உற்றஹஜ்ஜையும் செய்தேற்றியே
ஙீதிகப்றையும் மஹ்ஷறையும்
நினைத்தல்லாவினை பயந்தழுது
போதமுடன் நல்லஅமல்புரிந்து
பெரியவாள் வினைப்பெறுவீர்களே 220

வாள்வைக்கெடுக்கின்ற ஷெய்த்தான்றனை
வந்துமுடுகாமற் றூரமாக்கி
தாள்வில்லாமலே தவம்புரிந்து
தக்கஉலமாக் கடமையடுத்து
பாழிருள்ந்திடும் பூமிதனில்
படைத்தோன்விதித்திட்ட காலமட்டும்
பாளில்லாத்தவம் செய்திட்டாக்கால்
பகாவாம்நிஃமத்தையருந்தலாமே 221

அரியபெரியோனின் அதாபை அஞ்சி
அழகாம்அமலதில் ஆஷயாகி
உரியமுஹம்மதி நுவப்பதனை
யுமதுசிந்தையிற்றரித்துநாளும்
பிரியாமனசுடன் ஹமஹறபிவென்ற
பெரியதிக்றதைக் கருதிக்கொண்டு
சரியாய்நிலைதனில் பிரளாமலே
தரித்தால்பேரின்பம் கொள்ளாமலே 222

கொள்ளும்செய்தியொன்றினிதுகேழும்
குத்றத்துடையவன்கல்குகளின்
உள்ளும்புறமுமே பார்க்கிறான்
ஒன்றுமவனுக்கு மறைவில்லென
உள்ளமதில்நன்றாய்த் தரித்துக்கொண்டு
உறுதியாகவே ஷஹறத்துசெய்தால்
தள்ளுங்குப்றெல்லாம்நீங்கிவிடும்
தரிப்பீர் அல்லாஹுவின்பதிலே: 223

அல்லாஹு வென்னு முதவிகொண்டும்
அஹ்மதாய்வந்தோ ருதவிகொண்டும்
நல்லஞர்னமும் ஹதீதுகளும்
நாடியுரைத்திட்டேன் சதக்குயென்போன்
வெல்லும்முஃமீன்கள் முஸ்லீம்களே
மேவும்இவைகளைப் படித்துணர்ந்து
வல்லபெரியோனைப் பணிகுவீரேல்
வெற்றிசலாமத்துப் பெறுவீர்களே 224

## வேறு

அல்லாஉதவிகொண்ட ஹதுமணிமாலை
யன்புடனே யெடுத்து
சொல்லார்புகழ்ந்து சுஜூதிற்றுணிந்து
சுகப்பெறுவோர்க் குரைத்தேன்
கல்லாதவேலை கருத்தினிலுற்ற
கசடற்ற ஞானமதை
பொல்லாங்கடங்கலைவிட்டும்நீகாத்தருள்
புகள்றப்பல் ஆலமீனே. 225

அஹதுமணிமாலை
முற்றுப்பெற்றது

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

# குத்புல் அக்தாப்மாலை.

## இன்னிசை.

அல்லாவருள்காப்பு ஆலநபியும்காப்பு
பொல்லரங்ககற்றிவிக்கும் புண்யநபிமார்காப்பு
நல்லாங்காரல் அஸ்ஹாப் நாதரொலிமார் அக்தாப்
யெல்லோருமேஎனக்கு எப்போதுங்காப்பாமே. 1.

அல்லாதனைப்புகழ்வேன் அஹ்மதுர்றசூல்பேரில்
சொல்லால்சலவாத்தும் சலாமுமிகுந்துரைப்பேன்
நல்லரபூபக்கர் நாதர்உமறொடுதுமான்
வெல்லும் அலியாரிவர் மேவிப்புகழ்வேனே 2.

எங்களிறசூல்நயினார்க்கினியமகளாகவந்த
சங்கைபெறும் பாத்திமத்தின் தவப்பலனாய்வந்துதித்த
பொங்கும் புகழ்க்குரிய புண்யஹசனொடுசனை
இங்கிதமா எப்போதும் யேற்றிப்பணிவேனே 3.

காயநகரிற்பிறந்த காமில்சுலைமானொலியின்
நேயமக்களவர்பதம் நெஞ்சகத்திலே இருத்தி
ஆயுமிந்த இன்னிசையை ஆவலுடனெடுத்து
தூயமுஹ்யித்தீன்மேல் துலக்கமுடனோதிடுவேன 4.

யேருபடியில்வாழும் இலங்கும்ஹசன்முகியித்தீன்
பேராயுதித்தமகன் பாவிஸதக்கென்னுமியான்
கூறும்ஜிதறாசிய்யா குருபரன் திருவருளால்
வீறுன இம்மாலை விரைவாய்விளம்பலுற்றேன் 5.

குத்புல்அக்தாபுவென்னும் குணமானமாலைதனை
இதமாக நானெடுத்து இசைத்திடுதற்கென்குருவின்
உதவிதனைமுன்னிறுத்தி உவந்தவர்பதம் போற்றி
பதவிமிகப்பெற்றிடவே பாடிப்புகழ்வேனே 6

( நூன்மூகம். )

கத்தனருள்பெற்றோங்கும் ஹபீபிறசூலுல்லாவின்
சுத்தமறபிற்றோன்றி சோதிப்பிறகாஷமுடன்
சித்தாயுலகமதில் சிறப்பாக வந்துதித்த
சத்தானவெங்குருவே ஷெய்குமுஹியித்தீனே 7

ஆலம்படைத்தானும் அளகாம்கலிபாவே
மூலம்முஹம்மதென்ற மூத்திலுதித்தவரே
பாலன்ஸதக்குதனை பண்பாகவேநிதமும்
தாலமதில்காத்துதவி தாரும்முஹியித்தீனே. 8

இருந்த இருப்பதனில் இருந்துகொண்டுகஃபாவை
பொருந்தவேதவாபு செய்து புகள்மேவும் புண்ணியரே
அருந்தவங்கள் செய்யும் அக்தாபுக்கூட்டமதில்
பொருந்தும் குத்பாகவந்த புண்யமுஹியித்தீனே. 9.

ஷாபிவுமதுஹபதை சார்ந்திருந்துஹன்பலியில்
கோபமதொன்றில்லாமல் குணமருளவேசேர்ந்து
பாவிகளாம் கல்குகளை பயகாம்பர்ச்சொர்போல
சோபிதமாய் தீன்வழியில் சேர்த்தமுஹியித்தீனே 10.

தீன்உங்கன்கிட்டவந்து சிக்கைமுறைஇட்டிடவே
தேனுறுங்கரத்தாலே தொட்டுச்சுகமாக்கினதால்,
தீனுடனேதான் எழும்பி சிறப்பாய்புகழ்ந்துதய்யா
தீனைஹயாத்தாக்கும் திவ்யமுஹிய்யித்தீனே. 11.

எல்லாவலிகளுக்கும் இறைச்சமுகம் உங்களைப்போல்
செல்லும்தகுதிஇல்லை சீர்பெருகும் உம்முடைய
வெல்லும்மகாமதுதான் மேன்மையெனவேயொலிமார்
எல்லோருமேயுரைத்தார் யேந்தல்முகியித்தீனே. 12.

சங்கைபிதாஹசனி தாயும்ஹுசைனியாய்
பொங்கும் இரண்டுபுகள் பெற்றுவந்தநாயகமே
உங்கள்வலுப்பமதை எப்படித்தான் இன்னதென
எங்களுக்குகண்டறிய வியலும்முகியித்தீனே 13.

ஹம்மாதிடம் வொருவர் கச்சவடம் செய்தர்க்காய்
செம்மையுடன்போக வெண்ணிச்சிறப்பாயுரைத்திடவே
சம்மதிக்காதன்னோர் சபரைவிலக்கியபின்
சம்மதம் கொடுத்தேகச் செய்தமுஹியித்தீனே. 14

அந்தசபர்தனிலே அவர்க்கணுகும் தங்கட்டத்தை
வந்தணுகார்மர்க்காத்து மகிள்ச்சியுடனேயவரின்
சொந்தமுதல்களுக்கும் ஜீவனுக்கும் நீர்பிணையாய்
சந்தமுடன் நின்றவரில் சேர்த்தமுகியித்தீனே 15

தாயாரக்கட்டிலிலே தரிப்பதற்கு முன்னாலே
ஆயும்பெரியோர்கள் அவனிதனில் உள்ளோர்க்கு
நேயமுடன் நீர்பிறக்கும் நிஷத்தையுரைத்தார்புவியின்
நாயகமாய்வந்துதித்த நாதர்முகியித்தீனே. 16.

சிறுபிள்ளையாயிருக்கும் சமயத்திலேறமலான்
பிறைகண்டமாத்திரத்தில் பாலதைவெறுத்துவிட்டோர்
மறைப்பகருநாவார் முஹம்மதுர்றசூல்ஷறஜ
நிறைச்செலுத்தி நின்ற வெங்கள்நேஷர்முகியத்தீனே 17.

ஆதம்குலத்தாஷே அப்தால்கள் நாயகமே
நீதமுடனென்னாளும் நிலைநின்றநல்குத்பே
ஓதுமடியாருளத்தில் உவந்தெழுந்தருளியெனக்
காதலினறவேற்றும் ஒவ்துமுகியித்தீனே. 18.

நற்புத்தியாய்நாளும் நலமானதீன்வழியில்
தர்ப்புத்திக்கொண்டோரான் தரித்துநின்று நம்மிறயோரன்
கர்பித்தபங்குதனை கருத்திற்பொருந்தமன
துர்புத்திநீக்குமையா துய்யமுகியித்தீனே. 19.

நாளைமஹ்ஷறுமேல நான் அழுதுசஞ்சலிக்கும்
வேளையிலேகிட்டவந்து மேன்மையுடனாதரித்து
தேளும்அரவமதும் சேர்ந்தவன்னியாம்நரகின்
கோள்தனைக்காத்தருளும் குத்துபுமுகியித்தீனே. 20.

சொல்லால்வரும் வினைகள்தோஷங்கள் சூள்ந்தவென்னை
பொல்லாங்கிலாக்காமல் போதறவுதந்தருளி
நல்லாங்காரமௌலிமார் நடந்தவழிமீதிலென்னை
உல்லாஷமாய் நடத்தும் உண்மைமுகியித்தீனே. 21.

அவ்வல்அஹதாயிருந்த அஹ்மதுவில் நின்றுவந்து
செவ்வையுட னீமானை சிந்தைகளிலேபொருத்தி
எவ்வெவர்க்கும் நல்லருளை இணக்கமுடன் பூட்டிவைத்து
கவ்வையையகற்றவந்த ஒவ்துமுகியித்தீனே. 22.

நாலாம்படியதனில் நானெழுந்துபோயிருந்து
மேலான மண்டபத்தின் மீதிலுறும்வாலையுடன்
மாலாகவேகூடி மனமகிழ்ச்சிக்கொள்வதற்கு
சீலமுடன்நல்லுதவி செய்யும்முகியித்தீனே.

கையோடுகையிணைத்து காலோடுகால்சேர்த்து
மெய்யோடுமேதழுவி மேலான லீலைச்செய்து
மெய்யான நற்சுகத்தை விரைவாய்அனுபவிக்க
கையுதவிதாரும் அப்துல்காதிர்முகியித்தீனே. 24.

செற்றிறந்துபோகுமுன்னே சிறியவன்மனக்கவலை
யற்றிரைஷ-ஹூததனில் அல்லுபகலாயிருந்து
நற்றவத்தோர்போல வென்றன்நாட்களிலெல்லாமிருக்க
வெற்றிதந்தருள்புரியும் வேந்தர்முகியித்தீனே. 25.

துட்டருடன்சேர்ந்திருந்து ஷறுதுகள்மிகுந்துசெய்து
இட்டமுடன்யீமானை யிருளாக்கிப்போடாமல்
செட்டாகவென்னாளும் சிறப்பாகவேதிக்றில்
முட்டிநிர்ப்பதற்குதவும்முத்துமுகியித்தீனே. 26.

கெண்டைவழியார் மயக்கக்கேட்டிலென்னையாக்காமல்
தொண்டருடனேசேர்த்துத் தொழில்முறையைகாட்டிவித்து
பண்டிரைஅமைத்துவைத்த பலன்பெறும்அமானிதத்தை
கொண்டெனை னீரெப்போதும் காரும்முகியித்தீனே. 27.

நெஞ்சின் விளக்கொளிமேவ நெத்தியிலுறும்பொருளே
அஞ்செழுத்தினுள்ளே யுஷைந்தாடும் அட்சரமே
நஞ்செழுத்தைநாடாமல் நானுமதுநல்லநுளை
தஞ்சமென்றிருக்கவருள் தாரும்முகியித்தீனே. 28.

எழுபதுவிடுத்தமொரு யிரவுதனிலைகனவால்
முழுகிக்குளித்திறயை முழுமனதிலோடதபாய்
தொழுதிரஞ்சிநின்ற வெங்கள் துய்யவொலியேயெனது
பழுதகற்றியேகாரும் பகீருமுகியித்தீனே. 29

ஹக்கன்கிருபையினூர் காபிலத்தின்கள்ளர்களை
தக்ககப்கார்பெரிந்தே தர்க்காத்தநாயகமே
ஷக்குகளைநீக்கியென்னை சடயாமலும்மருளில்
சொக்குமுறைதந்தருள்வீர் ஷெய்குமுகியித்தீனே. 30.

பதினொலுஇல்முகளும் படித்தபின்புபஃதாதில்
முதியோர்கள்கூட்டமதில் முடுகியிருந்தேவஃலை
துதியாளடுத்துரைக்கும் சமயம்இறகுல்முதம்
கதியாயருக்குமெங்கள் ஒவ்துமுகியித்தீனே. 31.

தம்பதியினின்றெழுந்து தகுதியுடனேபஃதா
தம்பதியிலேசெங்கோல் அழகாய்நடத்திவந்து
நம்புமடியார்களுக்குநலம் கொடுத்தநல்குத்பே
யெப்பவம்பொருத்தருளுய் யேந்தல்முகியித்தீனே. 32.

குருவெனக்குகாட்டிவைத்த ஹம்வினுறும்சூட்சமதை
மருவிப்பணிவதற்கே வகைதான் அறியாமல்
சருகாயுலர்ந்தடியேன் சஞ்சலித்துவாடுமுனம்
திருவானநற்கருணை செய்யும்முகியித்தீனே. 33

கோரணயாதயிலே நான்கடந்துதீவிரமாய்
சீரானமோட்சமதில் சேர்ந்திறைஜமாலியத்தை
பார்த்திருந்தேமேலான பாக்கியம்பெறும்படிக்கு
சீர்த்திதந்தருள்புரியும் செய்குமுஹ்யித்தீனே. 34.

வாகாய்ஜனங்களுக்கு வஹ்னு சொல்லும்வேளையிலே
ஆகாயமாய்ப்பரந் தொன்ற லரிசத்தம்போட்டிறைல்
வேகமாய்க்காற்றைக்கொண்டு மௌத்தாக்கிப்போட்டபின்பு
மோகமுடனே எழுப்பும் முத்திமுகியித்தீனே. 35.

ஆயுமறையாலெவர்க்கும் அருள்பூட்டும்நாயகமே
நாயடிமயானவென்னை நன்றிபுரிந்தாள்வதற்கே
தாயதுபோல்வந்து தயங்குமிந்தவேளையிலே
நேயமுடநாதரிப்பீர் நேர்மைமுஹ்யித்தீனே. 36.

வஞ்சியர்னைாஷயிலே மயங்கிக்கிடந்துமனம்
அஞ்சாதிருக்குமிந்த அடிமைதனை யெப்பொழுதும்
அஞ்செழுத்தையோதி அடங்காபெரும்பொருளில்
கொஞ்சிக்குலாவவைப்பீர் குத்புமுகியித்தீனே. 37.

அஹதியத்தில் நின்றெழுந்த அஹ்மதூர்றகூலொளியில்
தகுதியுாய்நின்றுதித்து தறணியிலைஷவந்தெவர்க்கும்
பஃதாதுலேயிருந்து பலநளித்தப்பாத்திபரே
நுக்தாவில்நின்றிலங்கும் நூறுமுகியித்தீனே. 38.

மாயப்ரபஞ்சமெனும் மயக்கமதிலேகிடந்து
நாயதுபோலங்குமிங்கும் நாநலைந்துவாடுவனை
காயமதைக்கட்டிக் கஷிர்துருகிநிற்கு றிறயை
நேயமுடன் தோத்தரித்த நேஷர்முகியித்தீனே. 39.

நாஷினுணிதாண்டியப் பால்நாலாம்படியேறி
வாஷமுறுமண்டபத்தில் மகிள்ச்சியுடனே புகுந்து
பாஷாங்குகாட்டுமந்தப் பாங்கிமுகம்பார்த்துமன
தாஷைநிறைவேற்றுவதற்கருளும் முஹ்யித்தீனே. 40.

அல்லாஹு வென்றச்சொல்லின் அரும்பொருளையாராய்ந்து
சொல்லவரிதான பலதோத்திரங்கள்செய்துமன
தொல்லைகளைநீக்கித் தொலையாவணக்கமதில்
அல்லும்பகலாயிருக்க அருளும்முஹித்தீனே. 41

உலகளின் அரும்பதத்தை யொலிமார்புயங்களிலே
தங்கும்படிசெய்துவிட்டீர் தனியோனருள்படிக்கே
யெங்குள்ளருமேயதனை இணக்கமுடனேபொருந்தி
ஷங்கைமிகப்பெற்றார்கள் ஜயாலுமுஹியித்தீனே. 42.

ஒலிமார்கள் கூட்டமதில் உரைத்த அந்தசொல்லதனை
சலியாமலெல்லோரும் தலைஷாய்த்ததின்பொருட்டால்
வலியபெரியோனருளை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்
தலைமேலணைக்கருளவந்தச் சங்கைமுஹியித்தீனே 43.

தலைசாய்த்திடாதவர்கள் தத்தம்ஒலிதனத்தை
துலையவைத்துவிட்டு தௌபாசெய்தும்படிபணிந்து
கலைவுதலொன்றில்லாமல் கனதியுடன்பின்புபெற்றார்
மலைவகற்றிஙாக்கு மெங்கள்மன்னர்முஹியித்தீனே. 44.

எப்போதுமென்மேலே இரக்கம்வைத்தருள்புரிந்து
அப்பாதம் தாருமையா அதின்மீதிலாசைகொண்டு
தப்பாமலென்னாளும் சலித்தழுதுயிர்க்குமெர்க்கே
இப்போது தந்துதவி இரங்கும்முஹியித்தீனே. 45.

முச்சுடரினுட்சுடரே முனையில்வைத்துச்சீராட்டி
இச்சையுடனான்களித்தே இருப்பதற்கனுக்கிரகம்
இச்சணமேதந்தெனைநீர் இருட்களையும்போக்கிவைத்து
சச்சிதானந்தபொருள் தாரும்முஹியித்தீனே. 46.

கள்ளமனங்கொண்டே நான்கலங்கித்தினமலைந்து
எள்ளளவுங்கல் அமலை இணங்கிப்பிடிக்காமல்
துள்ளித்திரியுமிந்ததும்பு கெட்டதுட்சணனின்
சள்ளையெல்லாம் நீக்கித்தயை செய்யும்முஹியித்தீனே. 47.

பெண்சாதிபிள்ளைகளை பெரிதாகவெண்ணிக்கொண்டு
எண்சாணுடல்வளர்க்கும் இயல்புகளையுந்தேடி
கண்சோர்வுகொள்ளாமாக் கருணைபுரிந்தாளுமையா
தன்சோலைப்பதிதனில் தங்குமுஹியித்தீனே. 48.

முன்னாளமைத்துவைத்த முதற்பொருளைநானுணர்ந்து
பின்னாள்வரும்வினையை பயந்தழுதுமேலவனை
பன்னாளுமேதொழுது பவங்களை எல்லாமகற்றி
என்னாளுநானிருக்க இரங்குமுஹியித்தீனே. 49.

ஹலிமாமுலையருந்தும் அஹ்மதுர்றசூலுரைத்த
கலிமாபொருளறிந்து கமலமணிமண்டபத்தில்
அலிமாமனாருளை யனுதினமும்காண்பதற்கு
பெலமிருந்தருளிஎன்னை பேணுமுஹியித்தீனே. 50.

என்குருவெனக்குரைத்த இஷாராவைநான்பிடித்து
நன்குணர்ந்துசிற்றநேனை நமோகவேநாடி
முன்குறித்தமைத்துவைத்த மஹப்பத்தென்னும்பொருளை
தன்கருத்தில்நாட்டவருள் தாரும்முஹியித்தீனே 51.

அன்பான்புகழ்ந்திரயை அழகாயறிந்தவரே
முன்புதித்துவந்தவெங்கள் முஹம்மதுர்றசூல்பதத்தை
இன்பமுடன்தாங்கிநின்று இறையருளைபெற்றவரே
என்பாவம்தீரவிப்போ விரங்குமுகியித்தீனே. 52

எம்போலபாவியரில் எத்தனையோபேர்களைநீர்
பொன்போல்கிருபைசெய்து புகள்பெருகசெய்துவிட்டீர்
தன்பாலகன்தனக்கு தகப்பன் இரங்குவண்ணம்
என்பாலுதவிசெய்யும் இனியமுகியித்தீனே. 53

பாலமதிலேனின்றும் பாரவொலிஹம்மாது
சேல்குதிக்குமாற்றிநிலே தள்ளிவிட்டதாலவரின்
மேலாங்கைதசூசைய தாயு மண்ணறையிலானபின்பு
மாலாய்யதைமாற்றும் மன்னர்முகியித்தீனே: 54.

பஃதாதிலொலிமார்கள் பன்ர யனுப்பிவைத்த
புகள்பெறும்கலஷமதில் புஷ்பத்தைவைத்தனுப்பி
தகுதிமிகபெற்றவெங்கள் சற்குருவேஎன்னை இந்த
ஜகதலத்தில்காத்தருளும் திவ்யமுகியித்தீனே. 55

நாளைகியாமமதில் நல்லோர்கள்ஷேமமுறும்
வேளையிலேநானழுது வெம்பித்தயங்காமல்
பாளாம்நரகமதின் பயங்கரத்தைக்காப்பாற்றி
ஆளாக்கிஆளுமெங்கள் அண்ணல்முஹியித்தீனே. 56.

வம்பும்அளிவழக்கும் வஞ்சகமும்பூண்டுபெரும்
துப்பமதிலாகிநிதம் துக்கித்துவாடுவனோ
அம்பொர்ப்பதமணிந்து அகமியத்திலேயிருந்து
செம்பொனுலகாளவருள் செய்யும்முஹியித்தீனே. 57.

நல்லோருடன்கூடி நலவுகளைத்தேடாமல்
புல்லோரைநானடுத்து புலயாட்டும்பொய்களவும்
பொல்லாப்பும்செய்து புகழிழந்துபோகாமல்
நல்லருள்செய்தாளுமெங்கள் நாதர்முஹியித்தீனே 58.

எவ்வளவெடுத்தெடுத்தே இசைத்திடினும்என்மனது
செவ்வையுறும்பாதையிலே சேராகிர்க்காமல்
தெளிப்பளையபடி தன்மனம்போல்பாவமதை
தெளவுதனைதமாற்றி நன்மைநல்கும்முஹியித்தீனே. 59

அப்புப்பிரிதுவியும் அறைத்தேயுவாயுமுதல்
செப்பியநல் ஆகாஷசிர்றதையும் ஆராய்ந்து
ஹூ-ப்பாகவேயவற்றில் கூறும்கலைநடனம்
தப்பாமற்செய் சூட்சம் சூட்டுமுஹியித்தீனே. 60.

பிரிதிவியிலேகவிழ்ந்தும் பேணும் அப்பிலேவலமும்
பொறுதியற்றதேயுவதில் பொருந்துமிடமும்வாய்வில்
பொறுதியுடனே நேரும் பரிவாகலுடும்வகை
மறதியற்றறியவருள் வள்ளல்முஹியித்தீனே. 61.

முக்கோணவட்டமதில் முடுகியதில் நின்றுடும்
பக்குவத்தைகண்டறிந்து பாக்கியம்பெற்றாளாகி
மிக்கப்பெரியோர்களுடன் மேவிப்பயல்சேர்ந்திடவே
தக்கவருள் தாருமையா செய்குமுஹியித்தீனே. 62.

அஞ்செழுத்துக்குள்ளிருந்து அசைஷத்தாடும் அப்பொருளை
நெஞ்சில்நினைத்தெப்பொழுதும் நானிருக்கசெய்தநென்று
வஞ்சகமும்பொல்லாவறு மயமையும் நீக்குவித்து
செஞ்சாணம் தந்தருளும் செய்யித்முஹியித்தீனே. 63.

ஆலம்மலக்கூத்ததிலும் அப்புறமும் நின்றவரே
கோலாகலகுத்பு கூட்டத்துயர்ந்தவரே
பாலம் கடததும்நபியின் பண்பானபாலகரே
சீலமுடனே யுதவிசெய்யும் முஹியித்தீனே. 64.

காணும் பொருட்களெல்லாம் கத்தன் திருகாட்சிஎன்றும்
பாணியும்நுரையுமென்றும் பார்த்துணர்ந்திருக்காமல்
வீணும் விளையாட்டும் வீம்புகளும் பண்ணுமிந்த
வீணனையாட்கொள்ளுமெங்கள்வேந்தர்முஹியித்தீனே 65

பங்கமதைப்போக்கிப் பளிப்புகளையும்நீக்கி
தங்கியவறிவுகளைத் தாமரையிலேதாக்கி
சங்கைமிகப்பெற்று சப்றுடனிருப்பதர்க்கு
துங்கவரம் தாருமெங்கள் துய்யமுஹியித்தீனே. 66

கல்லாதபாவிகளின் கல்லைத்திறப்பவரே
பொல்லாதபேர்களுக்கு புகழுறிஉரைப்பவரே
உல்லாஷமாயெவரும் உவந்துபணிந்தேற்றுமெங்கள்
சல்லாபரே ஒலியே ஷெய்குமுஹியித்தீனே. 67.

தாஹாநபிக்குலமே தாசீமின்நற்றவமே
சாகாவரமருளும் சங்கையுள்ள நாயகமே
தேகாபிமானங்கொண்டு தவித்துச்சலிப்பவரை
யேகாந்தமாம் பொருளில் யிருத்தும் முஹித்தீனே. 68.

ஐம்பூதத்துள்ளறயும் அடங்காப்பெருபம் பொருளே
ஐம்பத்தோரட்சரத்திர்க்கப்பாலிருப்பவரே
ஊம்பான பாவிதன்னை நாயனிடம் மன்றுடி
ஐய்பொன்னை வாக்கினிதம் ஆளும்முஹியித்தீனே. 69

மூன்பிற்றுலங்கி நிர்க்கும் முச்சுடரினுட்ச்சுடரில்
இன்புற்றியானிருந்து யிரவுபகலாயருளை
பின்பற்றியேயிருந்துப் பெரியவன் திருக்கருணை
அன்புற்றடைய வருள் அண்ணல் முஹியித்தீனே. 70,

தீன்பொருளைவிட்டும் திரும்பாமலே யிருந்து
கோனுரைத்தச்சொர்ப்படியேஹம்வை கல்பிலேஇருத்தி
மானுக்குப்பிணைகொடுத்த மன்னரிறசூல் உவப்பில்
யானிருப்பதற்குதவும் யாதுமுகியித்தீனே 71.

அல்லாஹு என்றுரைக்கும் அகமியப்பொருளதனை
நல்லவஹுதத்திலே நானிருந்து ஆராய்ந்து
வெல்லும் வொளிவதனைமேவினின்றகந்தெளிய
நல்லுதவி தாருமையா நாதர்முஹியித்தீனே 72.

ஹல்லாஜை சொல்லுகின்ற அப்பொழுதுநானிருந்தால்
கொல்லாமலே யவரை காத்துக்கொள்வேனென்றுச்சொன்
பொல்லாத பாவிஎன்று பேணுதெனைநிகள்ந்தால் [னீர்
நல்லாவதெப்படியோ நன்றி முஹியித்தீனே 73.

யேதோவறிக்கிலனே என்பேரிலென்னகுற்றம்.
சேயான் செய்ததெல்லாம் சிந்தையினிற்காணாமல்
மாதாவிரங்கும்வண்ணம் வந்தெனை நீராதரித்து
பாதமலர் தாருமுகம் பார்த்து முஹியித்தீனே 74.

சித்திரக்கொலுவதனில் ஜகஜோதியாயிலங்கும்
பத்தினி முகம்பார்க்கும் பட்சமுடனேபேசி
சித்தக்கலக்கமதை தீர்த்திடுதற்கே எனக்கு
நித்தமும் அருள்புரியும் நீதர்முஹியித்தீனே. 75.

நற்றவத்தினோர்க்கரசாய் நாதர் அக்தாபுகட்கு
வெற்றியருளும் குருவாய் மேதினியில் வந்துதித்து
செற்றிருந்ததுபோன கல்பை சீர்படுத்தியாழுகின்ற
நற்றவமே நாயகமே நாதர் முஹியத்தீனே. .76.

உங்களின் கருமத்துகள் உலகமெல்லாம்பரவி
எங்கும்பிரசங்கமதாய் எழில்பெருகும்சந்திரன்போல்
பொங்கியிருக்கின்றமையால் பொல்லாதநான் அவற்றை
எங்ஙனமெடுத்துரைப்பேன் யேந்தல்முஹியித்தீனே 77.

அக்தாபுமார்களெல்லாம் ஆஷாரமாயுமது
தருதியைஎடுத்தெடுத்துச் சாற்றினதுமல்லாமல்
பஃதாதிலேயுமது பாதவிணையைப்பணிந்து
அஹதருளைப்பெற்றனர்கள் அண்ணல் முஹியித்தீனே. 78.

வேதமெடுத்தோதி விளம்புகின்றனும்சபையில்
மாதவமுஹம்மதுவும் வண்மைஅஸ்ஹாபுகளும்
சோதிப்பிரகாஷமுடன் சூழ்ந்திருக்கும்அச்சிறப்பை
ஆதியளித்தானுமக்கு ஆசைமுஹியித்தீனே 79

ஜின்களும் மலக்குகளும் சிறப்பாய்வருவதுபோல்
மின்னும்பறவைகளும் மிகுந்துவிரைவாய்நடந்து
மன்னியமஜ்லிஸினில் வந்திருக்கும்அச்சிறப்பை
என்னவென்றுநானுரைப்பேன் எங்கள்முஹியித்தீனே 80.

ஆகாஷமீதிருக்கும் அழகாம்ரிஜாலுகளும்
வாகாயவடம்வந்து வண்மையுடனேசூழ்வார்
ஏகமாயெல்லோர்க்கும் இணக்கமுறாம்ஷஃனுடைய
மோகமாம்சப்தமதை மூட்டுமுஹியித்தீனே 81

ஞானத்திருக்கடலே யாபேர்க்கும்நாயகமே
ஈனமதைநீக்குமெங்கள் யிரசூலின்புத்திரரே
வானத்தருஷதனை வாகாயிருப்பினிலே
மோனமுடனேபார்க்கும் முத்துமுஹியித்தீனே 82

அஞ்சட்க்ஷரப்தனிமேல அடங்கும்பொருளதனை
வஞ்சகமில்லாதறிந்து மனமகிழ்ச்சிகொள்வதற்கு
நெஞ்சினிலெழுந்தருளி நேர்க்கேட்டெல்லாமகற்றி
தஞ்சமருள்செய்வீரிச்சமயம் முஹியித்தீனே 83

நாஷிறுனிகடந்து நானேறிப்போகாமல்
காஷாரைகொண்டு களங்கமுற்றலைவேனோ
நேஷமுடனிச்சணமே நேராகவந்துவிந்த
தாசனுக்கிரங்கியருள் தாரும்முஹியித்தீனே 84

எல்லாவறிவுகளும் எடுத்தெடுதிஷைத்திடினும்
பொல்லாங்குமாறுதில்லை புலன்களுமொடுங்குதில்லை
மல்லானபோரும் மயக்கமுமேமேற்கொண்டு
நில்லாமர்க்காத்தருளும் நீதிமுஹியித்தீனே 85

இச்சைக்குடிக்கொண்டிருக்கும் எனதுநபுசெப்பொழுதும்
உச்சியிலுறும்பொருளை உவக்கவெனையாக்காமல்
எச்சித்தொழில்களையே இனிதாய்எடுத்தெடுத்து
மிச்சமாய்க்காட்டுதனை விலக்கும்முஹியித்தீனே 86

இப்படியேநானிருந்து இறையருளைத்தேடாமல்
தப்பிதமாய் செற்றிறக் கதகுமோஉமதடிமை
எப்பொழுதும் நாவதிலும் இருதயத்திலும்பதத்தை
ஒப்பமுடன்வைத்திடுவேன் உண்மைமுஹியித்தீனே 87

சித்தானவாஷலைத சிறப்பாய்திறந்தெனக்கு
முத்தாம்பரவெளியில் முச்சுடரைக்காட்டிவைத்து
பத்தஞ்சுமொன்றையுமே பணக்கித்தெளிவதற்கு
சித்தப்பிரங்குமையா ஷெய்குமுஹியித்தீனே 88

நல்லோர்கணாயகமே நற்றவத்தோர்தாயகமே
உல்லாசமாம்கடலில் உலாவும்திருமணியே
பொல்லாமுஸீபத்தெல்லாம் போக்கும்தயாநிதியே
நல்லோர்க்குதவிசெய்யும் நாதர்முஹியித்தீனே 89

ஆக்கிப்புஷித்த பின்பு அழகான கோழிதன்னை
சீக்கிரத்திலே எழுப்பிச் சீவன் கொடுத்தவரே
போக்கிரித்தனங்கள் செய்யும் பொல்லாதவென்றனைக்கை
தூக்கி கிருபைசெய்யும் தூயமுஹியித்தீனே. 90

பாவிகளையீடேற்றி பலன்கள் அளிப்பவரே
ஹாவியத்திலேசேர்க்கும் ஹராம்களைவிலக்கிவிட்டு
தாவி அமல்செய்திரையைச் சடையாமல்நாடிடவே
ஆவல்தந்துதவுமென்னை யாளுமுஹியித்தீனே 91

நஸ்ராணியானவரை நல்வளியிலாக்கியபின்
கூஷியாய் அப்தால்கள் கூட்டமதிலாக்கிவைத்தீர்
விசுவாஷம்கொண்டவிந்த வீணனையும் அப்படியே
விஷயாய்நடத்திவைப்பீர் வேந்தர்முஹியித்தீனே 92

உடுப்பெடுக்கப்போய்காதிம் உட்கார்ந்திருக்கையிலே
எடுப்பானபுடவையொன்று எண்ணினர்கடைக்காரர்
உடனே அவர்காலில் ஆணிஒன்றுதைத்தபின்பு
முடிகிவந்திரந்திடவே மாற்றுமுஹியித்தீனே 93

நகத்தில்துலங்குகின்ற நுட்பமதைநான்விளங்கி
அஹதில்உருவாய்விளங்கும் அட்சரமும் ஆராய்ந்து
வஹ்தத்திலேநிதமும் உகப்பாய்பனுவாகி
தகுதிபெறச்செய்யுமையா சங்கைமுஹியித்தீனே 94

அண்டமொடுபிண்டம் அடங்கலும்படைத்தாண்டு
தொண்டருளம்தன்னில் துலங்கிநிற்கும் மெய்ப்பொருளை
பண்டுகுருச்சொன்னபடி பழகிக்கிருபையுடன்
கண்டுகழிக்கவருள் காட்டும்முஹியித்தீனே 95

தீனுடையநாவாலே திருப்புகளைப்பெற்றவரே
வானில்மலக்கூத்து வெளிவகைபலதாய்நின்றிலங்கும்
கோனில்குடியிருந்த குற்றமற்றமெய்ப்பொருளே
ஞானத்திருக்குருவே யாதுமுஹியித்தீனே 96

வனத்தில்யிருக்கையிலே வண்டன் இப்லீசுமவன்
இனத்தாரும்வந்து இடர்விளைக்கத்தணித்து
கனத்தபயங்கரங்கள் காட்டிக்கலைத்திடுங்கால்
மனத்திடத்தோடிருந்த மன்னர்முஹியித்தீனே 97

மாய்ந்துருகிநெஞ்சந்தனில் மஹப்பூபைஆசைகொண்டு
காய்ந்துருகிகல்பதனில் ஹகீகத்துபார்வையினால்
சேர்ந்துருகிநின்றிலங்கச் செய்யவெனக்கிப்பொழுதே
கூர்ந்துகிருபைசெய்யும் குத்புமுஹியித்தீனே 98

செய்யிதாய்வந்தவரே சிறப்பானமெய்குருவே
மெய்யாகஉங்கள்பதம் மேன்மைபெறவேபணிந்தேன்
கையுதவிதந்தெனைநீர் காப்பாற்றிரட்சித்தென்னை
தய்யமெல்லாம்நீக்கிவைப்பீர் அண்ணல்முகியித்தீனே 99

அஸ்ருறுளென்றதிலே அடியேன்நடந்திடவும்
விஷயாய்அப்ஆலும் மேன்மைஅக்வாலதுவும்
குஷியானஅஹ்வாலும் குணமாயெனக்கருளி
அஷயானிலயிலெனை ஆக்கும்முஹியித்தீனே 100

ஷறபாம்ஷரீஅத்திலும் சாரும்தரீகத்திலும்
உறவாம்ஹகீகத்திலும் உற்றஇர்பானதிலும்
மறவாதருளியுடன் மற்ளியத்திலும்தரித்து
குறியாயிருக்கவருள் குத்புமுஹியித்தீனே 101

தன்சீரும்தஷ்பீஹும் சரியாகவேநிறுத்தி
தன்சீஹுமஹ்ளதனில் தரித்துநின்றுளப்பொழுதும்
முன்ஷெய்குச்சொன்னதுபோல் முழுதும்நடத்திடவே
என்ஸாஹிபேயுதவும் யேந்தல்முஹியித்தீனே 102

உயிரைபிலப்படுத்தும் உண்மைமறகாதவரே
கயிறுய்க்கமலமெனும் கல்பில்தரித்தவரே
பயிரதுபோல்தீனதுவைப் பதமாய்வளர்த்தவரே
சைறுஸ்ஸஹுர்க்கநனைச் சார்ந்தமுஹியித்தீனே 103

எங்களுக்குநாயகமே இறசூலின்புத்திரரே
சங்கைமிகப்பெற்றோர்க்கும் செய்யிதுவேதேஷிகரே
இங்கிதமாம்முத்மஇன்ன இசைந்திடச்செய்தாலெனது
பக்கமெல்லாம்போகுமையா பல்லுமுகியித்தீனே 104

செய்கற்றபேர்களுக்கு ஷெய்காகக்கைக்கொடுப்பீர்
மேதுவிந்த இல்மைஎல்லாம் மேலா எடுத்துரைப்பீர்
கைகூடும்காரியத்தைக் கனமாஎனக்கருளி
மெய்காத்தருளும்புகள் மேவும்முஹியித்தீனே 105

புல்லர்களைச்சாராமல் புலையாட்டிலாகாமல்
கல்லாதபேர்களுடன் கடுகளவும்கூடாமல்
அல்லாவெனும்இஸ்மில் அடங்கும்வகைகளெல்லாம்
நல்லாவரியவருள் நல்கும்முஹியித்தீனே 106

உலமாக்கள்அப்தால்கள் உங்களைப்புகள்ச்சிசெய்வார்
பெலமானஷெய்கோலிமார் பேணிப்புகழ்ந்திடுவார்
குலமதில்உயர்ந்தோரும் குத்பானபேர்களுமே
நிலையாய்நிதம்புகழும் நீதர்முஹியித்தீனே 107

அறுஷின்வனுப்பமதை அங்கமதில்கண்டுரைப்பீர்
குருஸின்சிறப்பதையும் குறியாகப்பார்வைசெய்வீர்
முர்சலிறசூல்ஷறஜ முழுதும்துலக்கிவைப்பீர்
தறஜாவுயர்ந்தவெங்கள் ஷெய்குமுஹியித்தீனே 108

அட்டதிக்குமுட்டிநின்று அழகாயொழிபரபி
இட்டமுடன்வாழ்ந்திருக்கும் இஸ்முல்அஃலமுறைவை
திட்டமுடன்கண்டுசிறப்புமிகப் பெற்றவரே
கட்டமதகற்றிவிக்கும் கவ்துமுஹியித்தீனே 109

உங்கள்இஸ்மோதிடுவோர் உறுதிமிகப்பெற்றிடுவார்
தங்கள்இஸ்மேஎனக்கு தஞ்சமெந்தவேளையினும்
மங்காதகீர்த்திபெறும் மஹ்பூபுநாயகமே
தங்காமல்வந்துதவும் சங்கைமுஹியத்தீனே 110

என்முகத்தைப்பார்த்திரங்கி இடுக்கங்களைப்போக்கி
நன்முகமாயெப்போதும் நான்செழித்திருந்திடவே
சன்மார்க்கநல்லறிவைச் சடையாமலேயருளி
துன்மார்க்கம்போக்குமைபா துய்யமுஹியித்தீனே 111

குழந்தைப்பாராயமதைக் குணகேட்டிலேகழித்தேன்
எழுந்தரர்ப்பாராயமதை இடும்புகளிலேகழித்தேன்
விழுந்தஇந்தக்காலத்திலே விரைவாகஓடிவந்தேன்
மொழிந்தருளையூட்டுமென்றன் முத்திமுஹியித்தீனே 112

உண்ணவுமேதின்னவுமே உள்ளாசைகொண்டுநிதம்
பண்ணவுமேவாணாலை பழுதாய்த்துலைத்துவிட்டேன்
எண்ணாதவெண்ணமெல்லாம் எண்ணிஎண்ணிஎன்மனது
புண்ணாகிப்போகாமல் பேணும்முஹியித்தீனே 113

முன்னாள்எலீன்மரத்தில் மயில்வேஷமாயிருந்து
முன்னவன்றனைதுதித்த முச்சுடராம்மெய்ப்பொருளை
தன்னிதயத்தாராய்ந்து தகுமானகாட்சிபெற
இன்னேரமெற்குதவும் யேந்தல்முஹியித்தீனே 114

வந்தெனக்கருளதனை வண்மையுடன்காட்டிவித்த
சொந்தக்குருவானவரை சுகூனில்யிருப்பாட்டி
விலிந்திகுகூட்டமதிர்ச் சேர்க்காதெனைக்காத்து
முந்தஹியாக்குமையா முத்துமுஹியித்தீனே 115

பார்வைநிலையதனில் பகாவாயிருந்துக்கொண்டு
மேருவெனதோன்றுமந்த மேடைதனில்னின்றாடும்
நாரிமுகம்பார்த்தவனை நான்மருவிகொள்வதற்கு
வாருமிதுசமயம் வள்ளல்முஹியித்தீனே 116

திக்குகளெல்லாம்ஒழிவாய் துலங்குந்திநமணியே
மக்கநபிபேரனென மணமாயுதித்தவரே
ஹக்கனருள்பெற்றோங்கும் காமில்முகம்மதுவே
இச்சணமெனக்குதவும் யேந்தல்முஹியித்தீனே 117

மஃறூபே மாமலரே மாற்றஒண்ணா மன்னவரே
தகுமான தறஜாவில் தரித்திருக்கும் நல்குருவே.
ஜிகமீதிலுள்ளவர்க்கு சிறப்பானமஃஷூறுகே
அகமீதெழுந்தருளும் அண்ணல்முஹியித்தீனே 118

தெள்ளியபஃதாதின் தேயத்துநாயகமே
கள்ளமனத்தோரவரின் கறையகற்றுந்தாயகமே
வள்ளலிறசூல்ஷறஜ வலுக்கவைத்தமாமதியே
சள்ளைகளைத்தீர்த்தருளும் ஷெய்குமுஹியித்தீனே 119

தாத்துல்லாவானதினில் தரித்த நல்சிபாத்துல்லா
காத்திடும் சிபாத்ததனில் கண்ட அஸ்மாவுல்லா
நேத்திரத்தில்நின்றிரங்கும் நிச்சயத்தையானறிந்து
தோத்திரம்செயவருளும் சோதிமுஹியித்தீனே 120

பார்க்குமிடங்களெல்லாம் பாவியிருப்பவரே
சீராயெவர்களுக்கும் சிறந்தகுருவானவரே
தீராதநோய்களுக்கு திவ்யமருந்தானவரே
நேராதரவருளும் நேஷர்முஹியித்தீனே 121

தாகங்கள் தீர்ந்திடவும் தய்யானருள்பெறவும்
ஆகம்தெளிந்திடவும் அடிமையருள்பெற்றிடவும்
சாகாமற்செத்திடவும் சமதைதெரிசித்திடவும்
வாகாயருள்புரியும் வள்ளல்முஹியித்தீனே 122

ஊதிர்வந்தஷெய்த்தானை யெரியும்படிசெய்துவைத்தீர்
மதுநிறைந்தசாடிகளை பணிசிறக்காவாக்கிவைத்தீர்
சதிச்செய்த அக்றபூவை செற்றிறந்துபோகச்செய்தீர்
கதியாய்எனைவளர்க்கும் ஒவ்துமுஹியித்தீனே 123

எல்லாஉஜூதுகளும் யில்லையெனக்கண்டபின்பு
நல்லான்உஜூததனை நலமாகஉண்மைகொண்டு
கல்லாவறிவுகளை கற்றுணர்ந்துகல்பதனை
நல்லவொளிவாக்கவருள் நல்குப்முஹியித்தீனே 124

ஆராய்ந்துபார்க்கையிலே அடங்கலும்பொய்சாரினணவே
நேராய்தெளியுதையா நிட்சயம்வேறொன்றுமில்லை
பூராயமாகவெங்கும் புகள்தங்கிநிற்குமொரு
பூறணத்தைபார்க்குமுறை பூட்டுமுஹியித்தீனே 125

தாரணியிலேயெவர்க்கும் தெளஹீதுவழிகாட்டி
பூரணமாம்மெய்ப்பொருளை புந்தியிலுணரும்படி
ஆறணத்தைக்கொண்டே அருள்புரிந்தநாயகமே
காறணம்விளக்குமெங்கள் ஒவ்துமுஹியித்தீனே 126

ஆதியருளைத்தேடி அழகிய ஜயிலானைவிட்டு
நீதவொலிமார்வாழும் நிகழ்த்தும்பஃதாததர்க்கே
காதலுடனேசென்று கல்விகளைகற்றுணர்ந்து
வேதநெறிகாட்டிவைத்த வேந்தர்முஹியித்தீனே 127

பதிஞ்க்கு இல்முகளும் பன்பாககற்றபின்பு
துதியாயெவர்க்கும்பிர சங்கமிகத்தெளிவாய்
மதியோடுசெய்துநல்ல மேன்களைபெற்றவரே
கதியாய்எனைவளர்ப்பீர் ஒவ்துமுஹியித்தீனே 12

உலமாக்களெல்லோரும் உருதியுடனேயுமது
பெலமானபத்வாவை பேணிமிகப்போற்றிசெய்வார்
கல்மெடுத்துதங்கள்கையால் கருத்தாய்வரைந்ததெல்லாம்
தலமெங்குஞ்சென்றுதையா செய்குமுஹியித்தீனே 129

யீனமணுகாதநல்ல இலங்கும் இற்பானுடைய
மோனமுறும்இல்மயெல்லாம் முஹப்பத்துடயோர்களுக்கு
தேன்பொழிந்தவாரார்ச் சொரிந்தீரருள்பெருக
யேனிரங்கவில்லை இன்னம் யேந்தல்முஹியித்தீனே 130

நானிரந்துகேட்பதெல்லாம் நலமானஇல்மதைத்தான்
வான்கடந்துவந்தவெங்கள் வருஷைநபிதம்பொருட்டால்
கோனுரைத்தச்செல்லதனை கொண்டுமிகுவாள்வதனை
யான்பெறவருள்புரியும் யாதுமுஹியித்தீனே 131

காத்திருந்தேயுங்கள்பதம் கல்பில்தரித்திடுவேன்
நேத்திரத்திலேசிதமும் நானெடுத்துவைத்திடுவேன்
தோத்திரங்கள்செய்தே துணையாய்புகழ்ந்திடுவேன்
காத்திர்மாயாளுமென்றன் ஒவ்துமுஹியித்தீனே 132

புலன்ஐந்தையும்அடக்கி புகளோங்குமெய்ப்பொருளை
நலமாகக்கண்காட்ஷி நான்கண்டருள்பெறவே
உலமாக்கணாயகமே உவப்புடனே நீரெனக்கு
பெலமாய்தலீனுசெய்யும் பகீருமுஹியித்தீனே 133

ஆலம்படைத்தாழும் அல்லாவின்பாலெனக்கு
மேலாம்துஆக்கள்செய்து மேன்மையருள்செய்வதுடன்
காலன்உயிரதனை கைப்பற்றும்வேளையிலும்
பாலனுக் குதவிமிகப்புரியும் முஹியித்தீனே 134

கத்தன்உதவியினால் காதிரிய்யாவென்னுமுங்கள்
முத்திதரும்தரீகதனில் முகநோக்கிநானிருந்து
நித்தனைப்புகழ்ந்தேற்றி நீதமுடனேயிருக்க
மெத்தக்கிருபைசெய்யும் மேன்மைமுஹியித்தீனே 135

வணங்காமலேநிதமும் வன்னெஞ்சனாயலைந்தேன்
இணங்காச்செயல்கேடும் இடும்புகளும்பாதகமும்
பணங்காஷிநாஷைகளும் படிந்திருக்குமென்றனக்கு
சுணங்காமலேகிருபை செய்யுமுஹியித்தீனே 136

சண்டிப்பயல்அடியேன் சாரும்நிலைகாணாமல்
தெண்டித்துமதடியை தேடிமிகவோடிவந்தேன்
அண்டிஎனைநீரணைத்தே யனுக்கிரகம்செய்துசொந்த
தொண்டனெனக்கண்டருளும் சோதிமுஹியித்தீனே 137

எனக்கும்என்மக்களுக்கும் என்சுற்றத்தார்களுக்கும்
எனையுகந்தபேர்களுக்கும் என்கைபிடித்தவர்க்கும்
தினமும்அருள்புரிந்து தீங்கைவிட்டும்காப்பாற்றி
மனமிரங்கியாண்டருளும் மன்னர்முஹியித்தீனே 138

எல்லாஉலகங்களும் எவ்வகைப்படைப்புகளும்
சொல்லாலும்கல்பாலும் தோத்திரங்கள்செய்திரஞ்சி
நல்லுதவிகேட்குமெங்கள் நாதாந்தமெய்ப்பொருளால்
வெல்லும்துஆவிரப்பீர் வேந்தர்முஹியித்தீனே 139

ஹிஜ்ராத்தி ஆயிரத்தி இருநூற்று எண்பத்தெட்டில்
ஹல்றத்து ஷஹ்றர் ஷஃபான் தெய்திபதினேளதனில்
றஹ்மத்திரங்கும்வெள்ளி ரோம்ஜும்ஆவொக்த்தில்
நிஃமத்துமாலையது நிறப்பமுஹியித்தீனே 140

அல்லாவருள்வாழி அஹ்மதுர்றசூல்வாழி
நல்லன்பியாமார்கள் நாள்தோருமேவாழி
குல்லவுலியாக்களுடன் குத்புகளுமேவாழி
எல்லாப்பெரியோரும் எப்போதுமேவாழி 141

முஃமீன்குலத்தோர்கள் முஸ்லீம்களும்வாழி
ஆமீனெனஉரைப்போர் அனைவோர்களும்வாழி
கோமானருளதனைக் கொண்டாடுவோர்வாழி
ஈமான்தனைத்திருப்போ ரெல்லோர்களும்வாழி 142

இன்பமுடனின்னிஷையை இஷைப்போர்களும்வாழி
அன்பூாயதைக்கேட்கும் அன்பர்களும்வாழி
முன்பார்வைநீக்கி முனிப்போர்களும்வாழி
பின்பார்வையார்பார்க்கும் பெரியோர்களும்வாழி 143

" முற்றிற்று பெற்றது. "

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

## 8-வது பாகம்.

# மஹ்மூது மாலை.

### நேரிசை வெண்பா.

தேன்பொழில் சூழ்மேறுபதி செல்வர் ஹஸன் முஹ்யித்தீன்
தான்மகிழ்ந்த புத்திரனும் ஸதகென்போன் கோனநபிமேல்
மஹ்மூதுமாலைதனை மனமுவந்து பாடுதற்கு
ஜகமாழ்வோனே யருள்நீதா. 1

போதமருளெம்மிறசூல் பொன்னடியும் குலபாக்கள்
போதடியும் அலியருளும் பாலகாராம் நீதிஹஸன்
தம்மொடுஹுஸைன் செஞ்சரணம் சம்முஹ்
யித்தீன் சரணம் கம்பிடத்திற்சூட்டுது மெக்காலும். 2

சங்கைசுலைமானொலியின் தவப்பலனாய் வந்துதித்த
தங்குபுகழோங்குமொலி ஸல்லாஹுத்தீன் செங்கமல
பாதவிணைகம்புமிந்த பாவிமுகம் பார்த்திரங்கி
போதமருள் நீபுரிஇப்போது. 3

### விருத்தம்.

ஐயமெல்லாமகன்றிட செய்தபின்
உய்யுணர் பொருளூட்டி வளர்த்தவன்
வெய்யிதாகிய ஸர்க்குரு ஐகரு
வியியினைப்பதம் சென்னியிற்சூடுவேன். 4

எர்க்குஞானம் இசைத்தாங்காட்டிய
தர்க்கலைபதிசார் பீர்முஹம்மதின்
பொர்க்களளல்களை போற்றியென்சென்னிமீ
திர்க்கொண்டிப்புகழ் சீருடன் செப்புவேன். 5

## நான்மூகம்.

அஹதிய்யத்தும் வஹ்தத்ததும் வாஹிதிய்யத்ததுவும்
அழகாக வாகியுலகாழும் மஹ்றமூதே 6

பஹ்றூனபாவங்களிர் பழகாமற்காத்து
பகாவான வணக்சமதில் பழக்கும்மஹ்றமூதே. 7

துரூபுஎன்றவூஸ்வதைக்கொண்டு துலங்கும் இன்ஸான்தனில்
தூயஒழிவாகவந்த தூதர்மஹ்றமூதே. 8

துணிந்த மனத்தெழிவு கொண்டுதுலங்கும் அல்ஹம்தான
சூட்க்ஷமதை பெற்றுநின்ற துய்யமஹ்றமூதே. 9

ஜல்லீஎன்றதிக்றைகொண்டு சங்கயானகல்பை
நல்லவேஜலால் ஜமாலில் ஷூட்டும் மஹ்றமூதே. 10

ஹக்கான சொல்லதனுர் கஷடதனைமாற்றி
கமலமதிலொழியதனை காட்டும்வஹ்றமூதே. 11

கல்குகளையாழுகின்ற குதுறத்துடையோனை
கல்பதனிலே நிதமும் கருதும் மஹ்றமூதே. 12

தறஜாவாலுயர்ந்த நல்ல தௌஹீதைசேர்ந்த
தல்வீனும் தம்கீனும் தங்கும் மஹறமூதே. 13

ராத்துடைய வலுப்பமதை தம்மகத்திர்பூட்டி
தரித்திடுநல்முத்ம் இன்னுத்தரித்த மஹறமூதே. 14

றப்புடைய கல்கையெல்லாம் செப்பமுடன் காத்து
நிஃமத்துடன் றஹ்மத்தையும் நல்கும்மஹ்றமூதே. 15

ஸகாத்துமுதல் சகலதையும் ௳டயாமற்கொடுத்து
ஸமதுடைய சமுகமதில் சார்ந்த மஹ்றமூதே. 16

ஸீனென்னும் ஸிர்றில் நின்றும் ஷிறப்புபெற்ற நபியாய்
ஜிகத்தையெல்லாம் செங்கோல்செய்தாளும்மஹ்றமூதே 17

ஸிர்றூனகல்குதனில் சிறந்தொழிரும் றாஹும்
துர்த்தஃல்லைபளாவாய் துலங்கும் மஹ்றமூதே 18

சிறப்பானபாதமதில் குறடுதரிப்பதுடன்
சமட்டிஅறுஷைறிவந்த சங்கைமஹ்மூதே 19
மாறுசெய்தபாவிகளை வல்லோன்முன்சென்று
சீருடன்மன்றாடி செர்க்கம்சேர்க்கும் மஹ்மூதே 20

தாஸீமெனும்பெயர்தரித்து தீனருளவந்த
திருமணியேயுமைபுகழ்வோம் தினமும் மஹ்மூதே 21
பாத்தினிலும் லாஹிறிலும் பலன்களையான்பெறவே
றப்பிடம்மன்றாடுமெங்கள் றாஜர்மஹ்மூதே 22

ஐனதிலேஇலங்குகின்ற அருளதனைகொண்டு
அல்லாவுக்காக றட்க்ஷித்தாழும் மஹ்மூதே 23
கௌதுல்அஃளமாக என்றன் கருத்திலுறும்பொருளே
ஓங்காரவட்டமதிலுறைந்தமஹ்மூதே 24

பாத்திமத்தின்நாயகர்க்கு பகர்ந்தவஸிர்றை நலமாய்
பண்புடன்சீகட்டவர்களுக்கும் பகரும்மஹ்மூதே 25
அகிலமிசையுறுமனுக்கள் அகந்தெழியும்பொறுட்டு
ஆவலுடன்நேர்வழியி லாக்கும் மஹ்மூதே 26

குன்னென்றஹற்புகொண்டு குணிப்பிலடங்காத
கல்கையெல்லாம் படைத்தவனின் காதல்மஹ்மூதே 27
லாவெனவேநப்யாக்கி லாஹிறெல்லாம்போக்கி
தாவிதிக்றெப்பொழுதும் செய்யும்மஹ்மூதே 28

முன்னிலயில்முத்திதரும் முச்சுடராதாக
குன்னென்றெழுந்தறுளும் கறுணைமஹ்மூதே 29
அருகிநுக்தாகி நுட்பமதுவாகி
ஆறுஇஐம்பத்தொன்றை ஆழும்மஹ்மூதே 30

யாஹூ-ஏவெனும்திக்றைகொண்டே யாதுடனென்றும்
ஹய்யுன்கையூமானறப்பைப கருதும்மஹ்மூதே 31
வாஹிதானறப்பிடத்தில் வண்மயுடன்நாளை
வழக்காடிரட்க்ஷித்திடும் வள்ளல்மஹ்மூதே 32

ஹாவாகிஹூவாகி ஹீயதுவுமாகி
ஹாலிருகிகல்பதனை காக்கும்பஹ்மூதே 33
லாமலிபாயிருக்குகின்ற லாமக்கானைநோக்கி
மேன்மையுடன்திகிறதனை மேவும்மஹ்மூதே 34

## வேறு

அஞ்சுமோராறும் அடங்கியதீனெனும்மார்க்கத்தை மிக
அன்புடன் ஆசைவைத்தாதியைபுகழ்ந்துக்கொள்நப்ஸே 35
ஆதுவருகிப தய்யமுஹம்மதை கருத்தில்வைத்து
துப்பரவான அமல்களைத்தேடிக்கொள்நப்ஸே 36

ஐந்தொகுத்தானதி லானபதினேழுறக்அத்தும் வெகு
அன்புடனுதிமேல் ஆசைவைத்தேதொழுநப்ஸே 37
வஞ்சியராசைமபக்சுத்தை கல்பைவிட்டோட்டி துன்யா
மாய்கைகளொக்கையும்மாய்ந்திடச்செய்துக்கொள்நப்ஸே 38

பற்லுஷற்துகள்சுன்னத்தைபேணிக்கொள்நிதமும் உன்னை
படைத்தோன்மேலாசையாய்பலஇல்மும்படித்துக்கொள்நப்ஸே
கலிமாபொருள்களை கருத்துடன்நல்லவாராய்ந்துதினம்
ஹக்கனுக்காகஉன்கல்பை திருத்திக்கொள்நப்ஸே 40

மௌத்துடன்கப்றையும் மஹ்ஷற்முதலியயாவையும் நீதான்
மறந்துதுன்யாவினில் மற்றுதாய் போகாதேநப்ஸே 41
ஆதியோடந்தம் அனைத்தையும்அழகாயமைத்திடும் நம்ம
ளாதியை அன்புடன்நம்பி நடந்துக்கொள்நப்ஸே 42

நாயனருள்பெற்ற நல்உலமாக்களை யடுத்துவெல்லும்
நல்லறிவானதை நாடிபடித்துக்கொள் நப்ஸே 43
நாலாம்நப்ஸில் நயம்பெறும்ருட்கூஅத்தை யறிந்து அதில்
நாளும் மனங்கொண்டடங்கியிருந்துக்கொள் நப்ஸே 44

ஏவல்விலக்கல்யெவர்க்குமே செய்தருள்பூட்டி கெட்ட
எண்ணங்களொன்றும்வாராமற் தடுத்துக்கொள்நப்ஸே 45

ஜாதிபலவகையாக ச்சமைந்தாடும்பொருளை உன்றன்
சிந்தையிலென்றும் நீ சிந்தித்துப்பார்த்துக்கொள் நப்ஸே 46

முன்பெரியோர்களுரைத்தமுறைப்படிநிதமும் மனம்
வைத்தழகான தலத்தில் வணங்கிக்கொள் நப்ஸே 47

ஹக்கன் உனக்குகொடுத்த நிஃமத்தில் அழகாய் ஏழை
கட்குங்கொடுத்தே யிரங்கிக்கிருபைசெய் நப்ஸே 48

துன்யாவைநம்பியே தோஷிகளாய்ஞானந்தம் அதின்
துன்பத்தைவிட்டு நீ தூரவிருந்துக்கொள் நப்ஸே 49

வஞ்சகம்சூதொருநாளு மனதில்வையாதே நாளை
வன்னியிற்றள்ளி வருந்தசெய்வார்களே நப்ஸே 50

திக்றதைஎப்போதும் சிந்தையிற்பூட்டிக்கொண்டாடி நல
தேடிநல்லோர்களை சேர்ந்துநடந்துக்கொள் நப்ஸே 51

கபுரின்வருத்தம் கஷ்க்கணைத்தையும் நினைத்தே உன்றன்
கண்மணியாகிய ஹக்கைப்பார்த்துக்கொள் நப்ஸே 52

அல்லாவுக்காக அமலைகலப்பறலாக்கியே இரு
ளெல்லாமகற்றி இணங்கிவணங்கிக்கொள் நப்ஸே 53

சித்தானவாசலைகத்தோனுதவியினாலே மெல்ல
தந்திரமாகதிறந்துபுகுந்துக்கொள் நப்ஸே 54

கல்பைதிறக்கும் கலிமாப்பொருடனையறிந்து மனக்
கண்ணைக்கொண்டே யொழிகாணமுயர்ச்சிசெய் நப்ஸே 55

அமலினைபறுந்தாக்கவந்த கன்னாஸனாகலைப்பான் அவன்
அண்டஒட்டாமல் அடித்துதுரத்திக்கொள் நப்ஸே 56

வேதியர்சொல்கின்ற வஃலுமுறுதியும்கேட்டு அந்த
வாறழகாய்அமல் வல்லோனுக்காகசெய் நப்ஸே 57

உறாஜா நுஸலை யறிந்து தெழிந்துபகாவிலே உன்றன்
உட்பொருளோடுநீ மூச்சையுமேற்றிக்கொள் நப்ஸே 58

துன்யாவினுடைமயக்கமெல்லாம் துலைத்தோட்டி எங்கள்
தூதர்முஹம்மதின்சொல்லை தரித்துக்கொள் நப்ஸே 59

பொல்லாப்பும்கோளும் பொறாமையுஞ்சூதையும்நீக்கி கல்லை
பேணிநீர்கலிமாபொருளை ஷஹாதத்துசெய்நப்ஸே 60

கலைகளறிந்துகடுங் காமலீலையை பூட்டியேநல்ல
காட்ஷியினாலுன் கலக்கத்தை மாற்றிக்கொள்நப்ஸே 61

எட்டுடன்பத்தை எடுத்துநாஸூலதில்தாக்கி பின்பு
இன்பமாய்க்கையூமை எற்றிக்கொளென்றுமேநப்ஸே 62

சித்துவிளைகின்றதானமதாகிய கல்பிலே எங்கள்
தூய்யமுஹம்மதர் ரூகூத்தை நாட்டிக்கொள் நப்ஸே 63

## வேறு.

அஹ்மதுவில்துலங்குமொழி அஞ்சுவர்ணமாக
ஆலமதிலருள்காட்டும் அல்ஹம்துலில்லாஹி 64

கோலமெல்லாமாகி இன்னுங்குலப்புலவுமாகி
குற்றமில்லாதிருக்குமது அல்ஹம்துலில்லாஹி 65

காரணமாய்வந்தெமது கல்பலதனைகாற்று
ஆரணத்தாரொளிவதுவே அல்ஹம் லில்லாஹி 66

நீதிநுகத்தலிபுக்குள்ளே நீண்டசுளிவட்டம்
சாதிச்செல்லாம் ஸமதொளிவாம் அல்ஹம்து லில்லாஹி 67

மலக்கூத்துவென்னுமொருமைதானில் அதுவே
கலைக்கூத்துப்பொருள்விளக்கும் அல்ஹம்து லில்லாஹி 68

சித்தானவெட்டவெளி சேர்ந்திருப்பதெங்கள்
செய்யிதுமுஹம்மதுவே அல்ஹம்து லில்லாஹி 69

அறியாத சிறுபயலை யருகிலேயழைத்து
அன்புடன்ரட்ஷிக்குமது அல்ஹம்து லில்லாஹி 70

விபரமொன்றுமறியாத வீணனெனக்கு
அபயமதேயன்றியில்லை அல்ஹம்து லில்லாஹி 71

ஹக்கனருள்காட்டிவிக்கும் காரணமாம்பொருளை
கடலயதில்நாகாட்டும் அல்ஹம்து லில்லாஹி 72

நாவினுணிநடுவிருந்து நடனமாடும்பொருளை
நன்றிபுரிந்ததுதுலக்கும் அல்ஹம்து லில்லாஹி 73
நாமானறாஹதனை நலமுடனேக்கூட்டி
நம்மெதிரிர்க்காட்டிவிக்கும் அல்ஹம்து லில்லாஹி 74

எல்லாபடைப்பினுள்ளும் யேகமயமாகி
எங்குமது இலங்கிநிர்க்கும் அல்ஹம்து லில்லாஹி 75
வேதாந்தம்ஞானந்தம் கண்டேமனம்கொண்டு
மாலாகிலது தெரியும் அல்ஹம்து லில்லாஹி 76

கிட்டாதபொருளதெனும் கருவானமூச்சில்
கட்டாயமது தோணும் அல்ஹம்து லில்லாஹி 77
முடுகும்படியேறுதர்க்கு முடுகுச்சுளிமுனையில்
முட்டானவழியைத்தரும் அல்ஹம்து லில்லாஹி 78

தௌஹீதின்பொருளதனால் தினமுந்தனிமையானை
தெரிஷனைச்செய்வோர்க்குதவும் அல்ஹம்து லில்லாஹி 79
நாஸூத்தும்மலக்கூத்தும் நலமாகத்தாண்டி
நாமாகவே நாமாகலாம் அல்ஹம்து லில்லாஹி 80

பழுதாகியழியாமல் பெலமானக்கலிமா
பொருளதனைமனதிலறி அல்ஹம்து லில்லாஹி 81
செக்காமெனறாஹானதுச் சுளியாகியமுனையில்
திரும்பும்வகைதனைநோக்கி வா அல்ஹம்துலில்லாஹி 82

அல்லாவருள்கொண்டேயவன் அற்ஷானதிலேறி
அழகாகியதலம்சேறுவாய் அல்ஹம்துலில்லாஹி 83
முஸ்லிம்களைநேர்காட்டிய முத்தேமுஸ்தபாவே
தஸ்லீமினினீர்ச்சேர்பீரானை அல்ஹம்துலில்லாஹி 84

திருவாகியவொளிவீஷிடும் சிறப்பாகியதீனை
மருவும்படிவழிகாட்டினீர் அல்ஹம்துலில்லாஹி 85
கருவாம்பொருளதனைத்தினம்கல்பில்தெரிஷித்தால்
கமலத்தொழிவதுதோன்றிடும் அல்ஹம்துலில்லாஹி 86

திக்ருனைதனைஎன்னேரமும் சிந்தித்திடுவீரேல்
மக்ரூகிய இருள்நீங்கிடும் அல்ஹம்துலில்லாஹி 87
ஷாகாத்ததும் வேகாத்ததும் ஷரமானதாம் நூறும்
சீராகியவருளாமது அல்ஹம்துலில்லாஹி 88

ஏகாந்தமான பரவெளியிலெனையாக்கி
சாகாதவரமருளும் அல்ஹம்துலில்லாஹி 89
பிணிநீக்கியேகலிமாப் பொருள்பெலங்கொண்டெனைக்காத்து
அளியாதநர்பலன் நல்குவீர் அல்ஹம்துலில்லாஹி 90

ஞானப்பொருள் தந்தெனை எப்போதும் அந்நிலையில்
தேறுமருள் புரிவீர்நிதம் அல்ஹம்துலில்லாஹி 91

## வேறு

அதிபதியாயுலகமெல்லாம் ஆண்டிடவே வந்த
அஹ்மதூர் றசூலொளிவை அமைத்தாளும்ஹக்கே 92
கலைவுசெய்யும்இப்லீசின் கலைவைவிட்டும்நீக்கி
கதிரொளிவைகமலமதில் காட்டியருள் ஹக்கே 93

குபுரதனைகல்பதனில் சருதாமல்நாளும்
ஹபீபிறசூல் தீன்வழியிலாக்கிவிக்கும் ஹக்கே 94
கண்டயில்ணைமகல்பதனில் கருதிபயந்தழுது
கறைகளெல்லாம் நீக்கவருள் காட்டிவிக்கும்ஹக்கே 95

பேச்சுமூச்சுப்பார்வைமுதல் பலதயுமேநன்றாய்
பேதகமில்லாதறியும் பெரியவனே ஹக்கே 96
வாய்கண்நாசி காதடைத்து வாகுடனே நோக்கில்
பாயுமதுத்திவலைதரும் பாத்திபனே ஹக்கே 97

மாயமனமதையொடுக்கி மௌனமுடனிருந்து
நேயமுடன்யாஹூவினில் நயமருளும்ஹக்கே 98
பாதகனும்ஷெய்த்தானின் பளிப்பதனைவிட்டும்
நீதிரிறசூல்பொருட்டால் நிதங்காக்கும்ஹக்கே 99

முன்னொளிவாவிலங்குகின்ற முழுமணியன் முன்பில்
முச்சுடராய்த்துலங்கும்படி வகையருளும் ஹக்கே 100
முக்கோணவட்டமதில் முச்சுடரோரலிபாய்
முளைத்தெழும்பச்செய்தருள்வாய் முன்னவனே ஹக்கே 101

உலகமதுஜலமதிலே உதித்தெழும்புஞ்சுளிபோல்
உண்மையில்லாப்பொருளெனவேயுணர்வருளும் ஹக்கே 102
முங்கவறியாமடையன் முத்தெடுக்கக்கடலில்
முயல்வதுபோலாக்காமல் மோட்சந்தரும் ஹக்கே 103

சுளியாகும்முனையதுவின் சூட்சமறியாமல்
சுளலெவனையாக்காமல் சுகமருளும் ஹக்கே 104
சித்திதரும்கலிமாவின் சிற்றுகளைக்காட்டி
சிறியவனின்மனக்கவலை தீர்த்தருளும் ஹக்கே 105

ஹாவெனவும்ஹூவெனவும் ஹீயெனவும்நின்ற
காரணமாமுட்பொருளே காவலனே ஹக்கே 106
சீனசிர்ரதனை சிந்தையிலாராய்ந்து
ஷிறப்பானஷறவுடனே சேரருளும் ஹக்கே 107

பத்துடனேஎட்டயுமே பண்புடனேயோதி
பழகுவதற்கென்னாளும் பலனருளும் ஹக்கே 108
பாயுமெனதீராறு கலையதனில் இஷ்கை
பதித்தருளைக்காண்பதற்கு பதவிதரும் ஹக்கே 109

மனதிலுறும்ஆங்காரமாய் கையெல்லாம்நீக்கி
மணமானதிக்றதுவின் வழியருளும் ஹக்கே 110
மெய்மனத்தோர்கண்களுக்கு வெட்டவெறும்பொய்யாய்
வெளியாகும்உலகாசை வீணலவோ ஹக்கே 111

அண்டமுடன்பிண்டமதும் அவற்றிலுறும்பொருளும்
அகந்தெளிந்தோர் அகமெனவே காண்பார்கள் ஹக்கே 112
அல்லதுவாம்மஹ்மூதின் அழகொழிவைநாளும்
அகமதிலேகாண்பதற்கு அருள்புரிவாய் ஹக்கே 113

வீணாபலபசமும் வந்தெனையேசூழ்ந்து
வீணாக்கிடாதென்னைக்கார் மேலவனே ஹக்கே 114

நேரான அமலதனைநேஷமுடன்செய்து
நிஃமத்துடன்நான் வாழவே நேர்செய்யும்ஹக்கே 115

களவுகொலைவஞ்சகம் பொய்காமியபற்றெல்லாம்
களைந்தருளைநான் தினமும் காணவருள்ஹக்கே 116

ஹமெனும்நல்திக்றதனை கஷ்டறவேகல்பில்
கூட்டும்வகை காட்டியருள் கிருபையுடன்ஹக்கே 117

சித்தான நூறதுவும் திருமனமும்நப்சும்
சத்தானபில்பா இல்மப்ஊலாய்ஹக்கே 118

யேயதையும் ஹேயதையும் வாவதையும்கூட்டி
நேபமுடன்யிருப்பவரை நேர்காட்டும்ஹக்கே 119

நுக்த்தாவின்வரிசைகொண்டு நூறுவெளியான
நுட்பமதைக்காட்டிவைத்த நாயகனே ஹக்கே 120

கருவானகருவுக்கெல்லாம் காரணமாய்வந்த
காரணரும் அஹ்மதொழி காட்டிவைத்தஹக்கே 121

கைருடனேஷர்றதுவும் கர்ப்பனையேயன்றி
காரியம்வேறொன்று மில்லைகாவலனே ஹக்கே. 122

நலவைஎடுத்திடறதனை நீக்கிஅமல்செய்து
நஸீஹதறஜப்பேணும்படி நயம்புரியும்ஹக்கே. 123

தக்வாவின்நிலையுடனே சீர்பெறவேநின்று
தௌஹீதை நாடுதற்குதயவருளும்ஹக்கே. 124

தன்னையறியாதவர்கள் சஞ்சலமே மேவி
தம்வினையைத்தாம் நினைத்துதயங்கிடுவார்ஹக்கே, 125

சுளிமுனையில்தோற்றுகின்ற சூட்சமதைநாளும்
சுகமுடனேகாட்டிவைப்பாய் தூய்யவனே ஹக்கே. 126

சரமதனைநினைஉடனேச் சடையாமர்பூட்டி
சாதனைச்செய்திருப்போரைச் சார்ந்திருக்கும்ஹக்கே. 127

எழியவனின் மனக்கவலை யடங்கலையுந்தீர்த்து
எனக்கருளைக்காட்டியருள் எப்பொழுதும்ஹக்கே. 128

## றஹ்மான் கண்ணிகள்.

ஈமானுறுதிகொண்டுமெப்பொழுதுமேயுனது
நாமமதைபோற்றிசெய்ய நயமுதவும்றஹ்மானே. 129

ஏழைமனத்துயரம் எப்போதும்தீர்த்துவென்னை
வாழ்ந்திருக்கச்செய்தருள்வாய் வல்லவனே றஹ்மானே. 130

குற்றம்மிகச்செய்வோர்கள் கூட்டமதிற்சேர்ந்துநின்று
நற்றவத்தைநாடாமல் நான்மறந்தேன் றஹ்மானே 131

பட்டமரம்போலே பலகிழந்துபாவியிவன்
கெட்டமனம் விட்டகலகிருபைபுரி றஹ்மானே. 132

துட்டருடனேசேர்ந்து துன்மதியிலாகாமல்
இட்டமுடன்யீமானை இணங்கவருள் றஹ்மானே. 133

வஞ்சமனங்கொண்டே வளக்கோரம்பேஷாமல்
நெஞ்சகத்தில்நேர்நிலைமை நிறுத்திவைப்பாய் றஹ்மானே. 134

பாதகங்கள்செய்து பழிமோஷமாகாமல்
நீதமதிர்சேரவருள் நித்தியனே றஹ்மானே. 135

கெட்டகுணமெடுத்து கிருபை''ற்றுப்போகாமல்
திட்டமுடன்யீமானை திருத்திவைப்பாய் றஹ்மானே 136

அஹதியத்தின்சிற்றதனை அனுதினமும் ஆராய்ந்து
வஹ்தத்திலே தெளிவுதவி செய்வாய் றஹ்மானே. 137

சுகூனவட்டமதில் சுஜூதுசெய்து உன்தாத்தை
ஷஹூதுசெய்யவே யருள்வாய் துய்யவனே றஹ்மானே. 138

முத்தாணமுச்சுடரை முக்கோணவட்டமதில்
சித்தாய்துலங்கவருள் செய்வாய் றஹ்மானே. 139

செற்றிறந்துபோகுமுன்னே சிறப்பானசிர்றதுவை
நற்றூசைசகொண்டேநான் நாடவருள் றஹ்மானே. 140

பத்தோடிரண்டுகலைபரிவாய் நடக்குமுறை
தத்துவத்தைகண்டறிந்து தொழுவேன் றஹ்மானே. 141
பாழாயுடலெடுத்தே பழிபாவம்செய்தவிந்த
யேழைதனக்குன்னையன்றி எவருமில்லை றஹ்மானே. 142

பாவமெனும் நோய்களுக்கு பலன்கொடுக்கும் ஔஷதமாய்
தாவிவந்த தௌபாவை தந்தாள்வாய் றஹ்மானே 143
நீயேபிழைபொறுத்து நேர்வழியிலாக்கி என்னை
நீயேஸாஜுதுகிலேநிறுத்தி வைப்பாய் றஹ்மானே 144

ஷுக்றுமிகவே செய்து சடயாமலெப்பொழுதும்
திக்றுதிலே நிர்க்கவருள் செய்வாய்றஹ்மானே 145
சக்கறத்துவேளைதனில் சங்கையுடனே கலிமா
திக்கிருய்முளங்கிடவே செய்வாய்றஹ்மானே 146

தீனருளைக்காட்டிவித்த தெவிட்டாததெள்ளமுதே
ஞானச்சுடரேயெனது நாயகனே றஹ்மானே 147
வானேள்புவியேழும் வழங்கும்மதிர்மதியும்
தானாயிலங்கிநிர்க்கும் தனியவனே றஹ்மானே 148

மலக்குகளும்மாந்தர்களும் மற்றுமுள்கல்குகளும்
துலக்கமுடனே வணங்கும் துதிக்குரிய றஹ்மானே 149
இல்மேதுமேஅறியேன் இலங்கும்அமல்தானறியேன்
நல்லுதவிசெய்மஹ்ஷற்நாளையிலே றஹ்மானே 150

வெம்பிப்பயந்தழுதேன் வேதாந்தமெய்ப்பொருளே
தம்பம்உனையன்றியில்லை தானவனே றஹ்மானே 151
சாழாயப்பாடானேன் சஞ்சலித்தேன்நெஞ்சகத்தில்
பாழாம்பவங்களினால் பயந்தேன்றஹ்மானே 152

கபுரின் அதாபைஎண்ணி கலங்கிமனம்பேதலித்தேன்
தவறுதலொன்றில்லாமல் தர்க்காப்பாய்றஹ்மானே 153
அங்குவந்துகேட்கும்ரண்டு அழகாமலக்குகட்கு
தங்கமொழிசொல்வதற்கு துணிப்பருள்வாய்றஹ்மானே 154

ஆலம் அற்வாறதிலும் அவனியிலும் மஹஷறிலும்
மாலாகவேயுனை நான் மருகுவேன் றஹ்மானே 155
இரந்துநான்கேட்டதுஆ எல்லாம்பொருத்தருளி
புரிந்தாதரித்தருள்வாய் புண்ணியனே றஹ்மானே 156

## [முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்து]

ஏழைகட்கெல்லாம் இரங்கவல்லோர்
இறையருள் நல் குதுபாகவந்தோர்
சாழுயபட்டுச்சலித்தோர்க்கு சற்குருவாம்முஹியித்தீனே 157
நாடினபேர்கட் குதவிசெய்வோர்
நாட்டமதை நிறைவேற்றிடுவோர்
சாடும்வினைகளை நீக்கிடுவோர் சங்கையுடன்முஹியித்தீனே 158
தொட்டமுசீபத்தைத்தட்டிடுவோர் தோஷத்தனங்களைப்போக் [கிடுவோர்
பட்டயம்பெற்றஒலிமாரில் பதவிபெறும்முஹியித்தீனே 159
பட்டமரத்தை துளிர்க்கச்செய்தோர் பாங்கானதீனையிலக்கவை [த்தோர்
துட்டகுபிரையடக்கிவைத்தோர் தூய்யஒலிமுஹியித்தீனே 160
சங்கடப்பட்டுசலித்தோர்க்கு சார்ந்தப்பிணிகளை தீர்த்திடுவோர்
தங்கடமாற்றி தமதருளை தந்துதவும் முஹியித்தீனே 161
சந்ததியில்லாதபேர்களுக்கு சந்ததியீந்துசலிப்பறுத்தோர்
சந்தோஷமாய்புகள்பாடி டவேதயவுசெய்வீர்முஹியித்தீனே 162
சிந்தைதெளியவழிகாட்டும் செய்யிதுவங்கிஷமான திலை
வந்தஒலிக்கெல்லாம் நாயகமேவள்ளலையா முஹியித்தீனே 163
முத்தொடுபச்சை பவளமதாய் முக்கோணவட்டத்தின் மேடை [யிலே
சித்தாயெழுந்துருவாய்சமைந்தசெய்யிதுயாமுஹியித்தீனே 164
காதிரியாவானகாரணரே கத்தனொளியிலுதித்தவரே
மாதவமோங்கியமாமணியே மஃஷூகுயாமுஹியித்தீனே 165
சீராகயேழைமுகம்பார்த்து சிந்தையினாசைநிறைவேற்றி
பூராயமாயெனையாழவந்த புண்ணியர் யாமுஹியித்தீனே 166

அஞ்சுமோராறும் அறிந்துநிதம் அன்புவைத்தாதியை நான்தொ
[ழுவே
தஞ்சமானன்றனையாண்டருளும்சர்குருயாமுஹியித்தீனே 167

செற்றிடுமெய்யத்தில்லைத்தனையோ ஜீவித்தெழும்பின தும்மொழி
[யால்
கத்தனருள்பெருகல்குத்துபே காதிறேயாமுஹியித்தீனே 168

பஞ்சகளானபலாய்களுக்கு பற்றிஎரியும்நெரிப்பானோர்
நெஞ்சின்விழக்கொழிவாகவந்த நாயகர்யாமுஹியித்தீனே 169

அஞ்சவன்த்தாலுருவாயெழுந்த ஆதமிய்யானையின்ஸான்றனக்கு
தஞ்சமுடன்தலீல்செய்யவந்த ஸாகிபுயாமுஹியித்தீனே 170

ஏழையுமதுபதத்தைநம்பி எப்பொழுதும்புகள்பாடிடவே
நாழிகைதாமிதமில்லாமல் நன்றிசெய்வீர்முஹியித்தீனே 171

நாலூற்றெழுபத்தஞ்சாண்டதிலே நன்மைதரும்றமலானதிலே
கோனருள்கொண்டேயிவனுநித்தகொற்றவர்முஹியித்தீனே 172

அப்புப்பிருதுவிதீயுமுதலான அறுசிரின் சூட்சமதாய்
தப்பிப்போகாமல்தரித்துநின்றதௌஹீதுயாமுஹியித்தீனே 173

## தொங்கல் குரட்டாளிசை

மொழிச்சால்பார்வையும் மூச்சுக்கேள்வி
முழுதும்நிறம்பிய சுழிமுனையில்
அழுத்தும்பார்வையில் விழித்துநின்ற
அப்துல்காதிர்யா முஹியித்தீனே 174

மொழியிலாவென்றும் பார்வையிலாஹூ
முற்றும் வாஷியில்யில்லாவென்றும்
எழும்புநெருப்பினில் அல்லாவென்றும்
சுறந்துநிறைந்தயாமுஹியித்தீனே 175

மண்ணானதுபேச்சு பார்வைதண்ணீர்
மணமாம்காற்றது கேள்வியாகும்
நண்ணுயரசாளும் ஆகாசத்தில்
நாடும்சுடரொழிமுஹியித்தீனே 176

மண்ணானது நாஸூத்தானதுவாம்
மணமாம்ஜலமது மலக்கூத்துவாம்
எண்ணுங்காற்றது ஜபறாத்துவாம்
இலங்கும்லாஹூத்து முஹியித்தீனே 177

மண்ணானது சொல்லும் அலிபதாகும்
மற்றும்தண்ணீர்தான் லாமதாகும்
எண்ணுங்காற்றுதான் ஹேயதாகும்
இணங்கும் நெரிப்பு மீம் முஹியித்தீனே 178

ஜம்ஹூத்தென்றது ரூளியாவாம்
சமைந்தஆகாசம் சரநிலையாம்
தம்ஹூத்தானதும் ஹாஹூத்துவாம்
தயங்கும்தால்வெளி முஹியித்தீனே 179

மண்ணானநிறம் வெள்ளையாகும்
மருவும்தண்ணீர்தான் சிகப்பதாகும்
நண்ணும்காற்றது பச்சையாகும்
நலம்சேர்கௌதுயா முஹியித்தீனே 180

ஆகாஷமென்றால் மஞ்சள்நிறம்
அழகாம்மலக்கவர் றாகாயிலாம்
ஏகன்பார்வையா லெட்டிப்பார்த்தால்
எல்லாம்சமதுயா முஹியித்தீனே 181

## தொங்கல்

மண்ணோஜிப்ரீலாம் நீர்மீக்காயீல்
நண்ணும்காற்றது யிஸ்றாபீலாம்
எண்ணும்நெரிப்பது யிஸ்றாயீலாம்
இலங்கும்ஆகாஷம் பாத்தியாவாம்
நண்ணு இவைஎல்லாம் அறிந்துகொண்டு
நாளும்ஷறஉடன் திக்றுசெய்ய
கண்ணின்மணியான காதிறுவே
கைதந்தாழும் யாமுஹியித்தீனே 182

மண்ணீரல்தானே மண்ணின் கூறாம்
மற்றும் தண்ணீர் தான் கருயீரலாம்
எண்ணுநுரையீரல் காத்தின் கூறும்
எரியும்நெருப்பின் கூறதுபித்துவாம்
நண்ணும்தாமரை ஆகாஷமாம்
நயினார்முஹம்மது வதிலிருப்பாம்
பண்ணும்இவையெல்லாம் பறுவல்செய்யும்
பகீறுயா லெளதுமுஹியித்தீனே 183

வாயேமுஹம்மது கண்யீஸாவாம்
வழங்கும்நாஷி தான்மூஸாவாகும்
ஆயும்காதுதான் இபுறுஹீமாம்
அழகாயிவைகளை அறிந்துகொண்டு
நேயமுடன்றப்பை வணங்கும்பேர்க்கு
நேர்மையாம்பாதை மஹ்மூதுநிலை
பாயும்கலையதில் நினைவைப்பூட்டும்
பலனையருளும் யாமுஹியித்தீனே 184

## தாளிஷை

பரிபூரணநிலையின் வகைப்பை தல்ஷிலமொழிவேன்
அரிதாகிய இல்மாமிது அன்பாகவேகேளும்
சரியாகியநபுஸானதை சடையாமலேகட்டி
குருதந்திடுமேருளானதை கொண்டேஅமல்செய்வீர் 185

நபுசானதை இடாரனதில் நாட்டாமலேநல்ல
பௌஸாகியநபிநாயகம் பகருமுறைப்படியே
தவிஸாகியகல்பில் இக்ஷர்தன்னை பதிவாக்கி
ஸுபஸோபனமாய்வாழ்ந்திடும் சூட்சமறிவீரே 186

இறையாஷையைஎன்நேரமும் இதயத்திலிருத்தி
மறையபற்றிடும்உலமாக்களை மருவிப்பதம்தழுவி
கறைநீங்கியவறிவானதை கருத்தாயவரிடத்தே
குறையொன்றுமில்லாமல்நிதம் குணமாய்ப்படிப்பீரே 187

பட்டாங்குழவிளைதூதனைப் பகையாமலேபணிந்து
திட்டாந்தரவறிவானதை தெவிட்டாமலேயருந்தி
முட்டாள் துறைபறிவானதை முற்றாய்வெளிப்போக்கி
கட்டாயமதாய்நாதனை கருத்தினில்நினைப்பீரே 188

ஊன்மேவிய தேகாஷயிலுறவானதைவிட்டு
தானானஉஜூதானதை தழுவும்படிஷறிந்து
வானாகியவல்லோன்றிரு அறஷில்யிருவிழியை
கோன்சொல்லியபடியேற்றிபேக் கொண்டாடிநடப்பீர் 189

பளிங்காகசும் கொலைவஞ்சகம் பலதுமறநீக்கி
அழகாகியஅமலானதை அல்லும்பகலதிலும்
பரந்தன்றிபுரிந்தாதியை பண்பாய்தெரிஷித்தால்
வழுவின்றியவொளிவானதை விரைவாயறிவீரே 190

தக்வாவினில்என்னேரமும் தரிப்பாகவேயிருந்தால்
மிருவாள்வுகள்பெற்றேபருள் மேவும்படிசென்று
அருமானமகாமானதில் தாவும்சுடர்கண்டு
அறைதாகிய அல்லாவருள் அடைவீர்அனுதினமே 191

கிட்டாதபெரும்பாக்கியம் கிட்டும்படிமனதை
கட்டிக்கிருவருளானதை கமலத்திலிருத்தி
மெட்டானமுகப்பார்வை மயக்கத்தையகற்றி
கட்டாயமதாய் ஆதியை கல்பில்நினைப்பீரே 192

அன்பாகவேமூச்சைதினம் அலையாமல்நிறுத்தி
இன்பாகியநினைவானதை இதயத்திலிருத்தி
முன்பார்வையதைத்தள்ளி மனத்தாயொழிவீஷம்
பின்பார்வையிலொளிகொண்டெளில் பெரியோனைநினைப்பீர் 193

செற்றோர்களைப்போலமனம் சலியாமலிருந்து
மற்றோர்களைபொருதாலமும் மனதில்நினையாமல்
கற்றோர்களையேபற்றி கனந்தங்கியகுருவின்
சொற்றன்னிலையென்றேயிரும் சொகுஷாயனுதினமே 194

அல்லாவெனநாவானது அசையும்பொழுதெல்லாம்
பொல்லாதவன் இபுலீ சொருபோதும்வரமாட்டான்
கல்லாதகொடும்பாவியை கடுகும்அணுகாமல்
நல்லானை ஸாக்கூனையில் நாளுந்தொழுவீரே 195

அண்டப்புவிமற்றும்பல ஆலத்துநிறைந்து
தொண்டர்களுளந்தன்னிலே சோதிப்பிரகாஷம்
பண்டுப்படிசெய்தேமணி மாமண்டபமீதில்
கண்டோரகமகிழக் கதிகாட்டும்பொருளறிவீர் 196

கலைரண்டொருபத்தானதை கலையாமல்நிறுத்தி
நிலைசெய்திருதயந்தனிடை நின்றுடையபொருளை
மலையாமலேமகிழ்ந்து மனங்கொண்டுநினைத்து
தொலையாதசுஜூதைத்தினம் செய்தேயருள்பெறுவீர் 197

சதிசெய்திடும்இப்லீசினை சற்றுந்தொடராமல்
கெதிபெற்றிடும்வழிபற்றியே ஹக்காம்கலிமாவை
துதிசெய்துமனங்கொண்டு சரந்தன்னிலிருத்தி
சதமாகியவாழ்வைப்பெற தினமும்முயல்வீரே 198

பதம் பல்லவி

என்னென்னசெய்திடுமோ பொல்லாமனம்
என்னென்னசெய்திடுமோ

அநுபல்லவி

என்னென்னசெய்துஎனை பங்கமாக்குமோ
ஏகன் அருள் தந்தெனைச் சங்கையாக்குமோ 199

சரணங்கள்

பாவியுடன்கூட்டி பங்கப்படுத்துமோ
பள்ளியைவிட்டென்னை தூரப்படுத்துமோ
ஹாவியாவென்றதில் போகப்படுத்துமோ
ஷிர்க்கின்விலக்கும் ஹறூத்தினிலாக்குமோ [என்னென்ன] 200

ஷாவதைசற்றேனுநா னெண்ணவுமில்லை
சந்தேகம்தீர்த்தகம் தேறவுமேயில்லை
சீவனைவீணாக்கிப் போட்டமகாதுஷ்ட
சேகாத்தோடெனையும் சேரச்செய்யுமோ [என்னென்ன] 201

பாவினனும்பெயர் கொண்டுமயங்கிய
பாளாகிவல்ல வருள்பெற்றஆவியை
சாவியதாக்கிச்சதிசெய்துநாகினில்
தள்ளினை துன்பம்செய்துவதைக்குமோ [என்னென்ன] 202

காலங்களெல்லாம் கழிந்துவம்பாகுது
காரியமெல்லாம் பழுதாகிப்போகுது
ஜாலங்களைமனம் தேடிஎடுக்குது
சஞ்சலப்பாவத்திலே எனைச்சேர்க்குது [என்னென்ன] 203

ஆதியைத் தேடும் அதனைமறப்பித்து
ஆலத்தின்வாழ்வை யடுத்துநடக்கவும்
நீதிகுருன்வழி நீக்கவும்செய்தென்னை
நிச்சயமாக வலக்ஷியம்பண்ணுது [என்னென்ன] 204

மௌனத்தைமறக்கும் மதியினைப்பூட்டுது
மங்கையராஷயிலே எனைமாட்டுது
கவுத்துவமாகத் தன்கையில்வைத்தாட்டுது
கள்ளன்இப்லீசைச் சேரக்கைகாட்டுது [என்னென்ன] 205

வண்டர்களைத்தினம் கூடிநடக்கிறேன்
வஞ்சகமாகவே நெஞ்சைவளர்க்கிறேன்
கொண்டயீமானிலே தன்னைமறக்கிறேன்
கொடியஅதாபை நினையாதிருக்கிறேன் [என்னென்ன] 206

நன்றானதீனின் மொழியைமறக்கிறேன்
நாள்தோறும்நாயனை நாடாதிருக்கிறேன்
வென்றியில்லாதப்பொய் வேஷத்திலாகிறேன்
வேதாந்தமெய்ப்பொருளாஷயைபோக்கிறேன் [என்னென] 207

சாகாமற்செத்தாலல்லோ சுகம்தேடலாம்
சங்கட்டப்பட்டாலல்லோ கரைசேரலாம்
வேகாமல்வெந்தாலல்லோ குருநாதனின்
மேலானமந்திரத்தால் அருள்காணலாம் [என்னென்ன] 207

பாக்கியமேதரும் சர்குருபாதத்தை
பழகும்பரிக்ஷை கண்டறியாமலே
யோக்கியனைப்போ லிருந்தினாலென்ன
யோகத்துறைகளை மோகித்தறிந்திலேன் [என்னென்ன] 208

சற்றும்பயங்கர மற்றுநடக்கிறேன்
சிற்றின்பவாஷியில் முங்கிக்கிடக்கிறேன்
கற்றறிமூடரை தட்டிக்கொடுங்கிறேன்
கப்றின் அதாபை நினையாதிருக்கிறேன் [என்னென்ன] 209

முங்கர்நக்கீறுகள் வந்துநெருங்கியே
முன்வந்திருந்தெனை சோதிக்கும்வேளையில்
என்குறையைக்கண்டெனை பங்கமாக்கியே
எதேதுசெய்திடுவாரோ வறிந்திலேன் [என்னென்ன] 210

ஆதமியாகபிறந்து மிறுகம்போல்
அல்லாவைநாடாமல் அஞ்சிவணங்காமல்
நீதரிறசூல் ஷறஜையும்பேணாமல்
நித்தம்வினைகளை மெத்தவேசெய்கிறேன் [என்னென்ன] 211

அன்புடனுதிணைத் தேடியருள்பெறும்
ஆனந்தமீதெனக் கண்டறியாமலே
துன்பப்படுத்தும் தொழில்களைசெய்துயான்
அஞ்சாமலேமிக கொஞ்சிநடக்கிறேன் [என்னென்ன] 212

கெட்டமனத்தையுடைய வெருமைக்
கடாவினைபோலவே துட்டத்தனங்களை
சட்டமுடன்செய்து சண்டாளனென்றுபேர்
சர்றும்படிக்கல்லவோ சதிசெய்கிறேன் [என்னென்ன] 213

படித்தவறிவின் படிக்கமல்செய்யாமல்
பஞ்சமாபாபாதகம் கொஞ்சமும்அஞ்சாமல்
திடத்துடன்செய்து கொடும்பாவியாகியே
சிந்தைகலங்கி மயக்கித்தயங்கிறேன் [என்னென்ன] 214

துட்டத்தனங்களை எட்டிப்பிடித்திறை
தூதர்தரும்கலிமாவின் பயனதை
கட்டிப்பிடித்ததின் சிர்ரைவிளங்கிய
ஹக்கனைசேராமல் கத்திதிரிகிறேன் [என்னென்ன] 215

பாவங்கள்செய்து பரகதியற்றயான்
பாரஅதாபுக்கு பாத்திபமாகாமல்
ஆவியைரெத்தினம் போலவேகாப்பாற்றி
அன்பாயிருக்கா தலங்கோலமாகிறேன் [என்னென்ன] 216

கையில்களவதும் வாயினில்பொய்யதும்
கல்பில்ஹறாமான வஞ்சகமும்வைத்து
மெய்யானபேரின்ப வாழ்வைப்பெறுமலே
வேதனைதன்னையே சாதனைசெய்கிறேன் [என்னென்ன] 217

கத்தனைஎப்போதும் கல்பில்தெரிசித்து
கண்மணியான கலிமாபொருட்கொண்டு
மூத்தானமுச்சுடர் தன்னில்பனுவாகி
முத்திபெறுமலே சித்தமுருகிறேன் [என்னென்ன] 218

முத்தும்பவளமும் பச்சையும்கூடிய
முச்சுடரானநல் புஸ்தபாபாதத்தை
நித்தம்பணிந்து சுவாசத்தைப்பூட்டியே
நேசத்திலாகாமல் மோசத்திலாகுறேன் [என்னென்ன] 219

ஆலம்மிதா லறுவாஹுடன்மற்ற
தடங்களும்தாண்டி மகத்தாலலாஹூத்தில்
சீலமுடநல்ல சிந்தையைப்பூட்டியே
சந்தோஷமாகா தனந்தோஷமாகுறேன் [என்னென்ன] 220

துன்பம்பொருந்திய பாவத்தொழில்களை
தூரொட்டத்தள்ளியே னேருற்றபாதையை
தப்பமதாகக்கை கொண்டுவணங்கிட
தஞ்சம் அல்லாவேயல்லாதொன்றும் வேறில்லை(என்னென்ன)221

ஆதியையறிகின்ற அழகானபாதையில்
அன்பானகுருபரன் சொற்பிறகாரமே
நீதியாய்னின்று நிலைத்தருள்பெற்றிட
னின்றஞ்சமேயன்றி பின்றஞ்சம்வேறில்லை (என்னென்ன) 222

குற் ஆனின்பிறகாரம்னர்க்குணம் கொண்டுனம்
காறணரானஹபீபின்ஷறஅதை
குறயாகபின்பற்றினுள்தோறும்ஜன்என
கூறும்மகாமினில் கூடவிரும்பினேன் (என்னென்ன) 223

வாசினினைவை மனதினிலாக்கியே
வஞ்சகம்செய்யும் இபுலீசைபோக்கியே
கூசாமலேகிர்றை உள்ளத்தில்த்தாக்கியே
குருபரன்றனையனுதினம்போற்றுவேன் ( என்னென்ன ) 224

கற்றோரடிகளை கல்பதிலேவைத்து
ஹக்கனறுள்பெறும் சர்க்குருபாதத்தை
வெற்றிதரும்கக்கூள் வட்டத்திலேநிதம்
வைத்தொளிகண்டுமகிழவிரும்பினேன் (என்னென்ன) 225

## தாளிசை.

அருள்மேவியசிபத்தின் வகையதில்மேவியசூக்ஷம்
குருசொர்ப்படிகண்டாய்ந்து குறிப்பாகியஞான
தருவின்கனிதின்றே பஷிதிரும்படிசெய்யும்
திருமாமணியொளிவீசியதா ஹாமஹ்மூதே 226

சித்தானஹயாத்தோடு சிறப்பாகிய இல்மும்
முத்தான இருதத்தொடுமேவும்குத்றத்தும்

சத்தாகியஸப் உன்பஸற்சிரானகலாமும்
சித்திக்குமுறைதந்தருள் செய்யும்மஹ்மூதே 227

கருவாகியவிபத்தானதை கருகித்தெளியாமல்
மருவும்வகையெல்லாம் வெறும்மோசத்தனமாகும்
திருமண்டபமதிலாடிய திவ்யப்பிறகாசத்
தருள்காட்டியே நன்றானையாளும்மஹ்மீதே 229

அஞ்சாறுருவாய்வந்து அசைந்தாடியகுகையில்
பஞ்சாட்சரமாய்னின்று பலன்காட்டிய பொருள்மேல்
னெஞ்சானதிலே நித்தியனே சத்தைநிறுத்தி
தஞ்சம்மிகவாயன்பொடுதாரும்மஹ்மீதே 230

தசையென்புநரம்பாதிய சார்தல்கொடுபுலியின்
மிசைவந்திடும் இன்சான்தனில்மேலானமகாமில்
அசையாமலேனின்றாடிய அருஸமைப்பொருளதனை
விசையாகவேகாட்டிடும் அருள்மேவுமஹ்மூதே 231

ஆரும்அறியாநற்பொருளறியும் வகையதுதான்
னேராகியசுளியில்னடுனுக்தாவினைனோக்கி
சாரும்திருஒளிவீசிய சத்தைத்தெரிசித்தால்
சீராகியவலிர்றின் ஒளிதாக்குமஹ்மூதே 232

பிண்டம்மதில்னின்றேபுகள் பெத்றீர்மறையுற்றீர்!
அண்டம்மதிர்சென்றீர் அறிவுற்றீர் அமல்பெற்றீர்
வண்டக்கலகுபிறர்களைவதைசெய்துமுறித்தீர்
தொண்டர்க்கனைவதினமும் அருள்செய்தீர்மஹ்மூதே 233

வென்றிக்குகொடிபுலிமீதினில்வெல்லும்படியேற்றி
னன்றிப்பார்நினைவெகுனலமாகவிளைத்து
பொன்றும்குபிர்களையானதைபோக்கிக்கறைனீக்கி
யென்றும் புகள்பெற்றோங்கிய எகள்மஹ்மூதே 234

கொல்லும்பவமெல்லாம் அருள்கொண்டேவெகுதணிப்பாய்
சொல்லும்கலிமாவால்தனைச்சேர்ந்தோர்களைவிட்டும்”

னில்லாதுவிரண்டோடிட நித்தம்அருள்புரிந்த
னல்லானருள்பெற்றோங்கிய நாதர்மஹ்மூதே 235

மதிமாமணப்பொருள்மேவிய மஹ்பூபெனும்அரசே
கதியாகியவாள்வைதரும் கிப்லாவெனவந்து
துதிபெற்றபலந்தந்துவெம்துன்பங்களகற்றி
புதுமாமறைகொண்டே யெமைப்பேணுமஹ்மூதே 236

சுழியாகியமுனைகண்டு தாணிந்தேயொருஹற்றை
விழிரண்டிடைனேராகவேமேலாகவிருத்தி
பழுதன்றியிருப்போர்மனம்பெரியோன்றிருவருளால்
செழியும்படிகருணைகரம் செய்யும்மஹ்மூதே 237

கருமாமுகில்குடைமேவிய கிருபாகரரேனும்
பெருமாமலரடிதன்னை எப்பொழுதும்பணிந்தேற்றி
திருமாமணியொழிவானதைத் தெரிசிக்குமுறைகள்
தருவீரிதுசமயந்தனைசெய்தேமஹ்மூதே 238

அழியாதனர்ப்புகளோங்கிய அல்லாவருள்தாதே
எழியேனையிரிரட்சிக்கவிரங்கும்மிதுனேரம்
பழுதாயெனையாக்காமலே பெரியோனைஎன்னாளும்
தொழுதேற்றிஇறைஞ்சும்படி செய்வீர்மஹ்மூதே 239

ஹக்காகியனும்பாதயில் கடுகும்பிஷகாமல்
சுக்கென்றதையறனீக்கிஷஹாதத்திலிருந்து
எக்காலமுமுன்வாளவிரங்கும்மிதுவேளை
மிக்கானபுகள்தங்கிய மேன்மைமஹ்மூதே 240

எக்காலமும்னும்பாதமேயல்லாதுவெனக்கு
சொக்குந்துணைவேறொன்றிலைசொகுசாகியநபியே
திக்கெங்கணும்புகள்மேவிய சோதிப்பிறகாசம்
சொக்கும்படிசெய்தேயருள்செய்வீர்மஹ்மூதே 241

மெட்டாகிய கல்கானதில் மணமானதுஇன்சான்
செட்டாகவேயவன்றன்னை சிறப்பாகிடவிங்கே

மட்டின்றியபுகளோடறுள்வெளியானதைகாட்டி
மட்டற்றபுகள் தங்கியமன்னர் மஹ்மூதே 242

## பதம்.

பாவங்கள் செய்தேனே முஹம்மதே
பாவங்கள் செய்தேனே அனுப்பல்லவி
பண்டேஇஸ்லாத்தில்பயந்து நடக்காமல்
பாவித்தஈமானைசாபித்துபோட்டுயான் பாவங்கள் 243

கண்டஹறாத்தயெல்லாம்கைகறுவென்றெண்ணி
கருத்தில் இருளடைந்து கலங்கிமிகமயங்கி
கொண்டஈமான்படி நன்றியாய்நடக்காமல்
காறணமாம்இஸ்லாத்தையும்பேணாமல் பாவங்கள் 244

வண்டதனதினால் வல்லமைபேசியே
வம்பானபாவங்கள் றெம்பவேயான்செய்து
கண்டதும்கேட்டதும் திண்டதும்உண்டதும்
காணுமிவையெல்லாம் காரீயமில்லாமல் பாவங்கள் 245

அண்டம்புவனமடங்கலுமேபடைத்
தானும்இறைவன்றனைபணிந்தேற்றியே
தொண்டுசெய்யாமல் பொழுதெல்லாம்வீணாக்கி
தோணும்படிக்கெல்லாம் வாய்வம்புபேசியே பாவங்கள் 246

கள்ளுகுடிக்கவும் துள்ளித்திரியவும்
கஞ்சாவபின்தின்று கண்மறட்கொள்ளவும்
கொள்ளும்பெஞ்சாதியை பூமணம்கொள்ளவும்
கூறும்பலபல கோலங்கள் செய்துயான் பாவங்கள் 247

பாழானஉடலதை வீணாய்வளர்க்கவும்
பாசாங்குசெய்து பணங்களை சேர்க்கவும்
யேழைகுடிகளைமோசங்கள் பண்ணவும்
எண்ணருமெத்தனையோ வினைகள்செய்து பாவங்கள் 248

எட்டுதிசையும்பதினாறு கோணமும்
யெங்குமொன்றாய் நின்றகுருவை தம்தேடாமல்
திட்டமாய்பாவத்தை செட்டாகவேசெய்து
பொட்டயன்போலவே பெரியோரையஞ்சாமல்பாவங்கள் 249

பொல்லாகுணமும் புலையாட்டுமே பூண்டு
பொருந்தாசியல்களை பொருத்தமதாய்த்தேடி
நல்லோரைசற்றேனும் சங்கைசெய்யாமலே
நாளைஎல்லாம் பழுதாகவேவீணாக்கி பாவங்கள் 250

சீலையுடுத்து நல்சுன்னத்துமேசெய்து
சிரமதிலேதலைபாகையுமேகட்டி
கோலத்துக்காகவே தாடியையும்வைத்து
காறணமாகியகல்பதை பேணாமல் பாவங்கள் 251

வயறுவளர்ப்பதர்க்காய் வெறும்பொய்களை
வஞ்சகமாகவேயஞ்சாமலே சொல்லி
கைருனகாரியம் ஒன்றயும்பேணாமல்
காசினியிர்பலமோசத்தனம்பண்ணி பாவங்கள் 252

கேடுகள்செய்கின்றநபுஸது சொல்லிய
கேட்டுக்கெல்லாம்தலைசாய்தொன்றும்சொல்லாமல்
மூடத்தனமா இருந்து குருவறுள்
மோட்க்ஷத்துறைகளை நேசித்துணராமல் பாவங்கள் 253

அஹதிய்யத்துமுதல்ஆலம் இன்ஸான்வரை
ஆனமறுத்திபனைத்தயுமாராய்ந்து
வஹ்தத்தில்தோன்றிய றம்ஸானகூட்க்ஷத்தின்
வகையதும்இன்னதென்றுலோசித்தறியாமல்பாவங்கள் 254

பண்டிறைநம்பிலேவைத்த அமானத்தை
பண்புடன்காப்பாற்றி இன்பமதாகவே
தொண்டுசெய்தே யொளிகண்டுமனங்களி
கொண்டுமனத்துயர் நீக்காதிருந்துயான் பாவங்கள் 255

அன்னைபிதாக்களை யாதரியாமலும்
அன்புகொண்டேயர்க்கன்னங்கொடாமலும்
சொன்னமொழிகளை யொப்புகொள்ளாமலும்
சொந்தகுடும்பத்தவர்க்கிரங்காமலும் பாவங்கள் 256

வஞ்சகமாகவே பெண் சொல்லினை நம்பி
வருசைமிகுத்திடும் தாயைவசை சொல்லி
நெஞ்சதிலேஇறைநேசத்தை தேடாமல்
னேரானகூட்டத்தைச்சேர்ந்து நடக்காமல் பாவங்கள் 257

அஸ்லானதீனின் எடுப்புகளாகிய
அழகியகலிமாதொழுகைஸகாத்துடன்
நசலையகற்றிடும்நோன்பொடுஹஜ்ஜையும்
நன்றாய்யெடுத்து நடத்திவாராமலே பாவங்கள் 258

ஹக்கைமனம்தனிலே கருதாமலே
கல்லையுவந்தந்தவாசையிலேசிக்கி
மக்கநபிசொல்லை நம்பியதின்படி
மோட்க்ஷம்தரும் நல்லருட்க்ஷத்தைதேடாமல் பாவங்கள் 259

காணுப்பலபலகாட்க்ஷியும் பொய்யென்று
கல்பிலறிந்ததைகட்டோடேதள்ளாமல்
ஆணவம்காமியம்மாயையிலற்றிர்க்கே
பாளாக்கிராட்களையே பழுதாக்கியே பாவங்கள் 260

கெட்டஹறாம்செய்யும் முட்டாளுடன்கூது
சட்டமதாய்செய்து சந்தோஷமாகவே
திட்டமாய்பெரியோர்கள் கிட்டபோயறிவுகள்
தேடிபடிக்காமல் மூடத்தனத்தினால் பாவங்கள் 261

## கலிச்சந்துவிருத்தம்.

எவ்வளவென்றுரைப்பேனென்வினைகளை எங்கள் முஹம்மதுவே
அவ்வளவும்பவமல்லாதுவேறொரு அன்பயும்காண்கிலனே

தவ்வியமுந்துநிலத்தில் புரண்டாலும் சஞ்சலந்தீராது
நவ்வியபாவிபயனுக்கனுதினம் நல்லருள்செய்வீரே 272

ஆதியனாதிஅஷ்றமதுவென்றதை யன்புடன்நாடியபின்
சோதிஸமதொளிவானதை கண்டுஸஹஜநிதில்விளுந்தெழும்பி
மாதவம்தங்கும் மகாமதிலே நின்றுமங்காதகீற்த்திபெறும்
வேதப்பொருளையறிந்து வணங்கும்வகை தந்தருள்வீரே 263

நெத்தியிமேலே நிலைபெற்று நின்றாடிய நிட்க்ஷபமாம்பொருளை
சித்தமதில் தெரிசித்தருள்பெற்று சுகம்பெறவேநிதமும்
கத்திப்புலம்பிதிரிந்து துஆக்களை கேட்டிரப்போன்றனக்கு
முத்திக்குரியவழிதனை காட்டி யகிள்க்ஷியருள்வீரே 264

அஞ்சுமோராறும்அறிந்துவணங்கவும்அய்ம்பத்தோராட்க்ஷரத்தை
நெஞ்சினில்வைத்துநிதம்தொழுதேற்றிநிலைபெறும்சூட்க்ஷமதை
கொஞ்சிகுலாவிபொருந்தி இருக்கவும் கொற்றவரேனுமது
தஞ்சமதன்றி எனக்கொருதாபரம் தானிலையேநபியே 265

## பதம்.

பாவங்கள்செய்யாதே மனமே பாவங்கள் செய்யாதே

## அனுபல்லவி.

பாவங்கள்செய்து பலன்பெறும்மோட்க்ஷத்தை
பாளாக்கிநாட்களைவீணாக்கி போடாதே பாவங்கள் 266

நாயனைநித்தம் மனதில்நினைத்துகொள்
நாசச்சரீரத்தின் நேசத்தைநீத்திகொள்
ஆயுமறிவதையாராய்ந்தறிந்துகொள்
ஆணிபொன்போலவே ஈமானைபேணிகொள் பாவங்கள் 267

செத்தசவம்தனக்கொன்னதான் சொல்லினும்
சீயென்றுபாவத்தைபோவென்றுதள்ளாமல்
புத்திஇல்லாமலிருக்கின்ற வாறுபோல்
பாதகம் தன்னை தனுவி திரியாதே பாவங்கள் 268

அஞ்சறைகோட்டைக்கடைப்பும் துறப்பும்
அடங்கிஇருக்கின்ற பாங்கதைநீகண்டு
அஞ்சுமோராறயும் கண்டுதெளிந்தந்த
ஆனந்தசூட்ச்சத்தில் அன்புடனின்றுக்கொள் பாவங்கள் 269

பச்சைபுருவந்துபாங்குடன்மேய்கின்ற
பன்மையறிந்து பழம்பொருளானதை
இச்சைகொண்டே இணையற்றிறைஞட்டத்தை
எப்போதும்கல்பினில் தப்பாமல் பூட்டிக்கொள் பாவங்கள் 270

பொருள்தந்துனைகாத்த போதகர்பாதத்தை
பேணிப்பணிந்தவர் னேராகவேயுனக்
கருளியனர்க்கலிமா பயன்றன்னை எக்
காலமுமேமறகாமலிருந்துக்கொள் பாவங்கள் 271

காணும்பொருட்களடங்கலும் பொய்யென
கண்டுஹக்கீகத்தில் ஹக்கன்தியானத்தை
பூணுமுறைகளை பேணுதலாகவே
பூண்டுசுல்த்தானன்னவலீருவிர்சேர்ந்துக்கொள் பாவங்கள் 272

அஞ்சலென்றேயுனையன்புடன் ஆள்கின்ற
அழகான ஆகாஷப்பரவெளிசூட்ச்சத்தை
நெஞ்சில்னினைத்தொரு நாழிகை நோக்கிடில்
னேர்கேடெல்லாம் னிலையாமர்ப்பறந்திடும் பாவங்கள் 273

குல்ஹுவல்லாவெனும் சூறத்திலாண்டவன்
கூறிஇருக்கின்ற சிர்றைகுருவிடம்
நல்லாகக்கேட்டுனலம்பெறும்பாதையில்
னேசத்துடன்னின்று மோசத்தைபோக்கிக்கொள்பாவங்கள் 274

## கலித்துறை.

வானகமேழும் கடந்தறுசேறிய வல்லவன்முன்
ஆனந்தமாய்பலசிர்றுகள் பேசிஅகமகிழ்ந்து
மானிலத்தோர்க்கும் அவற்றயெல்லாம் னல்லவண்மையுடன்
ஈனமில்லாமலுரைத்தருள் காட்டும் இறை நபியே 275

நன்றிதந்தேயென்னையாண்டருள்செய்யவின்னானிலத்தில்
வென்றிக்குநபாஅநுகவந்தீநமைவேண்டுதலாய்
என்றும் புகழ்ந்தடிஞன்பணிவேனெனையெப்பவும்நீர்
னின்றநிலையதில் நாட்டிவைப்பீர்நபிநாயகமே 276

அன்புடனென்றனைநீர் சக்கறாத்தினிலாதரித்து
இன்பொடுநேர்க்கலிமாபயன்றந்தெனை இன்னமும்நீர்
மண்புகும்வேளை கபுறிலுங்காத்து மஹ்ஷறிலும்
முன்பினில் வந்து மகிட்ச்சிதந்தாளும் முஹம்மதுவே 277

தாகமுங்கூடும் அன்னாளையிலென்னை தொடாதபடிக்
கேகன்முன்னென்றனக்காக மன்றாடி இரைச்சலுடன்
வேகும்நரகத்தையுங்காத்து சொற்கத்தின் வாழ்வுந்தந்து
மோகமுடனென்னையன்புவைத்தாளும் முஹம்மதுவே 278

மஹ்றமூதுமாலையைநல்லாகவாய்ந்து மனமுவந்து
பஹ்முடனோதும் பெரியோர்க்கு நாளும்பலனருளி
ஜகமீதில்துன்பங்கள் வாராமல்காத்துதிருக்கருணை
மிகவாகசெய்யும் இறையருள்தங்கும் முஹம்மதுவே 279

எல்லாஉலகும்படைத்தாளுமெங்களிறையவனே
சொல்லார்புகழ்ந்திந்தமாலையைப்பாடி தினந்தினமும்
நல்லார்முஹம்மதை நாவிலும் கல்பிலும் நாட்டுவர்க்கு
அல்லலகற்றியருள்புரிவாயறப்பல் ஆலமீனே 180

மஹ்றமூதுமாலை முற்றிற்று

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

# திருமெஞ்ஞான சாக்ரம்

## நான்காவது பாகம்

# மெய்ஞ்ஞான அலங்கிருத பாமாலை.

## 1. காப்பு படலம்

வெண்பா.

அஊது பில்லா ஹிமினஷ்ஷையித் தானிர் றஜீம்
ஆதியே அல்லாவே யடிமைதனை நீதன்ஷெய்த்தான்
அணுகாமனுன தருளாலனுதின முங்காவல்செய்து
பிணங்காமலே யுதவிசெய் 1

பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர் றஹீமென மொழிந்து
பிறியமுடன் கிருபைசெய்யும் அல்லாவே நின்றும
பத்தியதைக்கொண்டேயான் பண்பாய்த்துடங்குகிறேன்
சித்தருளைத் தந்துதவிசெய் 2

## இன்னிசை.

வல்லானையல்ஹம்துலில்லா வெனப்புகழ்ந்து
எல்லாமவரொளிவாலிறை படைத்தநன்னபிமேல்
சொல்லாலுங்கல்பாலுஞ்சுகிர்தசலவாத்ததனை
யல்லும்பகலும்நவின்றன்பாய்த்துடங்குகிறேன் 3

அண்ணலபூபக்கருமறுதுமானும் அலியுஞ்
ஜன்னப்பதிக்காஷர் ஹஸன் ஹுஸைனும்பாத்திமத்தும்
விண்ணோர்மண்ணோர் புகழும்வேந்தர் ஹப்ஸா அப்பாசும்
இன்னூலிசைக்கவெனக்கெப்போதுங்காப்பாமே 4

மறைநபியின் ஆல்களையுமற்றுஞ்சஹாபாக்களையும்
இறையோர்துதிக்குரிய ஏந்தல் சுஹதாக்களையும்
துரைஹனபிஷாபிஇயும் தூயஹன்பல்மாலிகையும்
இறைவாயிவர்களெனக்கெப் போதுங்காப்பாமே 5

## கலித்துறை.

அண்டமவனியடங்கலிலும்புகழ் பொங்கி நிற்குங்
கொண்டல்கொடையிடுங்கோமான் முஹம்மதின்வாயமுதை
யுண்டுஉலகமதெங்குமொலிமார்புயங்களிலே
தண்டாமரைபதம் தான்வைத்த நாதருங்காப்புஹக்கே 6

எத்திசையும்புகழ்பெற்றிலங்குமொலிமார்களுக்கும்
மூத்தியருளதை சித்திசெய்யுமுஹ்யித்தீன்பதத்தை
சித்தமதில்வைத்துமுத்தமுடனிந்த நாலிசைக்க
வெற்றியருளதைத்தந்திடவேணுமென்னுளும்ஹக்கே 7

பாலமுதால்மழைபாரிலழைத்திடும்பாக்கியராம்
ஆலமதில்கெட்டகோலஞ்செய்யுமிபுலீஸவனைத்
தூலமுடன்கண்டகற்றிவிக்கும்அப்துல்லாஜதருஸ்
சீலடியைசிரத்திர்வைத்தேனெனைக்காப்பாய்ஹக்கே 8

## கலிச்சந்த விருத்தம்.

மாணிக்கபூரினில்வாழும் ஹஸன்குத்தூஸீன்றிடும்பாலகரை
வேணபுகழுடன்போற்றியவர்பதம்சிந்தைபோடென்னகத்தில்
தோணும்படிதந்துானமகற்றியென்னேரமுங்காப்பதர்க்கு
நானிலம்போற்றிடும் நாயகனே எந்நாளுங்கிருபைசெய்வாய் 9

மோனரபூஹனீபாமகவாகிய மோக்ஷம்பெறுமனுக்கர்
தானவந்தன்னருளால் தவத்தில்பெற்றெடுத்திடும்நாயகராம்
ஆணிமுத்தாகியஞானமுதையிந்த ஆலமக்கும் பரப்புங்
கோனருள்பெற்றமெஞ்ஞானிஎன்சிந்தையிர்கொஞ்சிட கெஞ்சு
வாட்டமதாகியதீனைஹயாத்தாக்கும் வள்ளல்குருபரனை [கிறேன்
நாட்டமுடன்பலநாமங்களைக்கொண்டு போற்றியனுதினமும்
வேற்றுமையற்றகம்வேதச்சுடராயிலங்குமெய்ஞ்ஞானமுதை
யூட்டும்புகாரிசெய்யிது முஹம்மதுகதம்போற்றியடிபணிந்தேன்

## விருத்தம்.

காயநகரதிர்பிறந்தகாயில் சுலைமானொலியுல்லா
நேயமக்களைவரின்பொர்க்கமல்களை யென்சிந்தையிர்
சேயன்வைத்தவர்களின் பொருட்டதாலின்னூலதை
னேயமாயுரைக்கனின்னுதவிதா என்சித்தனே 12

மாதவத்தினாலுதித்துமவுனகல்வத்திருந்தவர்
போதமாய்உலூமுத்தினைபூதலத்திலிருந்தவர்
காதராசெய்யினு அப்துல்காதிர் ஆரிபானவர்
நீதமாயென்னுளுங்காப்பாய் நிறைந்தென்கல்பிலிலங்குவார் 13

தடமிகுத்துகுணம் நிறைந்ததரணிமேலபாளயம்
கொடைஷிறந்தநகரதில் கொண்டாட்டமாயுதித்தவர்
கொடியகன்னுஸெனை விட்டேககோருமறிவைசய்ந்தவர்
திடமிதத்தஆலிம் அஹ்மத் அலியைகல்பில்போற்றுவேன் 14

(அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

நாட்டினில் சிறந்தகாயல் நகரதிலுகித்துவந்து
வாட்டமில்லாமலே றுபதியினில்வாழ்ந்தஎன்றன்
பூட்டன்முஹப்மதுமீருன் புத்திரர்ஹஸன்முஹிய்தீன்
நாட்டமாயிவர்கள்பாதம் நயனத்தால் முத்தினேனே 15

ஆதியிநாட்டமீறும் ஆரிபாயுதித்து இந்த
பூதலமதிலெல்லோரும் புகழ்பெறுஞ்ஞானமாலை
நீதமாயுரைத்து என்னிர்நிறைந்தமூதாதைஷெய்கு
நாதராப்ஸதகத்துல்லாநளினபொர்ப்பதம்பணிந்தேன் 16

அந்தமில்லாதநாயனருமறையதனின்வலிர்றை
சொந்தமாயெனதகத்துள் சூக்ஷமாய்காட்டிவைத்த
எந்தையரானஷெய்கு அலீஸலாகுத்தினென்ற
சுந்தராடியைகல்பில் சூட்டியான்பாடுவேனே 1

தொங்கல்.

பஞ்சபாதகமதனை நீக்கி
பரமனருளதையகத்தில் தாக்கி
நெஞ்சமதில் கஞ்சலிருளைபோக்கி
நேர்மையாய்ஹக்கனொளிவாய் நின்று 18

விஞ்சைமெய்ஞ்ஞானவலங்கிருதம்
விளக்கமாய் மொழிவதர்க்குதவி

தஞ்சமாய்தருங்குருதந்தையை
　　தமியேனனுதினம்போற்றிசெய்வேன் 19

கந்தமுடன் ஞானப்பிறகாஷமாய்
　　கமழுங்காதிரீஜகருவலி
சந்தஞ்சிறந்திடும்ஷெய் குமார்கள்
　　சகலரின் பாதமலரை யென்றன்
சிந்தையதிலேயான் தரிபடுத்தி
　　ஷிறப்பாயவர்களினுதவிகொண்டு
இந்தமெய்ஞ்ஞானவலங்கிருத
　　மியம்பகிருபைசெய்றப்பு ஆமீன் 20

தூதராய்வந்த அன்பியாக்கள்
　　துலங்குங்குதுபுமாரவுலியாக்கள்
நாதராய்வந்தமெய்ஞ்ஞானிகள்
　　நளினம்பெற்ற நல்லறிவுள்ளோர்கள்
பாதமலர்களை சிரமேல்வைத்து
　　பணிந்துஅவர்களின் பொருட்டைகொண்டு
கீதமாயின்னூலிசைக்கஉன்றன்
　　கிருபைசெய்றப்பல் ஆலமீனே 21

## 2 மெய்ஞ்ஞான சிந்து.

### வெண்பா.

அவ்வலதிலேயஹூதாயாதிபரனாய்தனித்து
ஒவ்வாமையானஹூ ஒசையுதால் செவ்வெனவே
ஓங்காரமாயெழுந்த ஓர்பொருளாமே அறிந்து
நீங்காதபோதஞ்செய் நீ 1

68058

ஆகிறதிலஹ்மதுவாயாலமதிலே நி...
ஏகஒளிவானதறிவாய்மனமே ...ன்
இவ்வுலகின்காஹியதைத் இருதயத்தின்சூக்ஷம்பெற
அவ்வுலகின்காஹியதுவாம் 2

## சிந்து கண்ணிகள்.

ஹூம்மென்றதின் கருத்தறிவாய் தன்னில்தெளிவாய்
கண்டுமகிழ்வாய் ஆதி
ஹூமென்றெழுந்ததையுணர்வாய் சோதி
ஆமென்ற நாதனை ஓமென்றமைந்ததின்
அற்புதம் ஆசானின்றிருவாய் செப்புங்
கற்பனைபோலச் செய்யமுயல்வாய் 3

மோகக்கடலெனும்வாரியதுமீறி யலைமோதி மகா
வேகமுடன்முத்துசீறி மகாம்
இம்கானதில்பாய்ந்து சிங்காரஞ்செய்திடுஞ்
சங்கையுதையறிமாதே யொரு
பங்கமும்வந்தணுகாதே 4

ஆணின் நடுவட்டத்துள்ளி யொருபுள்ளி
மெல்லைதுள்ளி றப்பு
நானல்லவோவெனச்சொல்லி நின்ற
சத்தான முத்ததை சித்தென்றமைந்திடும்
நற்றவத்தையறிமனமே. முத்தி
பெற்றிடுவாயனுதினமே 5

கலிமாவதைகருத்துடனே தெளிவுடனே
மோனமுடனே தன்னில்
கண்டுதெரிவதுகடனே அறி
கலியுடன்மாவுங்கலந்துருவாகிய
கலிமாவறிந்தவர்மூமின் அதை
தெளியாதவன்பொல்லாகூமன் 6

கலிமாவதில்பனுவறிவாய்—பகாவறிவாய்
பலன்தெரிவா யதில்
ஒளிவானஐயெழுத்துணர்வாய் தன்னில்
கலிமாவாய்வந்தஉன் காமில்தனைகல்பில்
கண்டுதெரிவித்தாலாபம் நாளுங்
காணுதிடில்பொல்லாபாபம் 7

கலியாதுவும்ஹரீகிய்யா காலீகிய்யா
வுஜூதிய்யா மிக
களிப்பானமாமஜாவலிய்யா வாக
கலிமாவாயெங்குங்கமழ்ந்து துலங்கிடுஞ்
சூக்ஷ்மந்தெரிந்து நீஹமுவை மூச்சில்
சூஸ்த்திரமாய் நிதங்கூவே 8

நாறதுசிர்றில் நின்றெழுந்து ஒளிஷிறந்து
எங்கும் நிறைந்து அந்த
நாறதிலேகொதித்தெழுந்து வந்த
நாறதிலேஹவாசிறியெழுந்திடும் .
காத்ததுவுங்குளிராச்சே ஜலம்
தோற்றத்லாய் வெளியாச்சே 9

தோற்றுஞ்ஜலம் நுரையாகி யுறைவாகி
மண்ணதாகி எல்லாம்
விற்றிருக்குந்தலமாகி யதில்
தாவரமுமற்றுஞ்ஜீவஜெந்தொக்கயும்
மூர்ப்புத்தியானதையறிவாய் இன்சான்
அர்ப்புதமானதை தெரிவாய் 10

இன்சானெழுந்ததையறிந்து சிர்றைதெரிந்து
நுட்பங்தெளிந்து நின்றால்
துஞ்சாமலாளலாமகிழ்ந்து சொந்த
எஞ்சானதாகிய சஞ்சரந்தன்னையே,
அஞ்சாலமைத் ததையறிவாய் வகை
சஞ்சாரமாய் சொல்வதுணர்வாய் 11

அலிபுடன்லாமதுவாகி ஹேயதாகி மீமதாகி தானும்
ஒளிவாயும்முல்குருஞகி இந்த
அஞ்சக்ஷரமுன்றன்தஞ்சமது வென்றும்
பஞ்சாக்ஷரம் நமசி வாயா இதை
கொஞ்சுதலாய்தன்னிலுணர்வாய் 12

அலிபுடன்லாமண்ணதாகும் வெள்ளையாகும் நாசூத்தாகு மதி
லாஞ்ஞஜபுறுசலாகும் தலம்
மண்ணீரதன்வாசல்மணமாம் வாயதுவாகு
மண்ணலபூபக்கருகும் மூற்க்கன்
அம்மாருவெனும் நபுசாகும் 13

லாமிலாஹா ஜலமாகுஞ்சிகப்பாகும் மலகூத்தாகுமதில்
நேமித்தோர்மீக்காசலாகும் தலங்
காரீரலாம்வாசல் கண்ணதுவாங்காவல்
செவ்வையுடனுமருகுங் குணம்
லவ்வாமாவெனுநபுசாகும் 14

ஹை இல்லா காத்ததுவாகும் பச்சையாகுஞ்
ஜபறூத்தாகும் தந்தை
தாயில்லா இஸ்ருபீலாகு மிடம்
நன்னுரையாம்வழி நாசியதுவாகும்
நாதருதுமானுமாகுஞ் சேர்ந்த
தூதன்முல்ஹிமாவதாகும் 15

மீமதுவும் நெரிப்பாகுங்கறுப்பாகும்
லாஹூத்தாகும் ஆருஞ்
சிரானிஸ்ருசலாகு மதங்
தானம்பித்ததுவென்றும் மோனர் அலீயென்றுங்
கலிமா அல்லா மென்றுமறிவாய் தீரன்
முத்மஇன்னைவென்றுந்தெளிவாய் 16

தாலது ஆகாசமாகும் மஞ்சளாகும்
ஹாஹூத்தாகும் மன்னர்
மேலானறாகாசலாகும் மகாம்
தெளிவானகல்பென்று மொளிவாமஹ்மூதென்றும்
தோற்றும்ஹவியத்துமாகுங் குணம்
போற்றுங்கமாலிய்யத்தாகும் 17

மறைதந்திடும்மூசாநபியாம் ஈஸாநபியாம்
தாவூதுநபியா மெங்க
ளிறைகலீலிபிறுஹீம் நபியாம் பின்னால்
சாத்திப்நபியென்றுஞ்சூஸ்த்திரமாய் வந்த
ஐவரையுந்தன்னில் தெரிவா யுன்றன்
பொய்புறம் விட்டகந்தெளிவாய் 18

இக்றுஜல்லியதுவாகும் கல்பியாதும்
றூஹியாகும் ஸிர்ரி
யிக்ருசபீ அஞ்சதாகுஞ் ஜலால்
அல்லாவெனுஞ்செப்பலீந்தக்ரமாகும்
ஈாவிபுமிநலாமும் லெக்கமோரஞ்சதான ஓர்ஹேறயும் 19

வேதப்சஹ்பும் அபஜுனி யூனுனி சுரியானி எங்கள்
நாதர்குறான் அறபானி தன்னில்
வேதமொத்தினமான போதர்ஹஸன் ஹுஸைன்
மன்னர்லீபாத்திமாவு மெங்க ளண்ணல் முஹம்மதுவாகும் 20

ஒளிவானசுபுஹுவாகும் ளுகறுகும் மக்ரிபாகும் இன்னும்
தெளிவான அஸ்றிஷாவாகு மெங்கள்
காஹியா ஜனுடன் வாசானசாததும்
ஹாமீன்ஜன் சின் காபின்கருத்தை கொண்டு
நேமிதமாய் கல்பில்பொருத்து 21

தொழுகையதில் மலவணக்கம் மாவணக்கஞ்
செஜந்தின் வணக்க மின்னு
மழகானமிருகத்தின் வணக்கஞ் சொந்த
இன்சான் வணக்கத்தோ டஞ்சுவணக்கமும்
தொழுகையதி லுண்டென்றறிவாய் அதை
அழகுடனே தன்னிற்தெரிவாய் 22

கிறமான சரிகையுமாகும் சகிரிகையகும்
யோசகமாகும் ஞானம்

உரமாய் தியானமஞ்சாகும் சொந்த
ஷரீ அத்தரீகாவுஞ் சரியாம் ஹகீகாவும்
திரையில்லாமஃரிபாவாகும் தன்னி
லுறவாமஹுபத்தஞ்சாகும் 23

இன்னுமயிலதுவாகுங் காகமாகுங்
கோழியாகும் ஆந்தை
பின்னுமஞ்சாம் வல்லூறாகும் இன்னும்
கைப்பும் புளிப்புங் கஷப்புந் துவர்ப்புடன்
அஞ்சாவதாயினிப்பாகு மிவை
பஞ்சபூதத்தன்மையாகும் 24

கனமாநரம்பெலும்பாகுஞ் சதையாகும்
தொலியாகும் ரோம
மினமைந்து மண்ணின்பங்காகும் இன்னும்
மூளையுமிள் நீருங்கிள்ளைசிறுநீரும்
விந்துடன்வேர்வையோடஞ்சும் தன்னில்
சொந்த அப்பின்பங்காய் கொஞ்சம் 25

நடையுநடுக்கலுமாகுஞ் சிரிப்பாகுங்
கனைப்பாகும் பின்னும்
உடையுங் கொட்டாவிக்காற்றாகுங் கேளாய்
பஷியொடுதாகமு மஷியுமுறக்கமுந்
தேய்தலுஞ்சோம்பலுமாகு மிவை
தேயுடபங்கேதுவாகும் 26

ஆகாயபங்காசையாகுங் கிருபையாகுங்
கோபமாகும் பயம்
வாகான புத்தியஞ்சாகு மிந்த
ஐயாரின்சூக்ஷத்தை மெய்யறிவால்கூட்ட
ஐயஞ்சாலாறுபங்காகு முன்றன்
மெய்யஞ்சிலேதெளிவாகும் 27

இன்ஸானெனுஞ்சொல்லின் கருத்து அதைதிருத்து
கல்பில்பொருத்து நல்ல

இன்லின்குணமதில் தரித்து இந்த
அஞ்செழுத்தில் நடுகொஞ்சுமெழுத்ததை
விஞ்சையுடனீக்கமுன்னும் பின்னுஞ்
சஞ்சாரமாயொன்று மின்னும் 28

இந்தவழிவகையறிவாய் தன்னிற்தெரிவாய்
தவம்புரிவா யொன்றாய்
சிந்தையில்கண்டகந்தெளிவா யுன்றன்
நெஞ்சினழுக்கரும் விஞ்சையொளிதரு
மஞ்சாமலாசானின்குரக்ஷங் கண்டு
சஞ்சரித்தால் மகாமோக்ஷம் 29

அலிபுக்கு முன்னின்றதென்ன அருவென்ன
உருவென்ன நல்ல
ஆகாஷரூபமுமென்ன எங்குந்
திருவாய்த்துலங்கிடுங் கருவையறிந்திட
குருவைதெரிந்துபதேஷம் நித
மருவியறிந்தாலோ நேஷம் 30

அலிபாயிருந்ததுமென்ன அஹதென்ன
உஹதென்ன நல்ல
ஒலியானவாஹிதுமென்ன எங்கு
மொழிவாயிலக்கிடும் தெளிவுமஹ்லான
ஆலமருவாஹூமென்ன அஜ்ஸா
மாலமின்ஸானதுமென்ன 31

அலிபுலாமீமென்றதென்ன அஸ்லென்ன
வாசிலென்ன இதை
தெளிவாகவேசொல்லென்முன்னால் எங்கு
முச்சுடருனதை இச்சையுடன்தெரி
மச்சுவீடேஹீசென்று ஹக்கின்
சூக்ஷங்கண்டால் மிகநன்று 32

அஹதினகமியமென்ன அருளென்ன
இருளென்ன எங்கும்

அஹ்றமதுவானதுமென்ன இந்த
அர்ப்புதந்தைக்கண்டு நாப்பதியில்சேர
இத்தருணஞ்செய்கைதேடி வெற்றி
பெற்றுநல்லோகெதிபோடி 33

உட்மூல்குருனதுமென்ன உருவென்ன
கருவென்ன இதை
நம்மிலறிந்துநீசொன்னால் பஞ்ச
ரெத்தினமாகியமுத்தான அல்ஹம்தின்
சிர்றையறிந்தாயென்கண்ணே உன்றன்
ஷர்றகனுமனப்பெண்ணே 34

நாலாறெழுத்ததுமென்ன அடியென்ன
முடியென்ன நடு
நத்துங்கருவெழுத்தென்ன குரு
நாதர்வந்தோதிய போதமதைமெச்சு
லேற்றிஇறங்கடிமானே சொர்க்கம்
வீற்றிருப்பாய் நிஜம்தானே 35

நரகமேளாகினதென்ன சகிப்பென்ன
கொதிப்பென்ன அது
நெருப்பவங்களுமென்ன அகம்
நாடிப் அருவுடன் கூடிவுலாவிடில்
நாளுஞ்சொர்க்கஞ்செல்லலாமே கொடும்
பாள்நரகி னல்லல்போமே 36

ஏழாயத்தாகினதென்ன வக்கென்ன
தரிப்பென்ன வதில்
ஏகாந்திஷ்டாந்தரமென்ன உன்றன்
பாத்திஹாவென்றதின் சூஸ்திரங்கண்டு நீ
தோற்றமுடன் ஹக்கைவணங்க உன்றன்
வேற்றுமைவிட்டகமிணங்கும் 37
செப்பாமல்செப்பினதென்ன மதியென்ன
கெதியென்ன கேட்டு.

ஒப்பிவிடைசொன்னதென்ன அங்கு
சாற்றுமுன்னே தொழுதேற்றினதைக்கண்டு
சங்கைகொடுத்ததுமென்ன மிக
சிங்காரமாக்கினதென்ன 38

செப்பாமல்செப்பினதெங்கே மதியெங்கே
கெதியெங்கே கேட்டு
ஒப்பிவிடைசொன்னதெங்கே அங்கு
சாற்றுமுன்னே தொழுதேற்றினதைக்கண்டு
சங்கைகொடுத்ததுமெங்கே மிக
சிங்காரமாக்கினதெங்கே 39

இருமுகமானதுமென்ன இடமென்ன
தலமென்ன எங்கு
மொருமுகமானதுமென்ன அந்த
பாங்கியுடன் சுகித்தேதாங்கியிருந்திடில்
பாவமெல்லாமகன்றிடுமே சொந்த
தேவன்கிருபைவந்திடுமே 40

முக்கோணவீடதில்சேரு முகநேரு
குருநாறு அங்கு
ஹக்காயிலங்குதுபாரு அதை
என்னேரமுமகமுன்னோக்கி மாய்ந்திடில்
அங்கமொளிவதுவாமே என்றும்
பங்கமில்லாபுகளாமே 41

சோலைவனமானகாட்டில் குமன்வேட்டை
கண்டு
யாடும்பாட்டை
நீலமணிநடுவீட்டி லெங்கள்
ஹாமீமைகண்டந்த குமந்தனையோட்ட
ஆலமெங்குமொளிவாகுஞ் சொந்த்
கோலக்குணம்வெளியாகும் 42
ஆலமதின்சிர்றைப்பாரு அதன்கூறு
இந்த
மகாநேரு

ஆலஞ்சிறுதென்றுமேதறு சொந்த
கோலமதாகிய ஆலமதின்சிர்றை
ஆராய்ந்திடில் வெகுபுதுமை தோணும்
பார்த்துயகிழ்ந்திரு சதமே 43

எட்டடியாகியரோட்டில் ஜனக்கூட்டம்
வெகு ஆட்ட மங்கு
வட்டவடிவான மேட்டில் எங்கள்
கத்தனெழிவது சித்துவிளையாடுங்
காக்ஷிதெரிந்தாலென்னாளும் ஹக்கின்
மோக்ஷகிருபைவந்தாளும் 44

முத்துக்குள்ளே யொருஆவி பச்சைவேவி
நின்றுலாவி அந்த
சித்தஹு ஹூ வென்றுகூவி வந்து
ரெத்தினவிடதில் முத்திரைகொண்டிடு
மோனமறிந்தாலோவரஷம் நல்ல
தோணும்ஹக்கின்விசுவாசம் 45

பூங்காவனமானசோலை யதின்கீழே
யொருமூலை யதில்
பாங்காகவேதலைகீழ வைத்து
ஆடிப்பறந்திடுங் காடைக்கிளியதை
ஓடாமலேபிறுத்தாட்டி ஹூபுவை
நாடுதலாய்க்கட்டிமாட்டு 46

வஞ்சனிபுலிசைபோக்கி பாவம்நீக்கி
அருள்தாக்கி யுன்றன்
நெஞ்சந்தனையொளிவாக்கி தன்னில்
கொஞ்சுமுஹம்மதை அஞ்சலியோடுநீ
தஞ்சமென்றேயவர்பாதங் கல்பில்
சஞ்சரித்தால் மகாநீதம் 47
கண்டதெல்லாம் காமத்தீர்ச்சை கறையாச்சே
சிறையாச்சே சூக்ஷங்

கண்டறிந்தால் ஜெயமாச்சே எங்கும்
காரணமாகிய பூரணர்க்கலி
மாவின்கனியதுவாச்சே ஹாவும்
ஹாூவும் ஹீயுமதுவாச்சே 48

நாலேழுஹறப்பதுவாகி யுருவாகி யுலகேகி யென்றன்
ஆமைத்திரைஷாகி ஐந்த
அண்ணல்சத்சொலி தன்னிலுதித்திடு
மன்னரைத்தேடடிமானே என்னில்
மின்னுமொளிவதுதானே 49

ஆறுநாலெழுத்தாலெழுந்து என்னில்வந்து
இந்தசிந்து கலி
யருளுதர்க்கேஜெயந்தந்து என்றன்
உருவாய்த்துலங்கிடும் குருவானஷெய்கு
ஸலாஹைஹ தெரிசிக்கபோடி கலி
மாவையறிந்து நீவாடி 50

ஐம்பதிலேயலிபேகி மத்ததாகி ஷத்தில்மோகி சொந்த
ஐம்பதமேதாரகஷாமாகி வந்து
அன்புடனேகலியம்புமஅப்துல்கரதி
றங்கமிலங்காமானே நிதம்
பொங்கவருள் றஹ்மானே 51

ஆலமெங்குமிறைந்தோனே இறையோனே
றஹ்மானே பல
கோலமதானகோமானே இந்த
பாலன்முன்னில் நானேகாலன் வருமவேளை
நாவதனிர்கலிமானை நல்ல
கூவஉதவிசெய்கோவே 52

ஆசையுடனிசையார்க்கு மறையோர்க்கு
மோதுவோர்க்கு மிந்த
தாகுன்சலாமுன் அலிக்கும் ஒதி

தப்பிதங்கண்டவர் ஊடைப்புடனேயவ்
வழுவைநீக்குமிகுவானே சொர்க்க
வாழ்வருள்வாய் றஹ்மானே 53

பாவப்பிணியதைப்போக்கி கறைநீக்கி
யழகாக்கி நாளும்
மேவுஞ்சுவனத்திலாக்கி யதில்
நாளுமெந்தாய்தந்தை தானுமென்றன்குரு
மாருமென்னைபிடித்தோரும் உந்தீ
தாறைக்கண்டால் கலிதீரும் 54

முற்றிற்று.



# 3 மெஞ்ஞான வினா விடை.

## வெண்பா.

ஆதிபரனைத்துதித்து அவனொளிவிலேபிரித்த
சோதிநபிமீதில் சலாத்தோதியே என்குருவின்
பாதமகமீதில்வைத்து பாரவினாவிடையதனை
போதமுனைக அருள்செய்

## கண்ணிகள்

ஆதியைநம்பி லறிவதுமெப்படி
என்பானே குருவே எங்கும்
சோதியாய்வந்து துலங்கி இலங்குஞ்
சுரூபத்திப்பார் மநீனே

இலங்குஞ்சுரூபமாய் வந்திடும்சூக்ஷத்தை
செப்பிடுமென்குருவே — எங்கும்
துலக்கிய ஆதந்தை துய்யோன்படைத்திடுந்
தூய்மையறிமகனே 2

முந்திய ஆதத்தை முன்னைமுகூடன்
ஏன்படைத்தான்குருவே — நம்பின்
தந்தையில்லாதிடில் தாரணியில்நாம்
வெளியாவதோமகனே 3

ஆதங்குகையிலமைந்த அரூபம
தையருளுங்குருவே — அதை
ஆதாரவாயுன்றன் அஞ்செழுத்தால்தெளிந்
தாராய்ந்தறிமகனே 4

அஞ்செழுத்துள்ளே யமைந்தகருவெழுத்
தென்னதென்சற்குருவே — அது
அக்ஷரமில்லாதரும்பொருளா முன்றன்
பிராணறிமகனே 5

அலிபுக்குமுன் துள்ள வக்ஷரந்தன்னை
எனக்கருளுங்குருவே — அது
அழிவற்ற உருவற்ற தெளிவற்ற கருவெழுத்
தென்றுதெளிமகனே 6

அலிபுக்குள்ளேநின் றிலங்கு மருமைப்
பொருளைவிள்ளுங்குருவே — அது
ஆனந்தமாகிய லாமுக்குள்ளே நின்
றிலங்குதுபார்மகனே 7

முச்சுடராகிய வக்ஷரந்தன்னை
முளங்கவருள்குருவே — அதை
முன்னலிந்து ஹா ஹூ வுடன் ஹீ யென்ற
ஷெய்காலறிமகனே 8

முச்சுடர்மூன்றிந் தலமதைக்கூறிடும்
பக்ஷமுடன்குருவே — அதை
யுச்சிதமாகிய தச்சில்லாமாளிகை
தன்னிலேபார்மகனே 9

மாளிகைமீதினி லாஸனமேவிதன்
றாரைத்தருளெங்குருவே — அது
வாநிகையெல்லாமிலங்குமடிமுடி
நடுவல்லவோமகனே 10

தருமானவசந்தனித்தரஷாருமா
ஸனத்தமேதானங்குருவே — அர்
ரஹ்மான் அல்அர்ஷிஸ்த்தவாளென்று
வியப்புந்தலமகனே 11

ஆறுவென்றுரைத்தவரும் பொருளேயாங்
விளங்கவருள்குருவே — யுன்றன்
வரிசைநாயஹ்மதை கௌஸென்நடு
நிருத்தியறிமகனே 12

கௌஸெனுந்தலக்காக்ஷியதை எனக்
கருளுமென்சாக்குருவே — அது
தவசுக்கு ஆதியுஞ் சோதியுங்கூடுந்
தலமல்லவோ மகனே 13

அஉறதும் அஹ்மதுங்கூடுந் தலமதை
கூறிடுஞ்சற்குருவே — அது
அழகான உச்சியின்மேலொரு முக்கோண
பச்சல்லவோமகனே 14

பச்சதின்காக்ஷியை எப்படிகாணலா
மன்னவரேகுருவே — அதை
இச்சணமே யுன்றனாமைவலம்புரி
யோகைக்குள்பார்மகனே 15

கலியென்னமாவென்ன கலியாவாய்வந்தது
மென்ன வென்சற்குருவே — சிந்தை
தெளிவுடனே சற்குருவிடங்கால்மடித்
துட்கார்ந்தறிமகனே 16

கலிமாவையறிவதால்காணும் பலனதைக்
காட்டிடுமென்குருவே — நாளுங்
கருத்தால்தெளிந்ததை பார்க்காதவன்பொல்லா
காபிரல்லோமகனே 17

காபிரென்றபாவிக்கிதன்ன வகையாளங்
காணவென்சற்குருவே — அது
காபிரிடஞ்சென்று அஞ்சுமாறுமறி
யாதவந்தான் மகனே 18

அஞ்சுடன் ஆறும் அறிந்துவிளங்க
விபரஞ்சொல்லுங்குருவே — அது
கொஞ்சமிசையிலெஞ்சும் சமானதி
லாறல்லோ மகனே 19

காட்டாரியம்புஞ் சமானும் இல்லாமுந்
தானேயென்சற்குருவே — அதை
காட்டியதன் சிறைநாடி தலையுன்றன்
வீட்டிலறிமகனே 20

வீடென்ன வீட்டிலறியாவீட்டாவென்ன
வின்றுமென்சற்குருவே — சொந்த
கூடுதிலறியாதவனுள்ளில்
கொடுங்காபிராமகனே 21

சொந்தவீட்டிர்வீற்றிருப்பதுயாரென
வின்றுமென்சற்குருவே — அங்கு
அந்தமில்லாதிறை யோங்கிருக்குந்த
ஏலாஹுயாமகனே 22

வானங்களுமேல் திரைகளும்வல்லோன்
அறஷாமுண்டோ குருவே அங்கு
வாகான ஆகாஷமும் உம்பருமுந்த
ஹறாவுமுண்டேமகனே 23

சந்தங்கமழ்மஹ்மூகரிலையன
மும்உண்டுமோ குருவே அங்கு
சுந்தரமாங்கம்பாவுஞ் ஸபாமறா
வாவுமுண்டு மகனே 24

சங்கைநபிமஹ்மூதரின் மீகிர்
வஹிவருமோ குருவே அங்கு
எங்கும்புகழ் ஜிபுரீலின் வஹியதா
மொராக்குமல்லோ மகனே 25

கூறும்வஹியதை கேள்போர்களுமங்கு
உண்டோவென் சற்குருவே அங்கு
தேறுதலாகிய ஸஹ்புகளுக்குள
பாக்களுண்டு மகனே 26

இந்தஉலகமதைப்போலதுவுஞ்
ஜிஸ்மதுவோ குருவே இது
ஆலம்ஸகிறது ஆலங்கீரென்றறிந்
துக்கொள்வாய்மகனே 27

ஏழுநாங்கெழுத்தா லெழுந்தகுருனை
யெனக்கருளுங் குருவே அது
தெளிவாயிலங்கு முஹம்மதியானா
கோலமல்லோ மகனே 28

கோலமதாகி குதாயின்குணங்கொண்டோர்
கென்னபலன் குருவே அவர்
ஆலமரஷாளு மாதிறஹ்மான் ஹபீபல்லவோ மகனே 29

கோலங்கொண்டே குணக்கேடதினாலல்
கெதியென்னவென் குருவே அவங்
காலமிலும்பரமீதிலும் நாயிலுங்கேடனல்லோமகனே 30

காலாறெழுத்தில் பனுவதைநீக்க பகாவென்னசற்குருவே அதில்
நாலெஞ்சடனென்றை நீக்கி பொருமூன்றில்
தாக்கிக்கொள்வாய் மகனே 31

தாக்குமெழுத்ததில் தாபரமானதை
நோக்கியருள்குருவே கரை
சேர்க்குமெழுத்தை சாத்தினில்கூவிக்கொள்
தாயிமா யென்மகனே 32

சாயென்றவாசி நடக்கும்விபரத்தை
சாற்றிடுமென்குருவே அதை
சரியாயுன்னடி நடுமுடியினிலேறி
இறங்கிபாரென்மகனே 33

ஏறியிறங்கும் விதங்களறிய
உரைத்திடுமென்குருவே அதை
ஏறியதேவியினுடன சூஸ்திரம்பார்த்
தறிந்துகொள்ளென் மகனே 34

நடனசூஸ்திரமென்ற நளினமதையெனக்
கோதிடுமென்குருவே அதை
திடமுடனேயுன்றன் யோகத்தில்காட்டி
தெளிந்துக்கொள் ளென்மகனே 35

நலமானயோகத்தி லாகநிலைமையை
நாட்டியருள்குருவே நிதம்
அலமலயாமலுன் மணிமந்த்ரஸாபத்தை
நீக்கிப்பாரென்மகனே 36

ஸாபம்நீக்காவிட்டா லாகுங்குறையதை
சாற்றுமென்சற்குருவே தன்னில்

சரியானவிர்றுகளொன்றும் வெளியாக
மாட்டாது என்மகனே 37
பிரியாதஸாபத்தை நீக்கும்விதமதைக்
குறியாய்ச் சொல்லுங்குருவே அதை
பிரியமுடனுன்ற னுன்தாதிடங்கேட்
டறிந்து கொள்வாய்மகனே 38
அவ்விதஞ்ஸாபத்தை நீக்கினின்றல்நமக்
கென்னபலன் குருவே தன்னில்
செவ்வையுடன் விர்றுடனே வெளியாகும்
நவ்வியறி மகனே 39
சாமதுாகாளொன்றுக் கெத்தனை என்னாம்
வெளியாகுமென் குருவே அது
சரியாக யிருபத்தோ ராயிரத் தறுனூற்
றறுபத்தாறென் மகனே 40
சாமதையேற்றி யிறக்குஞ்செபத்துக்
குயிரென்ன சற்குருவே யுன்றன்
குருஉபதேசித்த கருவைக்கொண்டேயுரு
வாக்கிக்கொள் ளென்மகனே 41
இப்பொருளை யாரிடங் கேட்டபோதிலுஞ்
செப்பரிதே குருவே யுள்ளந்
துய்பரனாகிய தெய்வகல்லோ றன்புடன்
செப்புவாரே மகனே 42
குருவென் றுலகத்தி லருமைப்பொருளாய்
வெளியானதேன் குருவே அது
ஓநகாருங்காரு தகமியப்பொருளதைத்
தெரிவிக்கவே மகனே 43
குருவென்று மிஜகமதில் தெருவெங்குந் திரிகின்றோர்
குருவோவென் சற்குருவே எங்கள்
குருமஹ்முதின் குணமவர்தன்னிற் குறிப்பாயறி மகனே 44

வம்பன் கன்றுலெனை வந்தடாமல் கை
தாங்கிடுமென் குருவே நாம்
நம்புமுஹம்மதை தம்பமென்றேகல்பில்
தாக்கிக்கொள் ளென்மகனே 45

தங்களுரைத்ததெல்லாங் கல்பிலாராய்ந்
துணர்ந்திடுவேன் குருவே அதை
மங்காமலேயறிந்தே அமல்செய்திடில்
மாஹிருவாய் மகனே 46

கத்தனிடமிந்த சிற்றனுக்கேது ஆ
செய்தருளுங்குருவே யுன்றன்
சித்தமொளிவாயிலங்கிட முத்திதந்
தாண்டிடுவான் மகனே 47

இந்தவினவும் விடையுமுரைத்தவர்
நாமமேதென் குருவே அவர்
விந்தைபொருந்திய நாமமுஹம்ம
தப்துல்காதிரு மகனே 48

இன்பமுடனீன்ற தந்தையர்பேரை
இசைத்திடுமென் குருவே அவர்
எங்குமெய்ஞ்ஞானந்துலக்கும் செய்கு சலா
ஹுத்தீனல்லோ மகனே 49

நாளேசகருத்து ஹாலதிலே ஜெயந்
தந்தாள்வதார் குருவே அந்த
வேளையிலும் கபுர்மீதிலேயுமுஹ்யித்
தீன்வருவார் மகனே 50

கத்தன்மஹ்ஷறில் சித்தமுடன்நபி
வெற்றியுண்டோ குருவே பரி
சுத்தஷமாரில் முத்திபெற்றோர்கெதி
பெற்றிடலா மகனே 51

இக்கவியை யுரைத்தோர் கேட்டோர்தாய்தந்தைக்
கும் இருவாங்களுக்கும் றப்பு
எக்காலமுஞ்சொர்க்க மீதினிலுன்றன்
லிகாதந்தருள் ஆமீன் 52

சிந்தையுடனிதை யோதியபின்னு
அமல்செய்யும் நேசர்கட்கும் நாளை
கந்தல்கமள் மஹ்மூதுநபிஷபா அத்தருள்வாய் ஆமீன் 53

ஆமீன் ஆமீன் கூறுமன்பர்கட்கும் பிழை
நீக்கியருள் ஆமீன் ஆமீன்
நேமிதனி லெந்தஆ சுபூலாக்கியருள் அர்ஹமர்றாஹிமீனே. 54

முற்றிற்று.

# 4 மெய்ஞ்ஞானகும்மி.

## வெண்பா.

வல்லான்றனைப்புகழ்ந்து வள்ளல்நபிமீதிலயுஞ்
சொல்லால்ஸலாத்து ஸலாமோதியே சட்டமதுனை
நாலேழாக்ஷரத்தால் நாதனுருவாய்ச் சமைத்த
கோலமதுவின் விபரம்பார் 1

## கும்மி கன்னிகள்

கும்மியடிபெண்ணே கும்மியடி கொண்ட
கோலத்தைப்பார்த்து நீ கும்மியடி
நம்மையாளுங்குருநாதரின் ருஷ்த்தை
நாடிக்கும்மியடிங்கடி ஹம்தை பாடிக்கும்மியடியுங்கடி. 2

அவ்வலதாயிருந்தவன் தான் தன்னி
லாகிறஹ்மதுவைப்பிரித்து
செவ்வையுடனவ்வொளிவதைப் போற்றிடுஞ்
சிறப்பைப்பார்த்து நீ கும்மியடி

ஆலமுனைத்தமவரொளிவால் வல்ல ஆதிபரன் வகுத்தானதினால்
சீலமுடனேமுஹம்மதியாவான கோலத்தைப்பார்த்துநீ கும்மி
ஏகன்புறுகானிறக்கிவைத்தான் சொந்த (யடி 4
எழுநாங்குடனொரு ஹுருபைக்கொண்டு
தேகசுரூபமவ்வல்லாத்தா. விறை
தான்படைத்தானென்று கும்மியடி 5
அவ்வல்அலிபை ( ا ) புருவத்திடை யதி
லாதாரமாக்கி பேத் ( ب ) தே ( ت ) யதையும்
இவ்வுடலிலிருபுருவ மாக்கின இயல்பறிந்து நீ கும்மியடி 6
தேயைக்கொண்டே தேவனொத்தியதாய் வெகு
தெளிவதாக்கியதின் னுகத்தை
காயமதின்கறை நீங்க ஸிர்றய்வைத்த
காரணமறிந்து கும்மியடி 7
ஜீமைஜலாலாய்த் தலையில்வைத்து சொந்த
ஸிர்றை ஹீறப்பாக முடிவைத்தான்
ஈமானுடனிதின் கருத்தைத்தெரிந்து
இன்பமுடனிதங் கும்மியடி 8
ஹே ( ح ) யுடன் கே ( خ ) யிருஹுருபைக்கொண்டு சொந்த
ஹக்கனிருபுய மாக்கிவைத்து நேயமுடனிரு கணிதமாக்கின
நேர்மையறிந்து நீ கும்மியடி 9
தா ( د ) லுடன் மெல்லின ( ذ ) தாலதுவும் தன்னில்
தரித்திடு முளங்காலதுவாய் தாலமதாளுந் தனியோன்படைத்த
தயாளம்தெரிந்து நீ கும்மியடி 10
மேலான றே ( ر ) யுடன் ஸே ( ز ) யதையுங் கொண்டு
மேன்மையிருவிலா வாக்கிவைத்து
தாலமதில்ஸீனை ( س ) மார்பில் வலதாக்குஞ்
சூக்ஷிரம்பார்த்து நீ கும்மியடி 11
திரிநகத்தாகிய ஷீனைக் ( ش ) கொண்டு வெகு
திறமுடனிடமார்பைவைத்து
அறுஷதிலும் விரிவானகல்பையுள்ளில்
ஆண்டான்வைத்தானென்று கும்மியடி 12

ஏற்றமுள்ள ஸாது ( ப ) லாதைக் ( ம் ) கொண்டு நம்பில்
ஏகனிரு செவியுமமைத்து
சாற்றுங்குருமொளி கேட்கும் புலனதாய்
சமைத்ததறிந்து கும்மியடி 13

பெருமையில்லாதிருபாதமதை றப்பு
பிறியமுடனேதேளையதனால் அருமையுடன்வகுத்தமுகநாங்கின
அன்பையறிந்து நீ கும்மியடி 14

வன்மைஷிறந்திடும் ஐந் ( ε ) கொ்யி ( ζ ) னதால் பிக
வாகாயிரு கொடுங்கையதையும்
நன்மைகளை ஹக்குரைத்ததுபோல் செய்ய
நாதன்வைத்தானென்று கும்மியடி 15

பே ( ப ) யுடன் ( ழ ) காபிருஹறுபதுவைக்கொண்டு
பேணுதலாய் பிடிகையதுவை
நேயமுடன்பெரியோன் படைத்தானென்று
நேஷித்தனுதினங் கும்மியடி 16

வல்லபம்தங்கிய காப ( ம ) தனைக்கொண்டு
வாஷமதாக முதுகந்தண்டை
சொல்லஒவ்வாறப்பமைத்தானென்றே அவன்
ரூகூஷத்தை நாடி நீ கும்மியடி 17

சூக்குமத்தின் லாமிரு ( ப ) தொடையாஞ் ரூகூஷ
சுகூனில்நீன்றிடு ( ம ) மீமதுவும்
ஊக்கமுடன் மூளைநெஞ்சிலங்கு தென்
றுணர்ந் தனுதினங் கும்மியடி 18

நாமுகயெங்குஞ் சிறந்திலங்கும் வல்ல
நானது ( ட ) றாஹாய் நிறம்பிநிர்க்கும்விருயமுகுமகாமில் துலங்
விபரமறிந்து நீ கும்மியடி [கிடும் 19

ஆதாரமாகிய உந்திமகாமது அழகானவா ( , ) வதலைமைத்
வேதந்துலங்கிடும் கல்பது ஹேயென்று (தான்
விளங்கிநாளுங் நீ கும்மியடி 20

நபுஸ்ஸதையும் வல்லராஹூதையு மொன்றாய்
நாட்டியுணர்ந்து நாம் பார்க்கையிலே
நபுஸ துவாவென்றும் ராஹூது ஹேயென்றும்
நயந்துஹூவென்று கும்மியடி 21

ஹேயுடன் வாவான ஹூவைக்கொண்டு ராஹூ
கொளுவுதலாய்த் தீரமாகநின்றால்
ஹூவதுக்குள் ஹக்கொளிவதுவந்து
குறிப்பாகுமென்று நீ கும்மியடி 22

கிருபைபொருந்திய லாமலிபானது
கிளம்பிடும் நல்லழுச்சதுவாம்
விரிவானஹம்சாவும் ( ) விந்திநிலையென்று
விபரித்தறிந்து நீ கும்மியடி 23

எயது ( ) வா யாகுமென்றுணர்ந்து சொந்த
எகன்மகா சிறப்பாகிலைவைத்த
காயஞ்சமைந்திடும் நுட்பமறிந்து நீ
கருத்துடனிதங் கும்மியடி 24

ஷிபத்தான மத்ததுஞ் சத்ததுவு மகா
ஷிர்றை சிங்காரமாய்க் காட்டுதழு
ஸேரும் ஸபரு மிருஉதடென்றுநீ
செல்வமுடனிதங் கும்மியடி 25

தோஸபரு மிருஸோதுவுஞ் சேர்ந்த
தோப்பேஷது மொருபேஷாடனே
தோஷமில்லா முத்தலகைதையும் உள்ளில்
தொடுப்பாயறிந்து நீ கும்மியடி 26

இந்தவிதமாய் சடமமைந்து இங்கு
வந்தவிபரமதையறிந்து சொந்தபரனை தன்னிலுணர்ந்து நல்ல
விந்தையுடனிதம் கும்மியடி 27

வேதர்களும் குருநாதர்களும் சொன்ன
போதமதை யுணர்ந்தே அறிந்து

பூதலமீதி லெல்லோருமறியயான்
வோதினதென்றுநீ கும்மியடி 28

ஆசையுடனிதைப்பாடும் அப்துல்காதிற்
அங்கமதிலொளி வாயிலங்க
ஆசான்முஹம்மது ருக்ஷமதைக்கண்டு
ஆனந்தமாய்நிதம் கும்மியடி 29

எங்குந்நிறைந்திடும் ஏகபரனென்றன்
அங்கமதிலொளிவாய் சிறந்து
பங்கம்துயரம் பாவங்களகற்றிடும் பரமனைநாடி நீ கும்மியடி 30

என்றன்பிழையும் மென்தாய் தந்தையின்பிழை
என் சுற்றத்தா ரினத்தார் பிழையும்
என் கைபிடித்தோர்பிழையும் பொறுக்க
இறைவனைப்பணிந்து கும்மியடி 31

நாளைகியாமத்து வேளையிலே எங்கள்
நாதர்நபியின் கொடியதின்கீழ்
கோளையில்லாமல் தரித்தொளிவாகிட
கோமான் லிகாவிந்தருள் ஆமீன்.

* (முற்றிற்று) *

# 5 ஹக்காயிகு பதங்கள்.

## விருத்தம்

திருநபியொளிவாயெங்குந் திசையெல்லாமிலங்கிநின்று
அருவதாயமைந்து என்னிர் ஆனந்தமுருவதாகி
புருவதினிடையிற்சேர்ற்றுங் குருஒளிவதனைக்கண்டு
மருவியான்காக்ஷிபெற்றால் மகிழுடன்மோக்ஷந்தானே.

பதம் பல்லவி

ஆ இதுதானே நல்லமோக்ஷம் எங்கு
மிலங்கும் ஹேமமிதம் தூலங்க ஜெபஞ்செய்வதே ஆ இ

சரணுதுபல்லவி

ஆதிபராபரன் அவ்வயிற்றன்னின்
ஆனந்தமாகிய ஆசையால் முன்னிர்
வேதமுஹம்மதா விஞ்ஞானிவைத்தன்னிர்பிரித்த
சோதியொளினவயறிந்து சஹாஷேதுசெய்வதாநிதம் ஆ இ 1

அஞ்செழுத்தான பஞ்சட்சரந்தன்னிர்
அடங்கியிருக்கின்ற மெய்ப்பொருளதனை
நெஞ்செழுத்திர் பலகாலமும் நிறுத்தி நீ
நேஷித்துச்சரமெனும் அன்பாசினிர்ஜெபஞ்செய்வதே ஆ இ 2

கலியுடன் மாவான காக்ஷியைக்கண்டு
மெலியும்பஞ வசஷ்ரங்களை வென்று
தெளிவுபெற்றிலங்கு மூவசஷ்ரங்களைக்கண்டு
தேர்ந்துதினம் ஹாவுடன் ஹீ ஹூ வதை ஜெபஞ்செய்வதே 3

ஹாவுக்குள்ளேயொரு அகமியமுண்டதாம்
யாருமதைநன்று யறியவெண்ணத்ததாம்
ஹூவுககுள்ளேயதை யுன்னதமாயறிந்து
ஹாவும்ஹீயும்ஹூவும் தாந்தான்றெனும்ஜெபஞ்செய்வதே 4

அலிபுடனூனதுமான வசஷ்ரத்தின்
அரும்பொருளை தன்னிலாராய்துணர்ந்து
அலீசலாஹொலி சுதனகமதிலிலங்கும்
அரஞெளிவதை தெரிந்தறிந்து ஜெபஞ்செய்வதே 5

* முற்றிற்று. *

வெண்பா

நாமானநர்க்கலிமா நாலாறிநட்பொருளை
தேமாங்கனியெனவே தீனவர்க்கு ஜேமமுற
சுமானுட னிசுலாமிப்புவியிலே துளக்க
சீமானே நீயுதவிசெய்

ராகம் ஜயந்தஸ்ரீ தாளம் ரூபகம்

பல்லவி

ஹம்ஸவதையறிந்து கூறடி குருசூக்ஷங்கண்டு நீ ஹம்ஸ

அநுபல்லவி

ஹாவிளைமைந்த அகமியன்றன்னைபே
ஹீயதிலே நீ யிறக்கியுணராமல்
ஹம்ஸவை யறிந்துகொண்டேனென்று வீணாக
கூவியுன்றவிளை சாவியாய்ப்போக்காமல் ஹம்ஸ

சரணம்

ஆதியில்சிற்றுன ஹாவடி தந்தைசிரசதில்
ஆனந்தஒளைக்ஷ ஹம்ஸவாமடி
நீதியாயிலங்கும் நாறடி நாதெனுமுதிப்பினா
நாதெனும் நெரிப்பெழுந்ததாமடி
ஓதவரிதான ஆசையுதிப்பினால்
ஓங்காரமான பிதாவினுகப்பினால்
மாதாவுடனே தான் மோதியேநாறதின்
மோகக்குமுறியுடைந்து நஸலாய்க்குன் ஹம்ஸ 1

சுத்தமாய்சுல்பின்வழியடி சுகமாயெழுப்பியே
சூக்ஷமாய்ப்பிறகாசமாமடி
வித்தானவெண்சுடராயலிபடி விநோதமான நான்
வட்டத்திருட் சொட்டதாமடி
முத்தொடுபெய்சைக் கலந்துநகத்தாக
முன்னவந்தாத்தென்று அன்னையிற்சேர்ந்தவே
சித்தானநாதன் நீதானென்றுசெப்பிய
ரெத்தினமான ஸியாத்தமைந்தாகிய ஹம்ஸவ 2

கலிமாவதின் காக்ஷிபாரடி கலிதாத்ததாமடி
காணும்பிதாபங்கென்றாடி
மெலிபுமாசிபத்தென்றதேறடி மாதாவின்பங்கென
மாஹிறவர் கூறினாடி
கலிமாவெல்லா நாமென்றேம்யறிந்தேதன்னிர்
தாக்ஷிதெரிந்து நல்மோக்ஷத்தைநதேடென்று

அவிமாமனுருரைத்தாரிதை மெய்யென்று
ஆனந்தமாகிய மோனமதாகவே ஹூ 3

ஆலமெக்கும் நிறைந்ததென்னடி ஆங்காரமாகவே
ஆலநபியொளிவதாமடி
கோலமதிர் சிறந்ததென்னடி குதாயுடைய
குணங்கொண்ட இன்ஸானதாமடி
மேலான இன்ஸானெனுஞ் சொல்லைப்பாரடி
மேலுங்கீழுமலிபும் நூனதாமடி
சீலமுடனடுவிர் சீனமைந்திடுஞ்
சிர்றையறிந்து உன்ஷர்றையகற்றிநீ ஹூ 4

தாவஸீம்றசூலானதென்னடி குருவாய்த்துலங்கிடுந்
தாபரகடவுளாமடி
ஆசையுடன்றன்னிர்ப்பாரடி யவர்வீற்றிருக்குநல்
லாசனமுதிப் பெனுங்கல்பாமடி
நேசமுடனிந்த தாசன் அப்துல்காதிர்
பாசமுடன்சொல்லும் ராஜகவியதை
வாசித்துணர்ந்து நீ நேசத்திலாகிடில்
மோக்ஷகதி யுனக்கல்லாதுவேறில்லை ஹூ 5

※ முற்றிற்று. ※

ராகம் தன்யாசி தாளம் யேகம்

பல்லவி

தாத்தையாராய்ந்திடுவாய் சிபாத்தே தாத்தை

சாணுபல்லவி

தாத்தையசாய்வதனிற் தோற்றிரம்தோணுதில்லை
தாத்துநீயல்லாதில்லையே ஸிபாத்தே தாத்தை 1
ஹக்கையுணர்வதினிர் கல்கேயல்லாதில்லையே
கல்கில் ஹக்கையறிவாய் ஸிபாத்தே தாத்தை 2
அஹதாயிருந்ததனிர் ஆராய்வதொன்றுமில்லை
அஹதில்மீமுடனெழுந்தாய்ஸிபாத்தே தாத்தை 3
ஹூவாயிருக்குமப்போ காணுவதொன்றுமில்லை

ஹூவாயெங்கும் பரந்தாய் வியாத்தே தாத்தை 4.
தாத்து ஆசென்றறிந்து சூஸ்திரமாய்த்தெரிந்து
நேத்திரந்திடைநிறுத்தி வியாத்தே தாத்தை 5
ஆதியென்றேயிருந்தால் ஆருமறிவதில்லை
சோதியென்றேசிறந்தாய் வியாத்தே தாத்தை 6
தாத்துவியாத்தல்லமா வேற்றுமையென்றறிவோர்
நாற்றநரகிலெரிவார்வியாத்தே தாத்தை 8
ஆலமெங்குமுணர்ந்தால் அற்புதமாய் நிறைந்த
கோலம் தாத்தல்லாதில்லையே வியாத்தே தாத்தை 7
செய்குசலா ஹூவியின் செல்வதாத்தையுணர்ந்தால்
சேயன் அல்லாதில்லையே வியாத்தே தாத்தை 9

※ முற்றிற்று. ※

அடங்காது அடங்காது என்ற மெட்டு

ராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

அறிவேது அறிவேது ஆத்மரூபமே யுனக்கறி

சரணநுபல்லவி

ஒளிவாயிலங்குமிந்த உண்மைமுச்சுழிநடுவில்
தெளிவாகவீற்றிருக்குந் திவ்ய மஹாமூலத்தைக்கண்டால்
நன்மையுண்டாமே யுந்தின்மையும்போமே உண்மையிதுவாமே 1
நெஞ்சிலிருந்தாழுகின்ற பஞ்செழுத்தையுந்தெரிந்து
பிஞ்செழுத்திலேசிறந்து கொஞ்சுமஹாபூவைக்கண்டால்
சங்கையுண்டாமே யுன்பங்கமும்போமேயெங்கும்புகழாமே உன 2
கலியுடனேமாவதுவுங் கருணையுடனேகலந்து
களிமாவதாய்நிறைந்த சாக்ஷியுனக்கேதெரிந்தால்
வாசமதாமே யுந்தோஷமும்போமே பிரகாசமுண்டாமே யுன 3
நாலெனுஞ்சுழிநடுவில் நாதிலங்குந்தகத்தகனிர்
தானெனும் வடிவமைந்த தன்மையதை நீயறிந்தால்
மோனமுண்டாமே உன்சனனமும்போமே ஞானந் தெளிவாமே 4
ஆதியிலே நீ இருந்த அற்புதமதைத்தெரிந்தால்
வேதம் நாதம் போற்றுமுன்னிர் வேதமுடிவிற்றெளிவாய்.
கண்டிடலாமே புகழ்கொண்டிடலாமேஉறைவைவிண்டிடலாமே 5

ஐயைந்தாகத் திரிந்தெழுந்த ஓமெழுத்தாமெழுத்தால்
தாஸனுருவாய்ச் சமைந்த பாசமதை நீ தெளிந்தால்
முத்தியுண்டாமே உன்குற்றமும்போமே சித்தமொளிவாமே 6
சிற்றனைப்பால் காதிருவின் சாந்தமனசித்தமதிர்
சித்ரவடிவாயமைந்த ஜெயமங்கசாரத்தை யுணர்ந்தால்
காக்ஷியுண்டாமே உன்குக்ஷமதாமே மோக்ஷம்பெறலாமே 7

* முற்றிற்று. *

ராகம் ஹிந்துஸ்தான் தோடி மிஸ்ரசாப்தாளம்
பல்லவி

ஹரி ஹரியெனும் பொருளையறிந்தே நிதங் கூவாமலே ஆவி
சாவியாய்ப்போனால் கூற்றன்முன் னென்னசொல்வாய்
குற்றமாமே நஷ்டமாமே கூறிலென் மனமே ஹரி 1
அலிபுரை மீமதினர்ப்புகழ்தைத் தன் அகற்றிற்றெளிந்து
அழுக்கறவிட்டால் அமரர்முன் னென்னசொல்வாய்
அன்புபோமே துன்பமாமே வெம்புவாய்மனமே ஹரி 2
கலிமாவினர்புகழ் கண்டு தெளிந்திட கருணைமுஹியித்தீன்
காக்ஷியிழந்தால் காலன்முன் னென்னசொல்வாய்
கன்மமாமே நன்மைபோமே தின்மையாமனமே ஹரி 3
உம்முல்குருஆனதி னுயிரெழுத்தின் விரிவை நம்பிலறியாமல்
நன்மையிழந்தால் நாமன்முன் னென்னசொல்வாய்
நாசமாமே வாசம்போமே தோசமாமனமே ஹரி 4
என்னிர்நிறைந்திடு மேகனைக்கண்டிட எந்தல்அப்துல்காதிர்
ஏவல்மறந்தால் எமன்முன் னென்னசொல்வாய்
ஓடிகுருவைத் தேடிபோதும் நடிகேள்மனமே ஹரி 5

* முற்றிற்று *

டை மெட்டு பல்லவி

ஹரிஹரியெதின் ரூகத்தைக்கண்டு வணங்கிட கோமானுன்கல்பினிர்
நேமமாய்வந்தால் நமன்வந்தென்னசெய்வான்
நன்மையாமே தின்மைபோமே புண்மையாமனமே ஹரி 1

கலிமாப்பொருளையறிந்து கன்னலின்கலைவிலாகாமர்
ஹாயிமையுணர்ந்தால் காலன்வந்தென்னசெய்வான்
கருணையாமே மரணம்போமே பெருமையாமனமே ஹ 2
கண்ணிடைமீதினிர் கருவுருவாகிட கருணைமுஹம்மதின்
காக்ஷிதெரிந்தால் கூற்றன்வந்தென்னசெய்வான்
குற்றம்போமே திட்டமாமே இஷ்டமாமனமே ஹ 3
சுழிமுனைமீதிர் சுல்த்தானென்னசிறுவி ஞெளிவதனிர்சேர்க்
துல்லாசமாய்நின்றால் உம்பர்வந்தென்னசெய்வான்
உள்ளமீதிர் வள்வல்லேவதம் விள்ளுவார்மனமே ஹ 4
கொஞ்சுதலாயுன்றன் நெஞ்சகமீதினிர் கோமானப்துல்காதிர்
ஜேமமாய்வந்தால் ஏமன்வந்தென்னசெய்வான்
எந்தைநூக்ஷஞ் சிந்தைமீதிர் சந்திலென்மனமே ஹ 5

* முற்றிற்று. *

ராகம் மோகனம் தாளம் ஆதி

பவ்வாருத்த கீர்த்தனம் வர்ணமெட்டு பல்லவி

இந்தமகாம் சிங்காரத்தை என்னசொல்லுவேன் நானிந்த

சரணநுபல்லவி

எட்டடிதீவதனிர் ஏகன்வலையாயிரத்
தெட்டையுங்கூட்டி யொன்றாய்கட்டிடமாயிருக்கும் இந்த 1
மேடைசிம்மாசனத்திர் மேன்மைபரணிருக்கு
ஆடிமௌனமந்திரம்பாடி குடியிருக்கும் இந்த 2
ஊமையோதைமுள்ளங்கும் ஊசிவாசலதின்மேல்
நேமவிளக்கொளிவு நோராகநின்றிலங்கும் இந்த 3
ஹக்கந்தனிலிருந்து மக்காநபிசமுகம்
மிக்கஜிபுரீல்நிதந் தக்கவஹியருளும் இந்த 4
மேலாம்வஹியதனை மூலம்நால்யார்களுக்கும்
ஆலஸ்ஹாபுகட்கும் அன்பாகவோதவிலும் இந்த 5
நாலேழோ ரக்ஷரத்தாலான மகாம்சிறப்பை
கோலம்ஸலாஹெறாவியின் பாலனென்னசொல்லுவேன் இந்த 6

* முற்றிற்று. *

ராகம் ஹிந்துஸ்தான் பியாக் தாளம் யேகம்
இந்தவனம் பார்க்க பார்க்க வென்ற வர்ணமெட்டு பல்லவி
சொந்த அர்ப்புதங்கள்பார்க்க சிந்தைமகிழ்ந்தோமடி வாடி சொ
சரணநுபல்லவி
எட்டடிமாளிகைதன்னிர் திட்டிவாசலொன்பதுண்டாம்
சட்டமுடன் ஆளுமொரு கெட்டிராஜந்தானுமுண்டாம் [சொ 1
அஞ்செழுத்தில் வாழ்ந்திருக்கும் பஞ்சமந்திரிசனுண்டாம்
பிஞ்செழுத்தில்நின்றவரை தஞ்சமென்றுநம்புநன்றாம் [சொ 2
பன்னிரண்டுகாலால்செல்லும் பன்மையுள்ளமாடொன்றுண்டாங்
கன்னியேயதைப்பிடித்து ஹறு அமுதையூட்டு நன்றாம் [சொ 3
வண்மையறபாமலையும் உண்மைகலைவுமுண்டாம்
பெண்மயிலேவாசிதனிர் நன்மைஹஜ்ஜிசெய்நீ நன்றாம் [சொ 4
செல்வமானவீடுமுண்டாஞ் சென்றுவதிர்நன்மைதெரி
செப்பினேன்சலாமெறாலியின்சேயன்பரனப்துல்காதிரி [சொ 5

* முற்றிற்று. *

ராகம் செஞ்சுருட்டி தாளம் யேகம்
பஜாயூ மேதில்போனு என்றமெட்டு
அஞ்சாதடி கொஞ்சுங்கிளிமொழியே உன்றன்
வஞ்சமகலும் வழியறிவாயடி அஞ்சாதடி
அநுபல்லவி
எண்சாணிசைவை இப்போதுணர்ந்துகொண்டால் பொல்லா
பஞ்சபாதகமுன்னில் நில்லாதடி அஞ்சாதடி
சரணம்
வட்டகுளமகிழ்ந்தே வடிந்து செழும்
வண்மைவாய்க்கால் வழியேநடந்து
குட்டகுளமதிலேவிழுந்து அங்கு
கூத்தாடும் பாங்கதைப்பார்ப்போமடி அஞ்சா 1

கூத்தாடிவீற்றிருந்தே சிறந்து நல்ல
குணமானகோலமதாய்சமைந்து
சூஸ்திரவழியதிலேவந்த அந்த சூக்ஷம்தெரிந்தால் சுகம்பெறலா
கோட்டைநடுவிலலங்காரமுள்ள நல்ல [மடி 2

வீட்டிர்புகுந்து குருபரனொளியை
நோட்டமுடனே யதுசீனந்தொழுதே ஹறஹைவ
மீட்டிக்கொண்டால் மீக்ஷிபெறலாமடி அஞ்சா 3

அஞ்செழுத்தாலமைந்த அழுந்த அங்க
பஞ்சாக்ஷரத்தின் பயனறிந்தாவொடி
அஞ்சாமலே கொஞ்சுங்குருவுடனே நிதம்
ஆனந்தமாய் சுகித்திருப்போமடி அஞ்சா 4

வாசியெனும் பரியேறிக்கொண்டு குரு
வடிவான தீபச்சுடரைக்கொண்டு
நாசிவழி நயனத்திடையிர் நின்றால்
நாதன் வந்தே போதந்தருவாரடி அஞ்சா

நூனில் அலிபுமகிழ்ந்தே அஸ்லாய் காணில்
நூருயிலங்கும் ஸலாஹெனுங்குருவின்
தீனையுதித்தபாலன் றனையுணர்ந்தால் நல்ல
ஞானமுதுண்டு சுகித்திருப்பாயடி அஞ்சா 6

* முற்றிற்று. *

ராகம் நாதநாம்கிரிகை ஏகம் தாளம்

பல்லவி

ஆதி அமாவதிலே ஓதஒண்ணா அஹதை
ஆராய்ந்துணர்வது நானெப்போ எப்போ
சோதியொளிதுலங்குஞ் சுகிர்தமுஹம்மதுவின்
சூக்ஷந்தெரிவதுநான் எப்போ எப்போ 1

ஆதம் அகமியத்தில் ஆங்காரமாயிருந்து
ஆசானைப்போற்றுவது மெப்போ எப்போ
வேதநெறியதனை வேந்தருரைத்ததுபோல்
வேண்டியகந்தெளிவ தெப்போ எப்போ

பக்ஷமுடன் முஹிதீன் பாக்யவதனமுகை
பார்த்துமகிழ்வது நானெப்போ எப்போ

இச்சையென்னகற்றுள் பராக்ருபடனே திரு
அச்சைத்தரிப்பதினி எப்போ எப்போ 3

சிந்தையர்ப்புதவீரர் சீர்பாதமலரென்றன்
சிரத்தினிலேற்றுவது மெப்போ எப்போ
அந்தமில்லா அஹதாய் ஆழுங்குருபரனை
ஆனந்தமாய் தெரிவதெப்போ எப்போ 4

இவ்வுலகின்சுகிப்பி னின்பமனுமென்று என்
இச்சையகல்வது நான் எப்போ எப்போ
செவ்வையுடன் கடைக்கண் செல்வஸ்தலத்தின்மங்கை
சேர்ந்துசுகந்தருவ தெப்போ எப்போ 5

ஆசைவலையதுக்குள்ளாகி பொய்வேசமதால்
மோசம்போகாதிருப்ப தெப்போ எப்போ
ஆசானிருக்குமந்த ஆஸனமதைக்கண்டு
ஆண்டுவீற்றிருப்பது மெப்போ எப்போ 6

எக்காலமும் அகத்தில் ஏந்தல்சூடிக்கொண்டென்னில்
ஏகனருள் தருவதெப்போ எப்போ
தக்கவென்சற்குருவை ஹக்கென்றவரொளிவிர்
தங்கியுளத்தெளிவ தெப்போ எப்போ 7

ஜெகதலம்புகழ்பெரும் ஜெம்மல்முஹம்மதுவை
சிறப்புடன் தெரிசிப்ப தெப்போ எப்போ
இகபரமிணங்கிட ஈரஞ்சுடரை யொன்றை
இறக்கியானேற்றுவது மெப்போ எப்போ 8

செய்குசலாஹெராஷியின் ஜெண்டாபிமூலதிங்கிள்
சேர்ந்துதரிப்பது நானெப்போ எப்போ
சேயன்முஹம்மதப்துல் காதிரின் கல்பதனிர்
சேர்ந்துதானுருகுவது மெப்போ எப்போ 9

கருஉருவானவென்றன் குருவருளைதத்தன்னிர்
கண்டுசஞ்சாரஞ்செய்வ தெப்போ எப்போ

திருவிகா வுடலல்ல தீதாறுங்கண்டியாங்
நீசமுடனிருப்ப தெப்போ எப்போ 10

* முற்றிற்று. *

# 6 நபியுல்லாபேரில் பதங்கள்

## வெண்பா

ஆதியஹதாய்த்தனித்து அவனொளியிலே பிரித்த
சோதிநபிமீதிர் புகள்பாடவே நீதியுடன்
வேதநெறிகாட்டுமென்றன் வேந்தனே என்னுளத்திர்
போதமறி வீய்ந்துதவிசெய்

ராகம் செஞ்சுருட்டி தாளம் சாப்பு

மஞ்சுநிகர் குந்தளம்மின்னே என்றமெட்டு பல்லவி

நளினகலிமா ஒளிவைநாட்டினார் மஹ்மூதுநாதர்
அளியாவரந் தந் தருளைக்காட்டினார் அகந்
தெளியமறையின் வழியைத்துலக்கி
விழியினடுவி லருளைச்சூட்ட நளின 1

ஞான அமுதிவ் வுலகிலூட்டினார் மறைவீசும் நாதர்
ஈனரைஈமானிலாக்கினார் நிதந் தானவனொளிதன்னிர்க்காண
மோனமாய் நினருளைக்காட்டி நளின 2

வானகமதிலேகும்நாதரே வல்லோன்முன்சென்று
மோனமோ டுரைபேசிமீண்டோரே வனக்
கானகந்தனிர்மானைமீட்டி வேணபுதுமைதோணகாட்டி நளின 3

சிந்தையிலவரருளைச்சூட்டுவார் யென்றுளும்வந்து
சுந்தரமெய்ஞ்ஞானமூட்டுவார் மிக
விந்தையோடெனை சொந்தமெனவே
கந்தமலரைத் தந்தென்றுளும் நளின 4

பஞ்சபாதகங்களோட்டுவார் பயகாம்பரென்னகம்
மஞ்சுடன்வந் தொளிவைக்காட்டுவார் என்ற
நெஞ்சமீதிர் விஞ்ஞைசயிலங்க வஞ்சந்துயபங்கஞ்லகற்றி நளின 5
நெறிபெறும்வழியதனை நாடினேன் யானைப்துல்காதிர்
சுதியுடன்மதனோஹாரிபாடினேன் இத்
தறியினுன் முகவதனைநோக்கி இதயமதனிர்மதிபோலிலங்க [ந 6

முற்றிற்று.

ராகம் ஹிந்துஸ்தானி தோடி ஏகம் தாளம்
தாதாபாய் நவரோஜி என்ற மெட்டு பல்லவி
நாதா மஹமூதுவேதா—நாதா
நன்றுவென்னகம் நின்றேதாள்தா—நாதா

சரணம்

ஆதியிறையொளிவாய் ஆலமெங்குமேதெளிவாய்
சோதியாய்வந்திலங்கிடும்நாதரே
வந்தேயருள்தந்தெனை செளந்தமெளன விந்தைதரும் நாதா 1

துஹைறு

அஞ்சாமல்யான்செய்த பஞ்சமாபாதக
மனதபொருத்தாளுங்கோமான்
அடியேன் அகந்தனிர் கொடியநபுசின்குணம்
போக்கியருள் தாக்குஞ்சிமான்
கங்குல்மதியனைத்தோ ரெங்குந்தினைவிளைந்தோர்
கர்மேகக்குடையாகக்கவிழ்ந்திடும்
கருணைநபி தருணத்திரு சரணக்கதிதருவீர் குரு நாதா 2

துஹையறு

ஆகாயமீதினில் மோகமுடனேகியே ஏகன்முன்னிர்சென்றவா
அன்புடன்விர்றோடு ஐஹ்றயும்பேசியே
அழகாளங்கும் வின்றவா
காதலுடனேயுனது காக்ஷிபெறவே எனது
பாதகமகன்றோடிடவே நிதம்
வாருமிது நேரந்துயர் தீரும்முகம் பாருங்குரு நாதா 3

முற்றிற்று.

ராகம் ஹிந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்
ராஜவிசுவாஸலாலா என்றமெட்டு பல்லவி

ஆதரித்தாளும்நாத ரதிபதியே — நாத ரதிபதியே ஆத

அநுபல்லவி

சோதிமன்னீதா சுகிர்தமெய்போதா ஆதரித்தா 1

துகைறபரு

ஆதாரமாய்வந்து அஞ்ஞானமிருளோட்ட
அருள்தந்தசிங்கம் நீயே
அவனிதனிலுனையன்றி யாருமெனக்கில்லை நின்
அன்புவைத்தாளுஞ் சேவை
விந்தையுடன்மறைதந்திடும்நாதா
சொந்தமுடன் அகம் வந்திடும்வேதா ஆதரித் 2

பல்லவி சந்தம்

வாதாஎன்மீதிலுங்க ளருள்தரவும் உங்க ளருள்தரவும்

அநுபல்லவி சந்தம்

ஆதியின்றாதா அருமறைவேதா வாதா என்மீதி

துகைறரு

தீதன்கன்னுசுவன் றடாமலினைக்காக்குந் திவ்யகுருவானநீதா
தினமெனதுளங்கனிர் தீநெறிதுலங்கமெய்ஞ்
ஞான அமுதூட்டும் நாதா
தஞ்சமென்றோதிய வஞ்சனையாளும்
நெஞ்சமகிழ்வநதா கொஞ்சமென்னுடம ஆதரி 3

முற்றிற்று.

ராகம் பலஹம்ஸ தாளம் ஏகம்
மஸ்ஸர தேத்தேஹா என்ற மெட்டு பல்லவி

குருநாதா மஹாமூதா உமைநாடியே மையலானேன் குரு

அநுபல்லவி

நாடியேமையலானேன் கல்பில் தேடியே மையலானேன் குரு

சரணம்

செந்தாமரைப்பதந்தாரும் இந்த சேயன்வினையதுதீருஞ்
சிந்தையதில்வாரும் மெய்ஞான சொந்தமாய்முகம்பாரும் குரு 1

வார்சியதில்யானேற மேஹ வாவிஞலருமேள்ர
பாசமுடன்கூற ஞக்கீதசேசராய்வநந்நீரா குரு 2
முத்தொளிவே மயில்வேஷா இறை முன்னவன்றிருநேசா
சித்தமதின்வாசா எங்கள் ஜெர்மலமகராஜா குரு 3
அண்டர்பணியும்நவநீதா இங்க அடிமையகத்தின் தவப்போதா
தொண்டந்தொழும்நாதா துணையாகிமெஹ்மூதா குரு 4
நாட்டில்சிறந்தமக்கத்தூரா எங்கள் நாதரப்துல்லாவின்குமாரா
நாட்டந்தரும்வீரா நபி நாயகாஉபகா குரு 5
நாடுமுஹம்மதப்துல்காதிர் சுழிநயனத்திடைவந்தாளெப்போதும்
ஓடுந்துயர்தீதும் ஞான மூட்டுவீரெப்போதும் குரு 6

முற்றிற்று

ராகம் ஸஹானு தாளம் ரூபகம்

பல்லவி

கோமானெனைக்காரும் ஈமானருள் தாரும் கோமா

சரணநுபல்லவி

பூமலர்சிறந்தமக்கா நேமியில்வாளும் குரு
ஹாமீமஹ்மூதெனும் தாஹீமெனையாளுங் கோ 1
தஞ்சமென்றுமைபேவிதங் கெஞ்சினேன்வேதா தங்கள்
செஞ்சரணந்தந்துஎன்றன் சஞ்சலந்தீநம கோ 2
அந்தரமதில்முகாய் சுந்தரஞ்சூழும் எங்கள்
சுந்தரமுஹம்மதே என்றன் முகம்பாரும் கோ 3
கன்னல்செறிசே ஜெ மக்காநன்நகர்வாழும் அண்ணல்
மன்னரப்துல்லாவின் பாலரெந்துயர்தீரும் கோ 4
முத்திபெற்றிலங்கும் பரிசுத்தஹபீபே இந்த
சிற்றனப்துல்காதிறை நீர் வெற்றிதந்தாளும் கோ 5

முற்றிற்று

ராகம் பைரவி சாப்பு தாளம் பல்லவி

செக்கமலர்பதத்தை சங்கையாய் தேடிவாடி செங்

அநுபல்லவி

மக்குல்குண்டைகவிழும் மன்னர்முஹம்மதுவின் செ

சரணம்

பூதலமீதிலவர் பாதந்தோயாதவள்ளல்
காதங்கஸ்தூரிகமழ் வேதமுஹம்மதுவின் . செங் 1
அம்பரமீதிர்சென்று தம்பிரானோடுநின்று
அன்பாய்நினைக்குலக்கும் அரசர்முஹம்மதுவின்செங் 2
மக்கநகருதித்து மணமாமதினைவதிர்
ஓங்காயமைந்திலங்கும் ஹாமீமுஹம்மதுவின் செங்க 3
பக்ஷமுடனே இந்த பாலனைப்துல்காதிரை
மூச்சுடராய்வந்தாளு முன்னோன்முஹம்மதுவின் செங் 4

முற்றிற்று

ராகம் ஹிந்துஸ்தான் பியாக தாளம் ஏகம் பல்லவி
கந்தமலரடியை எனதுள்ளத்திலே
தந்தெனையாளுமநாதரே மஹ்மூதரே
தந்தெனையாளும் நாதரே
அந்தரமாய்மிதங் கந்தரஞ்சூழுஞ்
சுந்தரரேகுக்ஷந்தந்தெனையாளும் கந்த
அல்லலதைபகற்று அல்லாவினதூதரே
நல்லோர்புகழும் நாதரே மஹ்மூதரே
நல்லோர்புகழும் நாதரே
பொல்லாநபுசணைத வெல்ல என்னாளும்
இல்லல்லாஹ வெனுஞ் சொல்லைத்தந்தாளும் கந்த 2
எங்குமொளிவிலங்க கங்குலிரவதில்
திங்களைத்தநாதரே மஹ்மூதரே
திங்களைத்தநாதரே தங்களருளாலென் அங்கமிலங்கிட
இங்கமொளிவதை துங்கமாய்தந்திட கந்த 3
ஆவலுடன்புகழும் பாவிஅப்துல்காதிர்
கூவியழைத்தனாதரே மஹ்மூதரே கூவியழைத்
காவலுடன் வந்து தீவினைநீங்கிட
ஹாபிவைசாத்தினிர் கூவலுக்ஷந்தர கந்த 4

முற்றிற்று

ராகம் ஹிந்துஸ்தான் காப்பி தாளம் ஏகம்
ஆயோசெய்யா என்ற மெட்டு பல்லவி
பரமக்ஞாதா பாரெங்கும்புகழ்வேதா பயசாம்பவெனும்நாதா (பர
அநுபல்லவி
பரனருளெங்கும் பகருநகந்தா
பரவப்பிணியைப்போக்கி பலனருளைத்தாக்கி
பாசமுடன் தாசனகம் ஆசனமாய்வாசமுறுந்திரு (பரம 1
மாயமிவ்வாழ்வை மகிழ்வென்றெண்ணி
மயங்கிடாமலென்னை மனதிலாசான்றன்னை
மாட்டியருள் பூட்டமிகு ளோட்டகதம் நாட்டிவரந்தரும் (பர 2
தஞ்சமென்றேயான் கெஞ்சினேன் நேயா
மஞ்சைவடிவானேரே விஞ்சையருளும்பிரே
சஞ்சலற கெஞ்சமகிர் மஞ்சுடனே கொஞ்சிடவேவரும் (பர 3
பூவுலகெங்கும் புகழொளிலங்கும்
புண்யசற்குல்லாசேயா பூங்கழல்தறைதாயா
புண்ணியரே என்னகத்தி லுன்னதமாய்மின்னிடவேவரும் (ப 4
ஆசையால்வாடி யடைக்கலந்தேடி
ஆனந்தமுடன்வந்த அப்துல்காதிறைசொந்த
அடிமையெனு மருளதனைத் திடமுடனே தரித்திடவேவரும் (ப 5

முற்றிற்று

ராகம் கமாஸ் தாளம் ரூபகம் பல்லவி
அன்னமே இந்த அவனிதானென் சதமோ—எங்க
ள்ராசாகிய மஹ்மூதரிகினைவை நிதமறவாதிரு (அன்ன
அநுபல்லவி
மன்னன்மறையதால் மனுவின் அகன்றன்னை நீம்
மணமாக்கிய மஹ்மூதரை மௌனமுடன்மறவாதிரு (அன்ன
சரணம்
சத்திமுத்திகளிமாவை சடத்திலறிந்து மிக
பத்தியுடனே பாமதுருவைத்தெரிந்து
சித்தமிலங்கிட வித்தையொளிதரும் நீ
ஜெயமாகிய மஹ்மூதரை தினமுமன மறவாதிரு (அன்ன 1

பொய்யானமாய்கையை மெய்யென்றுளத்திலெண்ணாமல் இந்த
வையகமெங்கும் வேறொன்ற வேற்றுமைகொள்ளாமல்
ஐயனருள்போல மெய்மையுணர்ந்திட நீ
அகமீதினிலஹாதாகிய மஹ்மூதரை மறவாதிரு (அன்ன 2

அஞ்செழுத்தான அல்ஹர்தின் அகமிபக்கண்டு நிதம்
கொஞ்சிடவே அப்துல்காதிருவிக்குகு கொண்டு
சஞ்சலமற்றி என்னெஞ்சிலருள் தரும் நீ
கருணைகரமஹ்மூதரை கருத்தில் நிதமறவாதிரு (அன்ன 3

முற்றிற்று

ராகம் கானடா தாளம் ஏகம் பல்லவி

நாதா உனதருளை நாடியான் வாடுகிறேன்
பாதமலரென் உளமீதில் தாரும்நபியே நாதா
வேதா இறையோன்திருதூதா
மெய்ஞ்ஞானத்தலபோதா என் ஈஸர்நபியே (நாதா 1

சித்தமுமைநிசமும் பந்தமுடன் நாடுதே
கத்தனருளாலுதித்த ஹாமீமெனும்நபியே
வெற்றியுடனே யுங்கள் முத்தி
யருளதையான் பெற்றிடவேனும்நபியே (நாதா 2

எங்கும்புகளப்தல்லா சங்கைசிகாமணியே
அங்கயிலஹுதின மிலகுப்நமமணியே
மங்காவொளிவதனைத் தங்கமெனவுளத்தில்
சிங்காரமான நபியே (நாதா 3

அஞ்சோடு வாவனையும் ஆலியுடனிதமுங்
கொஞ்சிட உன்குஞ்சாகின் விஞ்சையருள்நபியே
கெஞ்சுமப்துல்காதரின் அஞ்சலகற்றி என்றன்
நெஞ்சில்விலங்கும்நபியே (நாதா 4

முற்றிற்று

ராகம் செஞ்சுருட்டி தாளம் சாப்பு
செந்திமாநகர் என்ற மெட்டு
பல்லவி

சொர்க்கமாநகருக்கரசாகிய சோதியெனும் பிரகாசர் குரு
நாதரெனும் விசுவாசர் எங்கள்
சுத்தனின் புகழுற்றவா பரிசுத்தமாமறைபெற்றவா என்றஞ்
சிந்தையீதினில் வித்தமுநாட்டிய முத்தியருள்தரும் நாதர் பரி
சுத்தரெனும் மஹ்மூதர் (சொர்க்க 1

சந்ததம் உமைவந்தனம் செய்யான்
சங்கையுடன்பணிந்தேனே ஞானம்
பொங்கவருளும் கோமானே என்றஞ்
சிந்தைமீதினிர் வந்துநின்றிரு சொந்தமலரடி தந்திட நிதம்
தாமதஞ்செய்வதேதோ நான்மீதினில்
தாபரமாகிய நாதா என்றன் பாபமகற்று மெய்ப்போதா (சொ 2

ஓரிரவில் ஆகாயமதிர்சென்ற உத்தமமாகியவேதா பரி
பக்தரெனும் நவநீதா அங்கு
மன்னவன்றிரு முன்னிலேயரு ளுன்னதமொழி மின்னவே மகா
விண்ணவர்மகிழ்ந்தே புகழ்ந்தேத்திடும
பொன்னுலகுக்கதிகாரர் இந்த மண்ணுலகுக்கனுகூலர் (சொ 3

கானகந்தனிர் மான்மொழிகேட்டதின் காதலதைநிறைவேற்றி
சொந்த பாதடியிலவரமீட்டி வைத்த
காக்ஷியை அத்தாக்ஷியோடறிந் தேர்ச்சையாகிய
மோக்ஷமபெற்றிட வேடரும் விளைவாயிந்ததினதிர்
கூடிகுதாய் றஹ்மானே நிதம்
காடஅருளுங் கோமானே சொக்க 4

தஞ்சமென்றுங்கள் கஞ்சமலரடி
கெஞ்சிவந்தனைப் தல்காதிர் கல்பில்
விஞ்சைதரும்மஹ்மூதர் என்னில்
பஞ்சபாதகமிஞ்சிடாமலே நெஞ்சமீதினிர் கொஞ்சிடும்நபி
நாதமே ஹபீபை ஞாக்ஷமுடன் மூச்சில்
ஓதவரந்தருவீரே ஞான போதந்தந்தேயருள்வீரே (சொ 5

முற்றிற்று.

ராகம் காம்போதி தாளம் ரூபகம்
மாரன்வேள்செய் ஆறவாரம் என்றமெட்டு
பல்லவி

மாதே மாமஹ்மூதுபாதந் தேடடி கண்ணே பெண்ணே —மாதே

அநுபல்லவி

நாதராயிந்த பூதலமதில் நாகரீகமோகனராமடி (மாதே

சரணம்

கானகந்தன்னிலே மானதை மீட்டிய
காரணராகிய ஹாமீதுவாபடி
வானகமேகியே தானவன்மீதினிர்
வந்தனமோடுரை பேசிய சுந்தரராபஷேகடி (மாதே
கனந்தருந்திருஒளிவது வரஞ்சிறந்திருகரமதை
தினந்தினம்மனமதிலகி லுறைந்திடிப்படி தருந்திரு
குணயவனபநிறைந்தொழுகிய மறைதருமிறைபரிமழ
நறைநிறம்பியெகமகிழ்ந்திடும மிறையகற்றுமென்சிவனடி (மா 1
ஆதரவாகிய வேதமதில்வரிறை போதமுடனிந்தபூதலமீதினிர்
ஓதயருள்தரும் நாதனுதினம் சிந்தையதிலொளியாகிய
சந்திரராமஹ்பூபடி கனந்தருந்திரு (மாதே 2
வட்டமதாகிய மூளைவடிவின்கீழ்
திட்டமுடனவடிவுள்ள தொண்டைக்குமேல்
சட்டமாய்வாசலடைத்து ஹம்மென்றுநீ
சுகவலயபுரிகிலைதெரிந்திட சுடரொளிதருமஷ்ஹூதடி
கனந்தரும் மாதே 3
மானிலமபோற்றிடு மன்னரப்துல்லாவின்
மாதவத்தால்வந்த மாஜிதவாடி மோனமாயப்துல்காதிரகந்தனிர்
முனைவனின் அருளதுநிதம் மின்னிடவேதருவாரடி.
கனம்தருந் மாதே 4

* (முற்றிற்று) *

ஹமாசேநபி என்ற மெட்டு
இந்துஸ்தானி பியாக் தாளம் யேகம்
பல்லவி

கருணைநபி என்னைக் காருபித்திடுயே கருணை

அநுபல்லவி

பூரணமதியே புகழ்பெறும்நிதியே கருணை

சரணம்

அருநாங்கெழுத்ததில் அமைந்திடுஞ்சிர்றதை
தெரிந்துயாணுணர்ந்திட தெளிவைத்தந்தருள்வீரே (கருணை 1

துறைஹறு

ஆகியஹறொளிவதனிர் அருஉருவதாகவெளி
யானசுடரொளிவும் நீயே
சோதிவடிவாக அற்வாஹொரமிதாலுமஜ்
ஸாமுமின்ஸானும் நீயே கருணை 1

ஆதியினொளிவதா யருமயில்வடிவதாய்
அதிவிதமானநாதா ஆதரிப்பீரிப்போதே கருணை

துறைஹறு

வாணகமதிர்சென்று வல்லவன்முன்மிருமெஞ்
ஞானமொளி பேசுங்கோமான்
தீனெறிதுலங்க திருமறையினரும்பொருளதை
தினமும்றெளிவாக்குஞ் சீமான் கருணை 2
அருள்மக்கநகரதில் அப்துல்லாதவமதில்
அர்ப்புதமானநபி நர்ப்பதிசேரிப்போதே கருணை 3

துறைஹறு

சிற்றனுளமதில்வந்து சித்ரவடிவாகி உருவாக கருவாகும்நாதா
முத்தியருள்தந்துநிதம் வெற்றியுடனே யுனது
பத்தமதிலாக்கும்வேதா கருணை
பாடுமப்துல்காதிர் பவமகற்றிடுவீர்
பரகெதியருள்தரும் பரமகுருநபியே கருணை 4

முற்றிற்று

பிஸ்மில்லாஹி

குத்துபுல் அக்தாபு கௌதுல் அஃலம் முஹியித்தீன் ஆண்டவர்கள் மீது

## கலீதத்துல் ஐனியா பிவஸீலத்தில் குத்துபியா

வென்னும்

# 7 நேத்திரமணி மாலை

இந்தமுனாஜாத்தாகிறது யான் 17 வயதில் கித்தாபு ஓதிக்கொண்டிருக்கும்போது எனது நேத்திரத்திலொருவியாதி ஏர்பட்டு எழுத்தைப்பார்த்து வாசிக்கமுடியாமலும் சமீபத்தில் வரும் மனிதரின் சுரூபம்தெரியாமலுமாகபார்வைமங்கலாயிற்று அப்போதெனது தந்தையருகிய நாயகமவர்களனேக பரிகாரிகளைக்கொண்டு மருந்துகள் செய்தும் கொஞ்சமும் சுகம் தெரியாமலிருந்ததால் எனதுகல்பில் மிகவும் கவலையுற்றவனாக இந்த வெளிமருந்துகளில் யாதொருபுண்ணியமும்தெரியவில்லை நமது குருநாதாவாகிய கௌதுல்அஃலம் முஹ்யித்தீன் ஆண்டவர்களின் பொருட்டால்தான் சுகமாகவேணுமென்ற நாட்டத்துடன் அவர்களின் திருநாமங்களாகிய (அஸ்மாஉல் கோவதுஸ்ஸமதானி) என்ற வலுப்பமான நாமங்களை காலையிலும் மாலையிலும் ஓதி அகக் கண்ணும் வெளிக் கண்ணும் பிரகாசமாகும்படி துஆ கேட்டவனாக இருக்கும் போது 21-வது நாள் காலையில் வழமைபோல் சுப்ஹுக்குப்பின்னல் எனது நாட்டங்களை கல்பில் தரிபடுத்தினவனாக (அஸ்மாஉல்கௌதுஸ்ஸமதானியை) ஓதிமுடிக்கவும் எனது நாவில் இந்த கபூல்செய்யப்பட்ட முனாஜாத்து வெளியாச்சுது அதை எழுத எனதுகண் பிரகாசமாகபார்வைதெரிந்துவிட்டது. உடனே அதை எழுதி எனதுதந்தையராகிய நாயகமவர்களிடம் காண்பித்தேன் அவர்கள் மிகவும் சந்தோஷத்துடன் இது நீ சொன்னதுமல்லா இதைசொல்லஉனக்குவயதுமல்லா அறிவுமல்லா அல்லாஹு த்தஆலா கௌது நாயகத்தின்பொருட்டால் உனதுநாவில் (ஹிபத்தென்ற) நங்குடையாகவெளியாக்கியிருக்கிறுன் ஆனதால் நேமமாகஓதிவாவென எனக்குத்திரவு செய்தார்கள் அவர்களும் வெள்ளி; திங்கள் இரவுகளில் நேமமாகஓதிவந்தார்கள் ; இன்னும் அநேகர்களும்

அவர்களின்நாட்டங்களை நீனைத்தூஓதி கபூல் செய்யப்பட்டதாக வுமிருப்பதாலிதை நுக்கடம், சங்கடம், கஷ்டம், நஷ்டம், துன்பம், துயரம், பலாய், முசீபத்து முதலிய எந்தநேரங் களிலும் கௌது நாயகத்தின் முன் அதபுடன் நிற்பது போல் நமது நாட்டங்களை நினைத்து ஓதினால் கௌது நாயகத்தின் பொருட்டால் கபூலாகுமென்பதில் சந்தேகமில்லை நமது குரு நாதாவின் பொருட்டால் அல்லாகுத்தஆலா கபூலாக்கி வைப்பான் ஆமீன் யாறப்பில்ஆலமீன் ஆமீன்.

வெண்பா

ஆதாரமாகஎன்றன் அங்கமதிலேசிறந்த
வேதாம்பரானகௌதை நாடியான்கெஞ்சலுடன்
இந்தமுனாஜாத்ததனை இன்பமுடனேயுரைத்தேன்
என்றனிறையே இதற்கு காப்பு
நேத்ரமதினைவதனை நேத்ரமணிமாலையதால்
காத்தருளவேனும் கௌதுமுஹியித்தீன் தன் பொரு
துன்பம்வெருள் துயரந் தூராகவேவுனது (ட்டால்
இன்பமதை தந்துகவிசெய்

விருத்தம்

ஆதியிலவிபாய்தோன்றி ஆனந்தஒளிவாயெங்குஞ்
சோதிநற்சுடராதாகி சுகிர்தமெய்ப்பொருளுமாகி
நீதியாய் ஆலமெங்கும் நித்தியானந்தமாகி
வேதியர்க்கொளிவாய்வந்த வேந்தரே முஹியித்தீனே 1

திருமணியொளிவாய்வந்து திசையெல்லாமிலங்கிநின்று
அருமறையொளிவைக்காட்டு மகமியப்பொருளாய்தோன்றி
மருமலர்கருவாய்வந்து மகிழ்சுஷியாய்சுகந்தந்து.
குருவெனும்மணியதான கௌதுயா முஹித்தீனே 2

பூரணநபியுல்லாவின் புகழ்பெறுமணியதாக
காரணம்பொதிந்துஎன்றன் கமலக்கண்ணொளிவாய்வந்து
தாரணியதிலெல்லோர்க்குந் தவமுறுங்குருவதாகி
ஆரணம்விளைத்தஎங்கள் அண்ணல்யா முஹியித்தீனே 3

வஞ்சன் கன்னுசுளன்னிர் வந்தடாராமர்காத்து
பஞ்சபாபங்களனை பாதகமனைத்தும்போக்கி
நெஞ்சகமனுக்கறுத்து நேர்தருமொளிவாய்வந்து
கெஞ்சிடுமெனைஎன்னுளுங் கெதிதந்தாள் முஹிபித்தீனே 4

என்னைநீரிகழ்ந்திடாமர் இகபரமதினுங்காத்து
தன்னைத்தானறியும்போதந் தனைஎன்றனுளத்திலீந்து
மன்னர்வந்துரைத்த சூக்ஷமதையுன்றனுருவாய்காண
என்னகமதிலென்னுளு மிலங்கும்யா முஹிபித்தீனே 5

ஏழைகட்கிரங்கும் நாதரிறையருள்பெற்றகோமான்
கோழையென்னகம்வராமர் குணமுடன்காவல்செய்து
வேளைவன்றெனது துன்பம் வினைபலாயாவும்போக்கி
தாளைஎன்னுளமற்றிற் றுக்குந்தஸ்தகிர் முஹிபித்தீனே 6

அல்லலுந்துயரந்தீர்த்து அடிமைநேத்திரத்தைக்காத்து
தொல்லைநோவினையகற்றி துணிப்புடனருளைத்தந்து
புல்லரின்பகைமைநீக்கி புனிதனுயகத்தில்வந்து
வெல்லநல்லுதவிசெய்யும் வேந்தரே முஹிபித்தீனே 7

## வேறு

வல்லானின் தூதர் மஹ்மூதர்பேரரே எங்கள்
சல்லாபரே அப்துல்காதிரே
சிர்ரானதாத்துல்தைதிஜில் அமைந்தோரே என்றன்
ஷர்ரைநீக்கு மப்துல்காதிரே 8

சந்துந்தகன்லன் மகபிய ஹதியத்திலே அந்த
ஜாதுபெளக நாட்டத்துக்குல்லாசரே
அந்தலைக உன்லாக்கலைஉன்லாத்தஐயுனில் கதீம்
சொந்தஅமாவிர் தனித்தநாதரே 9

றப்பிஹறப்னை மிப்தாஹன் கன்ஸில்மக்பி என்றன்
துப்பைத்தகன்றொளியால் சிறப்பக்குங்காதிரே
மற்றுக்தஐயுன் அவ்வல்வஹதத்திலே நூருய்
தோற்றும் வபாத்தானநாதரே 10

வில்லொளிவே வளர்த்தமிப்தாஹன்குப்லன் என்றன்
அல்லலையகற்றி வப்தஹுமன்பாஹிரே
தெளிவான ஆத்மின் ஹகீகத்திலே நாறின்
ஒளிவாய்சிறந்தெழுந்த ஆத்திரே 11

ஆலமறுவாஹிதுருவாக்கும் காலிகாய் ஹக்கின்
கோலவடிவான குருநாதரே
ஹூப்பாய் அலஸ்த்து பிறப்பிருமெனவே நாளில்
செப்பாமல் செப்பி ஜெயம்பெற்றநாதரே 12

உல்லினுமேலான மறுத்தபாக்களை விட்டு
சுபுலியெனும் ஆலமிதாலதிலானோரே
ஆலமஜிஸாமதிலே ஆகம்ஜிஸ்மாய் அன்னை
நீலமகத்துள் தரித்தநாவிறே 13

திருவாய் ஆகமுருவாய் திரிலோசக்கருவாய் ஹக்காய்
மருவுங்குருவாக வெளியானமாத்திரே
கத்தனின்ஸான் காமிலாயமைத்திவ்வுலகில் எங்கும்
சித்துவிளைவிக்கும்பரிசுத்தநாதரே 14

ஆதியிலஹதாய்நின்ற அஹ்மதுவின் சொந்த
நீதமான தீனை ஹயாத்தாக்குங்காதிரே
எண்ணிலடங்கானை ஜெபஞ்செய்யும்வேதரே என்றன்
கண்ணின்மணியான மகராஜரே 15

:
அவ்வலதில்பாத்திறுப்பில் ஆகிர்ளாகிறும் றப்பை
செவ்வையுடன்தன்னில் தெரிசிக்கும் நாதரே
செம்பொனைப்போலெங்குமொளிவீசுமதியே என்றன்
கம்பலையகற்றுங்குருநாதரே 16

பார்த்தேனுபகாரியுங்க ளல்லாதில்லையே பின்பு
குஸ்திரத்துடன்முன்வந்துகாத்தநாதரே
உங்கள்பாதமலரதை என்றனுளத்திர் வைத்து
சங்கைகுக்ஷஜெயந்தந்தென்றைரும் ஆள்வீரே 17

நேத்திரத்தில் நசலொருபோதுமணுகா தெனைக்
காத்தென் துயர் தீர்த்தேயருள் தாரும்நாதரே
நவ்விறன் ஐனிபீபஸறின் அன்மறனின் கல்பில்
சவ்விறன் நூறன்பிவஜ்ஹிதும் காதிரே 18

தஞ்சமெனக்கெங்குமில்லை யுங்களையன்றி என்றன்
நெஞ்சமதில்வந்து நிதங் கொஞ்சும்ஹாவிறே
நேத்திரத்திடைநடு நின்றாடுமொளிவாய் கல்பில்
தோற்றும் பரமகுருநாதரே 19

நக்ஷிலென்றன் மருலைஅன்பு ஆதின் அவ்பதன் என்றன்
ஹக்கைகமஃகுக்கே மஹ்பூபரே
முத்தானமுறுஷிதென்னில் நித்தங்காவலாய் என்றன்
சத்தானசெய்கை அப்துல்காதிரே 20

ஹுல்மாத்துல் அஃபாரெனும் அம்மாரத்தனை வென்று
இல்மு அமலால்மகாம் நாசூத்திலானோரே
கிபுறுமிகவாகும் லவ்வாமாவின் குணத்தை விட்டு
அப்றுறன்வாறுடன் மலக்கூத்திலானோரே 21

காற்மிறனுமுவ்வாசைக் சுளலாகுமுல்ஹிமா குணம்
தீர்த்துஜபறாத்தில் சுஅதாவின்ராஜரே
கத்தன்குறனிர் துதிக்குமுத்மயின்னா வதிர்
சித்துடந்தரித்துமோனம் பெற்றநாதரே 22

மஃரிபாவெனுங் கடலினமுதருந்தி மூழ்கி
வைரியமுடன் மகாம் லாஹூத்திலானோரே
முத்திபெறும் ரூளியாவு மற்ளிய்யாவுஞ்சென்று
சித்திரக் கொலுஜம் ஹூத்திலானோரே 23

மோனமுடன்ஞான அமுதுண்டுசுகித்து தன்னிர்
தானாகவெங்கும் பிரகாஷரே
முந்தியனுகூலத்தை தெரிந்துஉணர்ந்து சொந்த
நந்தியால் உறாஜிலைகும் நாதரே 24

தோற்றும் உபூதியத்தின் மறத்தபாக்களை சடந்
தோற்றம்றுபூமியத்தி லானோரே
அன்பினாலுஞ் சூக்ஷங்காபகெளஸைநடுவிர் கண்டு
இன்பமுற ஹறூவைத்தாக்கும் நாதரே 25

கல்பினுங்களல்லாதவேறு என்னிலை வந்து
கலக்காமல்காக்கு முல்லாசரே
முன்பில் அதபுடன்தொழுதடிபணிந்தோம் எங்கள்
தன்பெனும்பாவமகற்றும் ஓ பிறை 26

நாளேகியாம்வேளேசாபி ஆகவந்தருள் இரு
தாளைக்கல்பில் தாக்கியொளிவாக்கும் நாதரே
சுத்தமாயென் சித்தமொளிவாயிலங்கஉன் பரி
சுத்தமாம்தரீகை பற்றினேநாதரே 27

நம்புமக்கட்குதவு முல்லாசரே இப்போ
அன்புடன் கைதாங்கியருளும் நாஸிரே
துன்பஞ்ஷித்தா அமளிவரும் நேரஇத் உங்கள்
செம்பொன்முகம் கொண்டேனேநோக்கும் நாதரே 28

அண்ணல்ஹஸன்ஹுஸைன் ஒளிவாலுதித்தோரே வள்ளல்
பன்னரபுசாலிஹீன்ற மாதவத்தோரே
பாரோர்புகழும் பஃதாதில்வாழ்வோரே எங்கும்
தீனோர்களேற்று மப்துல்காதிரே 29

சிற்றனுங்கள்நாமமூற்றேன் வெற்றியருள்வீர் என்றஞ்
சித்தமதில்முத்தியருள் தாருநாதரே
காலன்வரும் நேரமுங்கள் சூக்ஷதலிமா இந்த
பாலன்கல்பிலும் நாவிலும்தாக்கும் நாதரே 30

கெஞ்சியஞ்சியுன்பால் நின்றுகேட்கும்து ஆவை என்றன்
நெஞ்சங்கொஞ்சும்படி கபூல்செய்தருள் ஆமீன்
யாறப்பி எங்குமொளிவாக இலங்கும் உன்றன்
ஹுறூப்புநபிமீதிர் சல்லிசல்லிமன் ஆமீன் 31

தாயிமன் வ ஆலிஹி வ அஸ்ஹாபிஹி நிதம்
ஒய்வில்லாமல் கர்ரிமன் றப்பல் ஆலமீன்
யாருஸிகூல அஸ்அலன்னல்லிகா றப்பி
வற்சுக்லிகா அன் அற்ஹமர்ரு ஹிமீன் 32

முற்றிற்று

## கௌது நாயகத்தின்மீது பதங்கள்

ராகம் செஞ்சுருட்டி தாளம் யேகம்

மோடிசெய்வதினாலே யென்ற மெட்டு (பல்லவி)

நாடிவந்ததினாலே நன்மையுண்டடி செய்கை

சரணுநுபல்லவி

தேடியமுக்கோணமதில் மோடியுடனேயாசாய்
ஆளுநங்குருமுஹியித்தீனை அன்புடன்போற்றிடஇன்பமாய்வாடி (1
நாசிநடுசுழிமுனையில் நாமிருவருந்தனித்து
வாசமுடன்முஹியித்தீனை நேசித்தவருடன் பேசிடவாடி (நாடி 2
முன்னுங்குஹறுபதுவில் மின்னியஓரங்கூரத்தால்
முத்திதருமுஹியித்தீனை சித்தமுடன்தெரிசித்திடவாடி (நாடி 3
உச்சியின்சுடரிலங்கும் வச்சிரமணிமேடைதனில்
பக்ஷமுடன்முஹியித்தீனை பண்புடன்கண்டவர் தம்பமென்றே
மாசிலாமணிச்சுடராய் மாபஃதநதிலிலங்கும் (நடி 4
ஏகபரன்முஹியித்தீனை ஏற்றியனுதினம்போற்றிடவாடி (நாடி 5
ஆசையுடன்போற்றுமிந்த தாசனகமீதிலங்குந்
தாத்தொளிவாமுஹியித்தீனை கேத்திரமீதினிர்சாற்றிடவாடிவா 6

* முற்றிற்று. *

ஹிந்துஸ்தானி தோடி யேகதாளம் பல்லவி

குருவேயும்மை யாநாடி கோணமெங்குந்
தேடிமிக ஓடிவாடி மையல்மீறுகிறேன்வாரும் குரு

சரணுநுபல்லவி

ஆதியில்அஹதானேரே ஆகிறதிலஹமதும்நீரே
சோதியமுதமுண்டோரே
சோமனொளிபோலிலங்கும்வாமன்குதுபேநீர்வாரும் குரு 1

ஆலமெங்கும் அரசாளும் ஆரம்பகதந்தந்தாளுங்
காலன்முனனில் வரும்நாளுங்
காவலுடனாயில் கலிமாவையருள்வோரே வாருங் குருவே 2

கந்தாக்கவிழும்ராஜர் ஹாமீதின்மகவெனும்போஜர்
சுந்தரபூசாலிஹ்வாசர்
பிந்தினிலெழுந்தபீரெஞ் சிந்தையிலருளைத்தாரும் குரு 3

நெஞ்சகமதில்ருள்தாரும் நேசமாய்வந்தெனைக்காரும்
தஞ்சமாயெந்துயர்தீருந்
தாஸனப்துல்காதிறகம் நேசமாய்வந்தாளநிதம் குரு 4

✻ முற்றிற்று ✻

ராகம் சாவேரி ஆதிதாளம் பல்லவி

குக்ஷமதைதேடுசுல்த்தான் ஆரிபீனாநாடு செய்கின் குக்ஷ

சரணநுபல்லவி

காக்ஷிதுலங்குமகாமாயு நித்திலங்காரண நுநுவல்லோடி எங்கும்
மோக்ஷந்தந்தாடிமெமான சிங்காரமுஹ்றிதீனவரலலோடிசெய்கின்
நீதஜொலிமார்புயங்களிலே இருபாதமபதிததவராம் குரு (கு 1
காதலமென்றங்கீதையகற்றிநலமோக்ஷந்தந்தான்பவராம் (செகு
உச்சியின்கீலொரு பச்சிலுலாவிய உண்மைபபொருளுதனை நல்ல
இச்சணமேயதைப்பக்ஷமுடன்காணபண்பருளும்குருவாம் (செ
மஞ்சுதவழ்ந்திடுமாபஃதாதினிலகொஞ்சிடுஞ்சர் குருவாம்என்றன்
நெஞ்சமதில்நிதமமஞ்சுடனேவந்து விஞ்சைதருமகுருவாம் (செகு
எங்குமபுகழ்பெருஞ்சபைகையபூசாலிஹ் சிகைசிகாமணியாம் நிதம
பங்கமகற்றி என்அங்கமதில் வருந்துங்க நவமணியாம் (செகு

✻ முற்றிற்று. ✻

ஹிந்துஸ்தானி பியாக் தாளம் யேகம்
ஆண்டிப்பண்டாரம் பென்ற வர்ண மெட்டு பல்லவி

சாலிஹின்பாக்ச சாயுச்சியனுகூலா அபூ சாலிஹி

சரணுநுபல்லவி

ஆலமதிலுங்கண்ணப்போல் அன்புடையோராருமில்லை
பாலன்முகம்பார்த்து நிதம் பதமலரை தந்தருளும் சாலி 1
முத்தொளிவீசொத்தினமே முச்சுடராய்வந்துதித்து
எத்திசையோரும்புகழ ஏகனருளால்சிறந்த சாலி 2
கத்தன் கலிபாவெனவே காரணப்பேராயழைத்து
முத்திரைதன்னைத்தரித்த முருஷிதா எங்கும்விளங்கும்(சா 3
ஆருமுமையன்றியிந்த பாரிலுபகாரியுண்டோ
ஊறிலங்களென் அகற்றுள் நுட்பமதை ஈந்தருளும் 4
பூதலமதிற்சிறந்த புண்யபஃதாதலைமந்த
நாதராஜுதினமுமப்துல்காதிரின்கல்பில் துலங்கும் சா 5

முற்றிற்று.

ராகம் செஞ்சுருட்டி தாளம் சாப் பூமிமெச்சிடும் என்றமெட்டு

பல்லவி

காதலுடன்வந்து பாதமலரதை
நாடினேன் மிகவாடினேன் புகழ்பாடினேன் இப்போ
தாதரவாய்வந்தென் தீதையகற்றிட தேடினேன் செகைநாடினே
ஆதியிறைதிருத்தூதரமுதுண்ட (ன் 1
காதரே நவநீதரே தவப்போதரே சிந்தை
மீதிலிலங்கிடும் வேதமதாகிய பாதிரே அப்துல்காதிரேகாத 2
இருளகன்றோடிட திருவருளானந்தஞ்
சூட்டுவீர் ஞுக்ஷம்காட்டுவீர் முகங்காட்டுவீர் என்னிஸ்
ஒருபொருளான சற்குருவாய் மெய்ஞ்ஞான முதூட்டுவீர்
வாஷியதில் ஹூவின் வாசந்துலங்கிட (பவமோட்டுவீர் 3
வாருமே ஞுக்ஷந்தாருமே முகம்பாருமே பொல்லா
தோஷமகற்றிபுன் பாசமதிலென்னை சேருமேதுயர்தீருமே கா 4
சித்தமதிர்வந்து முத்திதந்தாண்டிடும்
வாசரே சொர்க்கநேசரே மகாராஜரே இந்த
சிற்றனப்துல்காதிர் நத்தும்பரமஉல்லாசரே விசுவாசரே கா 5

முற்றிற்று.

கொண்டிச் சிந்து பல்லவி

தருணந்தருணமையா தமியனை
காப்பதுக்கேயிது தருணமையா தருணம்

அநுபல்லவி

இருளுன் ஒளிமூன்றாய் இலங்கிய
அருளாயுதித்த அப்துல்காதிருவே தருணம்

சரணம்

அறுநாங்கெழுத்ததிலே யமைந்திடும்
அர்ப்புதமதைத்தெரிந் துணர்ந்திருந்து
கருவாம் ஹூருபதுவை கருத்துடன்
கூறிடகுருவெனக் கருளுதற்கே தருண 1

உச்சியதிநடுவிர் னின்று
உலகமெல்லாமிலங்கும் பொருளை
பக்ஷமுடனறிய பலன்றரும்
பாக்கியரே அப்துல்காதிறுவே தருண 2

கடைக்கண்சுழிநடுவில் ஒளிவாக
கலந்து இலங்குமந்தவாலையையான்
கடிசெய்தகமகிழ அருள்தருந்
தடமுற்றதருமசர்க்குரு இதுவே தருண 3

க்த்தனருள்துலங்கும் ஹபீபுல்லா
நற்றவமான அபூசாலிஹு-வின்
முத்தாயுலகோர்க்கும் உத்தம
மூஹியித்தீன்யா அப்துல்காதிருவே தருண 4

தஞ்சமெனநிதமு மும்மதடி
கெஞ்சுமுஹம்மதப்துல்காதிருவின்
கெஞ்சன்றனையொளிவாய் இலங்கிட
விஞ்சையருளும் குதுபெனும்குருவே தருண 5

* முற்றிற்று. *

ராகம் செஞ்சுருட்டி தாளம் யேகம் பல்லவி

ஆதரித்தாளுங்குருநீரே எங்கள்
அண்ணல்அப்துல் காதிறென்பீரே ஆதரி

சரணுநுபல்லவி

வேதனைசெய்கின்ற ஞுதனைமன்வந்து
வாதுசெய்யாமலுன் யாதிஇலங்கிட
போதந்தந்தாண்டருள்வீரே ஹறுவை
ஓதவரந்தருவீரே ஆதரித் 1

குற்றமிகைத்தயென் சித்தமதில்வந்து
சத்தாயிலங்கிட முத்தியருள்தரும்
நற்றவமானகுருநாதா உங்கள்
வெற்றியருளும்தவப்போதா ஆதரி 2

பஞ்சமாபாதகம்அஞ்சாமலேசெய்யும்
வஞ்சனப்வலின்குண மஞ்சுமடாமல்
மஞ்சுடனெஞ்சில் வந்தாளுஞ் சிந்தை
சஞ்சலகற்றி என்னாளும் ஆதரி 3

மாயதுன்யாவின் மயக்கமணுகாமர்
நேயமுடன்குரு நேரில்வந்தோதிய
ஞாயநினைக்க முகம்பாரும் ஜெபம்
ஓயாதிருக்க அகம்வாரும் ஆதரித் 4

முத்திசிறக்கிடு முறுசிதபூசாலிஹ்
நற்றவமாய்வந்த காதாப்துல்காதிர்
சிற்றந்துயாகற்றுவீரோ சுதம் முத்தஉளத்தில் தரிப்பீரே ஆ 5

முற்றிற்று

ஹிந்துஸ்தானி பியாக் ஏகதாளம் பல்லவி
ஆசையுமிகவாகுதே உங்கள்
வாசமலர்ப்பாதமதை நேசமுடனே நிதமுந்
தாசனுக்கருளுமப்துல் காதிரே என்றன் ஆ 1

நாவீளமஹ்ஷரின்வேளையில் பொல்லா
பாளாம்நரகமதிர் விளாதென்ரென்னைக்காத்து
ஆளாக்கி யாளுமப்துல் காதிரேஎன்றன் ஆசை 2

நாசிறுணிகடந்தேறியே ஆங்கு
வாசமுறுமண்டபத்திர் நேசமுடனேயிருக்க
பாசமருளுமப்துல்காதிரேஎன்றன் ஆசை 3

ஆகியருளதைத்தேடியே நல்ல
நீதவொலிமார்களுடன் காதலுடனேசென்று
வேதநெறிகாட்டுமப்துல்காதிரேஎன்றன் ஆசை 4

ஞஜாமபூசாலிஹின் சொந்த
ஆசைமகவாயுதித்து ஈஸாயென்னுள்ளமதிர்
போஜராய்வந்தாளு மப்துல்காதிரே என்றன் ஆசை 5

முற்றிற்று

ராகம் பைராவி தாளம் யேகம்

மாரன்வாதையினல் என்ற மெட்டு பல்லவி

கண்டால் வெகுநன்மையே எங்கள்
கருணைமுஹியித்தீன் சரணப்பொர்பாதத்தை கண்

சரணபல்லவி

மண்டலமெங்கும் புகழ்பெறும்நாயகர்
தொண்டனுளந்தனிர் வந்து இலங்கிட கண் 1

நித்தலாய்வந்த பததன்றனைநிதம்
சித்தமுடனுதரித்தருள் செய்திட கண் 2

தன்னையறிந்து தவம்பெறஞ்ஞுகுத்தை
உன்னதமாயகந்தன்னிர் துலக்கிட கண்டால் 3

முக்கோணவட்ட முகப்புநடுவினிர்
ஹக்காக்வேயுங்கள் காக்ஷிதுலங்கிட கண் 4

கம்புமப்துல்காதிர் துன்பமகன்றிட
செம்பொன்மலரடி இன்பமுடந்தர கண் 5

* முற்றிற்று. *

ஹிந்துஸ்தானி பியாக் தாளம் ரூபகம் பல்லவி

நாதரே இருப்பாதந் தந்தெனையாதரித்தருள் தாருமே
பாதகம்பாவதீதகன்றிட நீதமாயகம்வாருமே குருநாத 1
சோதிமாமஹ்ழூதரிந்தலப் போதராகிய ராஜரே
வேதமாயகமீதிலங்கிட போதந்தந்தருளீசரே குருநா 2
மூலமாமணிமேடைவீடதிர் கோலமாயரசாள்பவா
தாலமின் துஷ்டநேரவகன்றிட பாலனின்முகம்பார்ப்பவா குநா 3
மாயமானபுசானதின் குணங்காயமீதடாமலே
தூயசூக்ஷ்மநன்நேயமாய் நிதமீயுமென்னகமீதிலே குருநா 4
நாயகராபூசாலிஹின்திரு சேயரேமறைவேதரே
ஞாயஷெய்குஅலீசலாஹொரானி சேயனின் அகப்போதரோ குநா 5

முற்றிற்று.

ஹிந்துஸ்தானி தோடி தாளம் யேகம்
இன்னுவாக்காணனே என்ற மெட்டு பல்லவி

சித்தமிரங்குமையா ஜெம்மல் அப்துல்காதிறுவே சித்த

சரணாநுபல்லவி

கத்தனிக்கிருத்தூதரின் சுத்தமணியாயுதித்து
எத்தலத்திலுமிலங்கு மேந்தலப்துல்காதிறுவே சித்த 1
பஞ்சபாதகங்கள் மிக மிஞ்சுமிந்த யேழைதனை
செஞ்சரணந்தந்துநிதம் நெஞ்சமொளிவாயிலங்க சித் 2
கோட்டைநடுவீடதனிர் கோமான்முஹம்மதுவை
நோட்டமுடன் காணவருளூட்டுமப்துல்காதிறுவே சித் 3
கண்ணிடைசுழியதனிர் காக்ஷி தருவாய்த்துலங்க
என்னகத்திலேசிறந்த மன்னாப்துல்காதிறுவே சித் 4
நத்திசந்ததம்புகழுஞ் சிற்றனுக்குமதாருளால்
முத்திபெருஞ்சந்நிதியை கத்தந்தந்தெனக்கருள சித் 5

முற்றிற்று

ராகம் சஹானா தாளம் யேகம்
அய்யா பழனிமலைவேலா என்ற மெட்டு பல்லவி

ஐயா அபூசாலிஹின்பாலா எனக் காதரவான அஞ்சுகலா

தும்பொந்துதித்ததீனின்மேலாகிய தூதாமுதருந்தும் நூலா ஐ 1
எந்துமிலங்குமகாராஜா எங்களிறை கெளதென்றுரைத்தகாஜா
சந்தையொலிமார்களிந்தாஜாகிய சிகைமெனும்மகாபோஜா ஐ 2

பொய்யானகாக்ஷிகளைக்கண்டு மனம்
பொருந்திமெய்யென்று உண்மைகொண்டு
மையாகிடாமலுமைத்தொண்டு செய்து
மகிழஉதவிசெய்தால்நன்று ஐயா 3

கலிமாபொருளதனைக்கண்ணிர் காண
காக்ஷியருளுமென்றந்தன்னிர் ஒளிவாகளங்குமதைமுன்னிர்கண்டு
தெளியகடைக்கண்பாருமென்னிர் ஐயா 4

தென்றல்தடாகந்தென்னிசூழும் நகர்
திருபதிதாதினிர்வாளும் அண்ணல்குருவே எந்தநாளுமிந்த
அடிமைதனைகதம்தந்தாளும் ஐயா 5

முற்றிற்று

## தர்க்கலை பதியமைந்த மெய்ஞான தீபமாகிய
## ஆரிபுபில்லா
# 8 பீர்முகம்மதுசாஹிபு ஒலியுல்லா
## அவர்கள்மீது சொல்லிய நாவடிசிந்து

: காணவேணு காணவேணுமென்ற மெட்டு

தஞ்சமென்றுமைநம்பினேன் ஐயா தரும
நெஞ்சமிரங்கியருளசெய்ய தங்கள்
கஞ்சமலர்ச்சவடியை கொஞ்சலுடந்தந்து
அருள்வீரா மகா மோா தஞ்ச 1

பாலனைக்கண்பார்த்தருளும் வேதா எங்கள்
பாக்கியபீர்முஹம்மதெனும் நாதா இந்த
தாலமதிலுங்களைப்போல் சிலமதிலேசிறந்தோ
ருண்டோ கண்டதுண்டோ தஞ்ச 2

அந்தரன் கடந்தோராருள் பெற்று எங் தஞ்
சந்திரனொளிபோல் சிறப்புற்று எங்கள்
சிந்தை அந்தமாயிலங்க சுந்தரமெஞ்ஞான மெங்கும்
பகர்ந்தோர் புகழ்சிறந்தோர் தஞ்ச 3

காமில்சுலைமானொலியின் சேயர் முன்னில்
காரணமக்காவில் தொழும் நேயர் இப்போ
தாமிதமில்லாமலென்றன் காமியமகற்றியருள்
புரிவீர் ஜெயந்தருவீர் தஞ்ச 4

தச்சனற்றமச்சு தனிவிளங்கும் அந்த
முச்சுடரைக்கண்டு அகந்துலங்கும் படி
பக்ஷமுடனெயறிவை இச்சணமெனக்கருள
வருவீர் சுதந்தருவீர் தஞ்ச 5

பன்னிரண்டு மேல்சிறந்த நாமம் என்றன்
தன்னிலே இலங்க அருள்வீரே குரு
மன்னர்பீர்முஹம்மதை என்கண்ணிடை துலங்க அருள்
புரிவீர் கெதிதருவீர் தஞ்ச 6

தென்னல்வீசுங் காசிநகர் வாழுந் திரு
தேவர்சிருமனுக்கராலமீழும் எங்கள்
அண்ணல்பீர்முஹம்மதெனு மன்னரேஎன் கல்பில்
தானே தரிப்பீர் பாவமபொறுப்பீர் தஞ்ச 7

தர்க்கலைபதியமைந்தபீரே இந்த
தாசனின்துயரகற்றுவீரே எங்கும்
ஹக்கனின்னருளமைந்து தக்கபுகழாயிலங்கும்
வீரா மகாதீரா தஞ்ச 8

ஆதியில் அமாவாய்நின்றவாசம் பின்னால்
வேதமுடிவிர்துலங்கும் வேசம் தனை
நாதமே நின்காஇமப்துல்காதிறுக்கறியவருள்
காட்டும் வழிகாட்டும் தஞ்ச

முற்றிற்று

இந்தமெஞ்ஞான சாகரத்தில் மூன்றுபாகத்தையுமியற்றிய
எனது பிதாவின் பிதாவாகிய ஆரிபுபில்லா
[9] செய்குசதகத்துல்லாஹில்ஒலி

அவர்கள்மீது சொல்லிய பதங்கள்.

ராகம் கமாசு தாளம் யேகம் பல்லவி

சுழிமுனை தனிலிலங்குஞ் சுடரொளி சதகொலியே

அநுபல்லவி

அழியாஉன்றுருவதில் தெளிவாயென்றனந்தலங்க சுழி

சரணம்

நாசிநடுமையமதில் நயனச்சுழிமீதினிலே
வாசிவடிவாகிவரும் வள்ளலெங்கள் சதகொலியே சுழி 1

முச்சுடரின்காக்ஷியதை இச்சையுடன்கண்டறிய
அச்சுடராய்வந்திலங்கும் ஆரிபெங்கள் சதகொலியே சு 2

ஐயெழுத்தின்சூக்ஷமதை மெய்யகத்திலேதெளிய
துய்யகுருவாகஎனனிர் துலங்குமெங்கள் சதகொலியே சு 3

செய்குஹசன்முஹிதீனவர் செல்வமகவாயுதித்து
செய்குசதகொலியெனவே ஜெகதலமெங்கும் குருவாய் சு 4

பாசமுடன்புகழுமிந்த பௌத்ரனப்துல்காதிறுவை
ஆசையுடன்ஆளுமெங்கள் அண்ணல்குரு சதகொலியே சு 5

முற்றிற்று

இந்துஸ்தானி பியாக் யேக தாளம் பல்லவி

ஏறுபதிநகர்வாழும் சதகொலி ஏந்தலெனுங்குருநாயகமே

அநுபல்லவி

சாரூப சாமீப சாயூக்ஷமாய்வந்த
சற்குருவான சுடரொளிவே ஏறுபதி

சரணம் துனைஹறு

நன்னையறியும் அறிவையென்னிதயமீதினிர்
மின்னஒளிவாக்குங் கோமான்
முன்றனின்மறையதால் அஞ்ஞானமிருள்நீக்கி
மெஞ்ஞான மூட்டுஞ்சீமான்

அகமதில் நிதமெனக்கருள்தரும் வாசா
இகபரமதிந்துயரகற்றும் நல்னேசா
வாசம்பிரகாசம் வீசுமெங்கும்மகருஜராய்வந்த சதகொலியே ஏ 1

துஹையரு

ககனமுச்சுழிநடுவின்காக்ஷியதை காண அருள் செய்பவா
கருணையுடனடியந்துயர்தீர முகம்பார்ப்பவா
கதிரொளிபரவிய மதிநிகர்வாசா
கெதிபெற பதமலரடிதரும்நேசா
காக்குமென்றந் துயர்தீர்க்குமுல்லாச
ரெல்லோர்க்கும் கிருபைசெய்தாண்டருள்வீர் ஏ 2

துஹையரு

மூலமுக்கோணமதிர் முச்சுடரைக்காண அருளிபவா
ஆலமதிலெங்குமஹறதாகி சமதானவா
பந்தமுசிந்திடுஞ்சுந்தரவேதாஎந்தையரிந்திருதந்தை என்னுதா
பாசமுடனிந்த தாசனையாண்டிட
ஈசராய்வந்த சதகொலியே ஏறு 3

✻ (முற்றிற்று) ✻

10 ஷெய் நாயகமவர்களின் புத்திரசிகாமணியும்
எனது தந்தையுமாகிய ஆரிபுபில்லா

# செய்கு அலி சலாஹுத்தீன்

ஒலியுல்லா அவர்கள்மீது சொல்லிய பதங்கள்.

ஹிந்துஸ்தானி தோடி யேக தாளம்
அன்பிகா என்ற மெட்டு பல்லவி

என்பிதாஉன்கதம்கெதி தம்பமென்றேதினேன் துதி என்

சரணுநுபல்லவி

செம்பொனுலகில் பிறந்தேன் செம்மலேன் அருள்சிறந்தேன்
அன்பினால் நானும்மில்மாய்ந்தேன் ஆரியேசலாஹுத்தீனொலி 1

துஹைறு

ஆசையதும்தியான் அன்போடுநின்புகழ் நேசமாய் பாடினேனே
வாசமதுபொங்கவே வாவலியுடன்ஹுவதை
பாசமதிலாக்குக்கோனே

வாசியெனும்தேசியதில் வாழுஉங்கள் சூக்ஷமதை
நாசிநடுசுழியில்கண்டு நேசபாசமாயிணங்கிட என் 2

துரையரு

மூலமுச்சுழிநடுவில் மூச்சுடராதாகமே
மோனக்குடிகொண்டநாதா
சீலமுடன் அச்சுடரின் கோலம்வடிவாகவுன்
சூக்ஷந்தந்தாளும் வேதா
மூலமதாயிலங்குமுத்தி முக்கோணநடுவின்மத்தி
கோலமெறிலங்கசித்தி பாலன்மீதில்கோணும் பேரொலி என் 3

துஹைறு

உள்ளமதிலேலிதமும் கள்ளன் கன்றுசுவந்
தணுகாமலுமைநாடினேன்
எள்ளளவும்வேற்றுமையெனதகம் வராமலுனை
தினமுந்தொழ வரந்தேடினேன்
உள்ளமதில்எள்ளளவும் உம்மையன்றிவேறணுவுந்
துள்ளாமலுமைத்தொழவும்தூய்மைசெய்சலாஹுத்தீனொலி 4

துஹைறு

இகபதில் வருந்துயரம் துன்பமணுகாமல்யான்
அகமகிழ்வுடன் வாழவும்
வெகுஅழகதாகபரமதிலுள்ள திருவிகா
தீதாரைக்கண்டாளவும்
இகபரமதின்துயரம் எப்பொழுதும் தீர்த்தருளும்
அகமகிழவரமருளும் ஆண்டகைசலாஹுத்தீனொலி என் 5

துஹைறு

மாறுசெய்யும்நபுசதுவின்வேறு அணுகாமலென்னை
தீரம் தந்தாளும்நாதா
வீரமுடன் ஏறுபதிஊர தனில்வாளும்சத
கொலியின் மகவானதாதா
ஏறுபதி நகரதனில் ஏந்தல்சதகொலிநுதலில்
சீருறாமகவாய்வந்த செய்குஅலிசலாஹுத்தீனொலி என் 6

துஹைறு

வேதஒளிவாக அகமீது குருநாதவடிவாகதெளிவாகுங்கோமான்
பாதமலரைநிதமும் ஆதரவுடன்உமது
பாலன் உளந்தாக்குஞ்சீமான்
காதலுடனே உமதின் காக்ஷிபெறவே இம்மைந்தன்
ஆதரவைநாடிவந்தேன் அப்துல்காதிறகயிலங்கிட என் 7

முற்றிற்று

செஞ்சுருட்டி ஏகதாளம் பல்லவி

பக்ஷமுடனெனையாளும் பாக்யசலாஹென்பீரா
இச்சணம்உன்பாதகெதி ஈந்தருள்வீரென்மேரா
மெச்சலுடன் உச்சிதனில் அச்சருளும் ரக்ஷகரே பக்ஷ 1

காணவேணுமுங்கள் சூக்ஷ்ங்கருணையுடக்கடாக்ஷம்
நாணமற்றிட உன் காக்ஷிநல்கிவந்தாலோ மோக்ஷம்
மன்னவரே என்னகத்தில் உன்னருள்வந் துன்னிடவே பக்ஷ 2

தில்லைபதியலங்காரா திருஒளிகாட்டும்வீரா
அல்லலென்றுயரந்தீர ஆதரிப்பீரென்சூரா
வல்லவனின் நல்லருளை துல்லியமாய் தந்திடவே பக்ஷ 3

உச்சியின்கீழ் உள்நாவின்மேல் வச்ரமணிச்சுடராய்
முச்சுடரிலும்முதலாய் மோனமுறுநகெம்பீரா
இச்சணமென் மிச்சையதும் அச்சமுமகற்றிடவே பக்ஷ 4

அங்கமதிலணுவேனு முங்களல்லாஸ்திணைபோலுங்
தங்கிடாதிணையகற்றுஞ் சங்கைசலாஹென்பீரா
எங்களகம் திங்களைப்போல் தங்களருள் பொங்கிடவே பக்ஷ 5

ஏறுபதியனுகூலா எந்தல்சதகொலிபாலா
சீருறும்ஷெய்கலிசலா ஹாத்தினெனுஞ் செங்கோலா
வாருந்துயர் தீருங்கதந் தாருமுகம் பார்த்தருள்வீர் பக்ஷ 6

தஞ்சமென்றனுதினமுங் கெஞ்சுமப்துல்காதிறின்
நெஞ்சமதில் நின்றொளிவாய் கொஞ்சுஞ்சலாஹென்பீரா
மஞ்சுடைபோர் என்னுளத்தில் விஞ்சையருள் தந்திடவே பக்ஷ 7

முற்றிற்று

ராகமம் காம்போதி தாளம் சாப் பல்லவி
எப்போ காண்குவேனோ பெண்மானே — என்னில்
ஏகன் ஒளிவாய் சிறந்திலங்கும் கோமானே எப்போ

அநுபல்லவி

ஒப்புஉவமையிணையுலகிலில்லா சீமானே
செப்பரிதாயுதித்த ஜெம்மல்சலாஹென்கோனே எப்

சரணம்

எட்டாமலென்னிர் சிரந்தாடும் பக்ஷி
எட்டோர் நாலுகிறகால்பறந்தாடும் எட்டா
மெட்டாயப்பக்ஷிதனை செட்டாகவேபிடித்து
விட்டாலோடாமல் ஹூவால்கட்டகூக்ஷந்தந்திட எப் 1
அர்ப்பஜடமளியுமுன்னே என்னிர்
அன்பாய்குணங்குடிகொள்வார் எங்கண்ணே அர்ப
அர்புதமாயுளத்தில் அரனொளிவாய்சிறந்து
நர்ப்பதியதில் சேர்க்கும் நாதர் சலாஹென்பீரே எப் 2
முக்கோணசுழிமுனைதன்னிர் நின்று
முத்திதந்தாண்டிடு மோக்ஷராமென்னிர் முக்கோ
ஹக்காகவேதுலங்கும் காக்ஷியவரல்லோடி
தக்கபொருளாய்த்தன்னிர் தானையிலங்கும்பீரே எப்
சிற்றனப்துல்காதிரின் சித்தம் தன்னிர்
சித்ரவடிவாயுரு இலங்குவார்நித்தம் சிற்ற
முத்திபெற்றிடும் பரிசுத்தசதகொலியின்
நற்றவமாயுதித்த நாதர்சலாஹென்பீரே எப்

முற்றிற்று.

ராகம் அரிகாம்போதி தாளம் ஆதி பல்லவி
வாருமிதுசமயம் வந்துகதம்தந்தருள
தீருந்துயரமதை தீன்தீன்சலாஹென்பீரே வாரு

சரணநுபல்லவி

ஆரும்உமையேஅன்றி பாரிலெனைக்காப்பதுண்டோ
தாருந்திருவருளை தனதாயென்கல்பிலென்றும்
பாரும்பரமமுகமாக பார்த்தென்னுள்ளமதில்

தீரமுடந்தினமுந்திவ்யபொருளாய்த்துலங்க வா 1
ஸ்தூலவடிவதனையுன் சூக்ஷ ஒளியிலொடுக்கி
இந்தாலமதின்காக்ஷியதை எந்தன்விலனுவாய்விளங்க
சீலமுடனேனென்றன் சிந்தையதிலேதெளிவாய்
பாலந்தெரிசிக்குமாஹக்கின் கோலவடிவாய்த்துலங்க வா 2
பக்ஷமுடனேனென்றன் உச்சமதிலாளும்வீரா
மெச்சலுடன் கடைக்கண் அச்சுழியிற்றோற்றுய்வீரா
நற்செயலெனையடர முச்சுடரதாயிலங்கி
இச்சணமென்அகமதிர் அச்சருளும் ரக்ஷகரே வா 3
தாசன்மன்றாடும்பரி தாபம் அறிந்திலையோ
பாசமுடனின்முகத்தால் பார்த்தெனக்கிரங்கிலையோ
வாசமுடனென் அகத்துள் சூக்ஷ ஒளிவானபிர
காசமாயென்னிற்றுலங்கி ஈசராய்வந்தாளும்பிரே வா 4
ஏறுபதிநகர்வாள் ஏந்தல்சதகோடிபாலா
சாரூபமானசலாஹாத்தீனொஞ்செங்கோலா
தீரமுடன்மெஞ்ஞான தீபமப்துல்காதிரில் என்
நேரமுமிலங்கவருள் தாரும் கரைசேர்த்தருள வா 5

முற்றிற்று

ராகம் கமாசு தாளம் சாப்பு
மாதாமேடபரதேஜோ என்ற மெட்டு. பல்லவி
நாதராய்வந்தகுருவே நயனத்திடை நாத
சரணாநுபல்லவி
ஆதாரமுமையன்றியாருமில்லையே நாதா
பாதாரந்தன்னைகல்பில் பதித்தேஉன் அருள்தர நாத 1
அஞ்சேரடுவோரவதையும் ஆனந்தமாய்சரத்தில்
கொஞ்சிக்குலாவநிதங் கோமான்சூக்ஷந்தந்திட நாத 2
மெய்யைக்கண்டுணர்ந்துயான் மேலர்ப்புதந்தெரிய
பொய்யையகற்றியுங்கள் போதந்தந்தருள்செய்ய நாத 3
சுழிமுநடுவதனில் சூக்ஷமெய்ப்பொருளதாய்
அழியாஉருவிலையழகாயமைந்திலங்க நாத 4

திருஉருவாகளன்னிர் குருவாயிலங்கும்பீரே
இருலோகதிவினையுமருவாமலெனைக்காக்க நாத 5
ஆலநபிவயதி லர்ப்புதமாயமைந்து
பாலன் அகத்தில்வந்து பராயிலங்கும்குரு நாத 6
செய்குசதகொலியின் செல்வமகவாய்வந்து
செய்குஅப்துல்காதிரை சிறப்பாய்மகவென்றுள நாத 7

* முற்றிற்று. *

ஹிந்துஸ்தானி தோடி யேகதாளம்
பாண்டியன் மின்றமீனுக்ஷி என்ற மெட்டு பல்லவி
ஜெயம்தந்தாளுங்கோமானே சீர்பாதம்
தாருஞ்சீமானே ஜெய
நயமல்லாதுபயமேதுசலாஹென் நாதரெந்நீனே ஜெ

துகைஹறு
ஜெகமகிழுமெஞ்ஞான சுடரொளிதுலக்கிடும்
ஜெம்மலாய்வந்த குருவே
சித்தமதிர்வந்து நர்மூத்திதந்தாளும்பரி சுத்தஒளிவான குருவே
இப்போதென்கண்ணிடைநின்று நின்காக்ஷி காட்டினால்நன்று
எப்போதும் தன்னிலே தொண்டுசெய்ய உன் சூக்ஷந்தாஎன்றும்

துகைஹறு
சந்ததமுமைபுகழ்ந்தேற்றி யுன்னில்மாய்ந்து
சிந்தைமகிழ்ந்தோடி வந்தேன்
சங்கையுடன் செங்கமல ரடியதை யங்கமதில்
சிங்காரமாயணைந்தேன்
இந்நேரம்வந்தென்னைக்காரும் துயரம் சிந்தனைத்தீரும்
விண்ணோரின் குணமதிர்சேருஞ் சந்ததியான்
காணவரம்தாரும் ஜெயந்

துகைஹறு
பாறுபதிநகரதில் வந்தல்சதகொலிபால
ரெனஉதித்திலங்குங்கோமான்
ஏகனருள்பெற்ற செய்கலிசலாஹொலி என்ற
என்தந்தையானசீமான் என்மீதில்

கோபமோவாதா இப்போதென் தாபம்தீர்தாதா
என்னுள்ள மீதிலுன்பாதம்தரித்து ஓதினேனிதம் ஜெயம்

* முற்றிற்று *

## இதுவும் எனது பிதாவாகிய குருபரனை ஒருபரனாக தெரிசனஞ்செய்து சொல்லிய

# குருபுக ழானந்தக் களிப்பு.

வெண்பா

குன்றென்றசொல்லதனால் குண்டலமண்டலமெவையும்
உன்னதமுடன்வகுத்த மன்னவனே யுன்னருளால்
என்னிதயமதின் கறைகளெல்லாமகன்றிடஉன்
தன்னொளிவிலாக்கி யருள்செய் 1
ஏகசமதாய்நிறைந்து எப்பொருளிலுஞ்சிவனாய்
யோகமாய் நீமறைந்து உட்பொருளாய் பாத்திலுமாய்
என்னுளத்திலேசிறந்த யிறையேயானுனையறிய
தன்னறிவைத் தந்துதவிசெய் 2
என்னைத்தவத்தாலின்று எப்பவும்நன்னெறியுணர்த்தி
தன்னையறியும் மஃறிபா ஒளிவை என்னகத்திர்
தந்தகுருஎந்தையரை சொந்தபரனாயுணர்ந்தா
னந்தகளிப்போதஇறை காப்பு 3

கண்ணிகள்

சரணப்பதமருள்வீரே — சங்கை
செய்குஅலீசலாஹுத்தீனென்பீரே — சரணை
சிர்றுனாதாத்துல் அமாவில் — அங்கு
சிறப்பானகன்ஸுல்மக்பியதாக
யர்றத்துமுன் பஃதற்ற — அந்த
மஸ்கூத்து அன்ஹு மகாமில்தரித்து
தர்றத்துடன் வஹ்தத்தில் — நல்ல
தருமாயிலங்குந்தனித் தொளிவாகி
துர்றத்துல்பைலாவதாக — எங்கும்
தூண்டாமணிவிளக்கா என்பீரே — சரணை 4

சோகக்கடலலையேறி பொங்கி
மோனமூடக கடலிக்கானிலேகி
வேகமா யொன்றுடொனாகி சேரும்
வேளையிலேகுன்கொண்டே யொருமுத்து
வாகுடனேபச்சைப்பவளங் கூடி
வனனிறமான முஹம்மதுவாகி ஏகமானங்குஞ்சிறந்து வந்த
எந்தல் அலீசலா குத்திலென்பீரே சரண 5

முன்னவனின் அருளாலே தங்கள்
அன்னை வயதுதிற் றரிககுமுன்றாலே
மன்னர்பிதாவின கனவி லொருவர்
மறைவாகஷஹ்றைனி முகதாயிஜனி
சொன்னதைத்தன செய்கின்முன்பில் நின்று
சொல்லைஇருமாதம் நோம்பாயிருந்தால்
மன்னன்சந்ததியுனக்கீவான் என்று
மகிழுடனைக்கதவம் பெற்றபீரே சரண 6

றப்பியத்தான மகாயில் நின்று
அப்தியத்தில் இந்திகாவினிரவில்
செப்பரிதானபிதாவின் னௌமில்
சிறப்பானநாயகி கௌதுமலீஹா
ஹாட்பாய்பொபக்ஷர்றுஹா பிஞ்
லாமில ஹலீமென்று மூன்றாய்மடக்க
இப்பொருள்சேயென்றுடங்கள் தந்தை
செப்பிமகிழ உதித்தளன்பீரே சரண 7

மாதம்வாசந்தவருமல் நல்ல
மறையோர் பெரியோரனேகர்கள்வந்து
நதர்பிதாவின்கனவிர் நல்ல
நவிலுமாமுங்கள் வயிற்றிலனேகம் மாதம்மூன்றில் இலகைபலநல்ல
மணமாமசல ஹாமதின் ஒலிவந்துரைத்தார்
நாதர்நபியையதென்னும் என்றன்
நாமமுற்றதுவென்னும் புகழ்பெற்றபீரே சரண 8

ஆதாரமாகவேளன்னிர் வந்து
ஆரும்றஹ்மானென்றே உம்மைக்கண்டேன்
வேதியரான முஹம்ம தூர் ற
ஸூலெனும்தூதரென்றே உண்மைகொண்டேன்
காதராய்வந்திடும்கௌதுல் அஃலா
மாகியபீரென்று சத்தியம்கண்டேன்
தீதெனைவந்தடராமல் காக்கும்
திவ்யகுருபரனென்றீமான் கொண்டேன் சரணா 9

அஞ்சறை மாழிகைதன்னிர் ஒரு
அழகானசிங்காசனமதுக்குள்ளிர்
மஞ்சக்குடை மஹ்றமூதைக் கண்டு
மனமதுமகிழுற்று ஆனந்தம்பொங்கி
அஞ்சலியோடுங்கள் சூக்ஷும் தன்னை
ஆதாரமாய் காபகௌசைனிர்கண்டு
கொஞ்சிக்குலாவ ஹேறவானவை நிதம்
தஞ்சமாயுள்ளத்திற் றுக்கிடும்பீரே சரண 10

எண்சாணுடலதுக்குள்ளிலொரு பஞ்சநிறமுள்ளபக்ஷி தானுண்டு
அஞ்சாமலேஅதைமெல்லபிடித்தாங்காரமாய்க்கலிமா வமுதூட்டி
வஞ்சகமெல்லாம்அறுத்துபோக்கி
வள்ளல்குருபரனைஷாஹிதாக்கி
நெஞ்சினிருளதைநீக்கி அருளாக்கும் அபீசலாஹுத்தீனெனும்
(பீரே 11

நொந்துபிணியிலுழந்தும்பேர்கள்
நொய்பலந்தன்னைமுன்பில் வந்துரைக்க
கந்தங்கமழ்உடுநீரைக்கொண்டுகரத்தாலெழுத்திசுகமாக்கிவைத்த
சுந்தரரேஎன்றகல்பில்இருப்பான்சந்திரன்போல்பிறகாசிக்கசெய்து
நந்திகுருபரனாகவந்தநாதர் அபீசலாஹுத்தீனென்பீரே சர 12

ஏழுவயதுக்குள்ளாலேஇறை ஏகன்புறுகானைதஹிபுலாக்கி
நாளும்தமாம்செய்துவந்துபின்பு நாதன்வஹியத்தாகஅனேகம்

கோளையில்லாதஉலூமைநல்ல
கற்றுஉணர்ந்து ஞஸாலைதக்கண்டு
மீளுய்உறாஜதிலேகிவல்ல
மேன்மையைபெற்றசலஹெளுணும்பீரே சர 13

திருவான ஆலப்ஷாஹறுதில்நல்ல
திறமாகஉருவாகி வெளியானபின்பு
கருவான இல்மைப்படித்து அதின்
கருத்தைத்தெரிந்து அமலைஎடுத்து
மருவியஹக்கில்வுஸாலாய் சென்று
மஹ்றபூபும்ஹாப்பும் ஹபீபுமொன்றாகி
சரியாகவேயுறவாடி நின்ற
சற்குருவே சலாஹாத்தினென்பீரே சர 14

கலிமாவதின் அஸ்றாரை உங்கள்
கல்பில்தெளிந்து அதினமுதுண்டு
கலியதுமாவதுங்கூடி எங்கும்
கலிமாவதாகசிறந்திடும் இல்லை
தெளிவுடனேஎன்றன்கல்பில் அறிய
தேறுதலாகஉபதேசஞ்செய்து
சலியாதேஇதுவே மெய்ஞான மென்று
தரிப்படுத்தும் சலாஹாத்தினென்பீரே சர 15

சங்கையுடன்உலமாக்கள் கூடும்
ஷறபானசபையதிலானந்தமாக
சிங்கமதைபோல் உலூமுல் மஃரி
பாவைஎடுத்துபதேசிக்கும்வேளை
அங்கமகிழ்ந்துஎல்லோரும் இது
ஆண்டவனின்நற்கொடையான இல்மு
பொங்கினதல்லால்வேறில்லை என்று
புதுமைவிளங்கஎழுந்தனன்பீரே சர 16

சோதனைசெய்துங்கள் இல்லை மெல்ல
சோருலாக்கவென்றெண்ணியனேகர்
வேதமதாகிய நூல்கள்தன்னை
வெல்லுதர்க்காகவே ஆராய்ந்துணர்ந்து
வாதைகினைத்தங்கள்முன்பில் வந்து
வாயைத்திறக்கமுன்செய்திகள்யாவும்
ஏதுங்குறைவன்றிபொருங்க கண்டு
ஏமாறியாகவே போக்கிவைத்தாரே சர 17

காதலுடன்சிலபேர்கள் முன்னூல்
காரணமானமெய்ஞ்ஞானிகள்கூறும்
கிதமதின்பொருள்கேட்க வந்த
போதுபதேசித்தல் கிதத்தின்பொருளாம்
போதமுள்ளோரிந்தபுதுமை கண்டு
ஆதரவாகியமுறுவலிதென்றெண்ணி
பாதம்பணிந்துமுரீதை பெற்று
பாவங்கள்நீங்கிட செய்தனன்பீரே சர 18

அறுநாக்கெழுத்ததின்வயிற்றை அறிந்
திருகாங்கடியுள்ள பட்டணத்துள்ளில்
உருவா யொவ்வொரன்றிந்தலத்தை தெளிந்
துறவாடி ஆராய்ந்ததிர்சுடர்வீசும்
ஒருமூன்றெழுத்தையறிந்து அதை
யுகப்புடனேசாமீதினிமேலற்றி குறிவினைவாசஇறக்க ராமுன்
குணமாகஓர்மைந்தானுமென்பீரே சர 19

ஆதியமைத்தஅமானம் தன்னை
அண்ணல்குருவாலறிந்து தெளிந்து
வேதமதைக்கண்டுணர்ந்து பொல்லா
வேஷத்தனங்களைவிட்டு பிரிந்து
காதல்கமழ்மஹ்மூதைத் தன்னிர்
கண்டுதெரிசனஞ்செய்த நள் பெற்று
காதலுடன் ஈஞ்சொறை கூவ
போதந்தந்தாளுஞ்சலாலெனும்பீரே சர 20

ஆதியதில்அவிபாகமின்று ஆனந்தமயமாகி எங்குஞ்சிறந்து
சோதியாய்அனாதியின்றாரிலா என்ற
சூக்ஷவொளிவாசல்வடிவு துலங்கி
நீதமதாயென்னிற்சேருற்றாங் குரு
நாதரெனுங்கவுதுல் அஃலமாய்வந்து
மேதினிஎங்கும்நிறைந்த எங்கள்
மேன்மைஅலீசலாஹுத்தினென்பீரே சா 21

அழகானகாபகௌசைனி யதிர்
அலங்காரமாய்சுழிவட்டத்தின்மீது
தெளிவாய்த்துலங்கிடும்கன்னி யுடன்
தேனமுதுண்டுவலம்புரிந்தாடி எனிமிலங்குந்தலமீதில் கூடி
இனிதாய்த்தனதாக்கி கொண்டரசாள
ஒளிவீசுமஹமூதாய்வந்து என்னி
லொருபொருளாக நின்றுடருள்வீரே சா 22

பாவியான்செய்தபிழைகள் குற்றம்
பலதாயினும் நீங்களேபொறுத்திப்போ
கூவியழைக்கிடும்போது என்பால்
ஹூப்புடனே என் அகத்திர்சிறந்து
தானியேநல்லருள் தாக்கி தன தாகஉன்சூக்ஷவொளியில் நின்றுட
ஆவியுடன்ஹேயும்வரவும் வெகு
ஆனந்தமாகமலலாடருள்வீரே சா 33

குறிப்பறியாதிந்தபாலன் ஹூப்பாய்
கூறும்கவியின்வழுவைபொறுத்து
பிறியமுடனெங்கநாளுநல்லபேணுதலாகஎன்றன் துயர்போக்கி
தெரிசனமாயென்னிலமாய்ந்து யென்னை
தேறுதலாகப்பிடித்தோர்கட்கெல்லாம்
நெறிகுறியோடாளீந்து நல்ல
சேமுடந்தீங்கற்று மெண்பீரே சா 24

மாதவமாயென்னில் நின்றும் வந்த
மக்கள்கட்குமென்றன்சுற்றத்தோர்கட்கும்

காதலுடன்கைபிடித்த என்றன்
காருண்ய ஈசர்களானமக்கட்கும்
ஆதரவோடிதை ஓதும் கேட்கும்
அன்பர்கட்குமற்றுமுஸ்லிமீன்கட்கும்
தீதுவிளையடாமல் காத்து
நீனெறிகாட்டித்துலக்குமென்பீரே சர 25

வாசங்கமழும் வறுபதிநகர் வாழும் சதகத்துல்லா ஒலியொன்று
தேசமெங்குஞ்சிறந்தோங்கும்நல்ல தெய்வப்ரகாசமதாகயுதித்து
நேசமுடன்ஐ நூவலின் வழி நேமமுடனின்றதில்ஜெபித்தோரே
பாசமுடன் அப்துல்காதி றென்ற
பாலன்றனைக்கரைசேர்க்கு மென்பீரே சர 26

முற்றிற்று

## நிக்காஹெனும் விவாக சபையில் மணவாளர்களை வாழ்த்தும்

## 11 மங்களச்சிந்து

மங்களம் ஜெயமங்களம் இந்த
மன்னர்மணவாளருக்கு மனைவியர்க்கும்
மங்களம் ஜெயமங்களம் மஹ்ற
மூதுகதீஜா ஆயிஷாவாழ்ந்ததுபோல் வாழ்க மங்
அந்தமில்லா ஆதிஇறையோன் தன்னின்
அருளாலமைத்து சொர்க்கபதிதனிலே
சொந்தமுடனேயாஷாய் ஆழும்
விந்தைஆதமுடன் ஹவ்வாவாழ்ந்ததுபோல் வாழ்க மங் 1

தீர்க்கத்தரிசியராம் எங்கும்
நீநெறிதுலக்குந்திருச்சுடரொளியாம்
ஆர்க்குமார்க்கத்தரும்பொருளாம் வள்ளல்
அண்ணல்இபுறுஹிம ஸாறுவாழ்ந்ததுபோல் வாழ்க மங் 2

மஞ்சக்குடையுடையோர் எங்கும்
மதியின்ஒளியைவென்ற அழகுடையோர்

மிஞ்சும்புகட்குரியோர் மருவி
கொஞ்சும்யூசுபுநபி சுலைகாவைப்போல் வாழ்க மங் 3

அண்டாமரர்புகழும் சபூ றமைந்த சாயூஃபிய அய்யூபுநபியும்
மண்டலமதிமுயபிறைபோல் இலங்கும்
மனவிறஹ்மாவைப்போல் வாழ்ந்திருக்க மங் 4

மன்னுனுடன்மொழிந்தோர் மூந்தும்
மறைதவுறுத்த அபறுனியுடையோர்
மன்னர்மூசாநபியோ டிணங்கும்
மனைவிசபுறுவைப்போல் வாழ்ந்திருக்க மங் 5

காசினிளங்குமராய் ஆண்ட
காரணர்சுலைமாநன்னபியபூகாய்
ஆசையுடநவரசமாய் மருவி
அணைந்துபல்கீசுடனே வாழ்ந்ததுபோல் வாழ்க மங் 6

சந்திரனொளிவதைப்போல் இலங்கும்
சங்கைசிறந்த எஃகூபுநபியும்
சிந்தைமகிழ்ந்துசுகிக்கும் ருஹீனுடன்
சிறப்பாயெப்போதுமணம்புரிந்ததுபோல் வாழ்க மங்க 7

மூந்தும்இறையொளிவால் அமைந்த
முறுசல்கர்சர்முஸ்தபாநபியும்
கந்தங்கமழ்கதீஜா இருபெரும்
கருணையுடனேசுகித்திருந்ததுபோல் வாழ்க மங் 8

எங்குமிருளகல ஒளிவாய்
திங்களழைத்தமஹ்மூதுநபியும்
மங்கைமனைவி ஆயிஷா பீவியும்
மனமகிழ்ந்தனுதினம் வாழ்ந்ததுபோல் வாழ்க மங் 9

வங்குபிரோரைவதைத்து சொந்த
வாழ்க்கிரையாக்கும்வள்ளல்ஹைதரலியும்
எங்குமபுகழ்ப்பாத்திமா பீவியும்
இணங்கிமருவிசுகித்திருந்ததுபோல் வாழ்க மங் 10

சிந்தைதமகிழ்ந்துநிதமும் இவர்கள்
சிறப்பாய்தேவிகளுடன் வாழ்ந்ததுபோல்
கந்தங்கமழ்நறை துலங்கும இந்த
கணவரும்மனைவியும்வாழ்ந்திருக்க பூவை 11

## துஆ

கத்தன்திருஒளிவதனுல் அமைத்த
ஹாமீமுஹம்மதுவின் பொருட்டைக்கொண்டும்
மற்றும் அனபியாக்கள் அவ்லியா சுஹதா
மறையோர் பெரியோர்களினுதவிகொண்டும்
எத்திசையும்போற்றும்குதுபாம் எங்கள்
இறைதஸ்தகீர் முஹியித்தீன் கையைக்கொண்டும்
சுததலபனுல் மதனை யமைத்த
ஜாய அப்துல்லா ஐதரூஸருளைக்கொண்டும்
நத்தும்நாரெவர்களுக்கும் இரங்கும
காதர்ஷாஹுல்ஹமீதின ஆதரவைக்கொண்டும்
இத்தம்சிறப்புற்றகுருவாம் எங்கள்
செய்குசதகோலீ யனுமதியைக்கொண்டும்
முத்தியருளுற்றென் அகத்தில் இலங்கும்
முறுசிதலீசலாஹின இருநுயைகொண்டும்
குற்றமற்றென்றுளுபசெல்வமாய் நல்ல
குணமாய் மணவாளருந்தேவியுட..ப்
நற்றவமாய் வாழ்ந்துசுகிக்க என்றன்
நாதனிடஞ்செஞ்சி ிக்கக்கேட்டிரைஞ்சும்
சிற்றன் அப்துல்காதிறென்போன் துஆ
சிறப்பாயென்னுளும் கபூலாக ஆமீன் மங்களம்

முற்றிற்று

திருமெஞ்ஞான சாகரம்.

# வாழ்த்து.

சுத்தன் அருள்வாழி ஹாபீம்நபிவாழி
மற்றும் அன்பியாக்களுடன் மறையோர்களும்வாழி
சுத்தவலிமார்வாழி கௌது முஹியித்தீன்வாழி
எத்திசையும்போற்றுமென்றன் எந்தல்ஷெய்குமார்வாழி
சகைத்அப்துல்லா ஐதருசல் அதனியும்வாழி
அங்கமதில்வாழும் குருதந்தையருமேவாழி
எங்கும்புகழும் ஆரிபீன் ஆபிதீன்வாழி
சிங்காரமாயிதை யுணர்வோர்களும்வாழி

ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்

## திருமெஞ்ஞான சாகரம்.

## முற்றுப்பெற்றது.

செய்குமுகம்மது அப்துல்காதிரி
عبد القادر بن شيخ علي الصلاح بن القادري
செய்கு அலியுஸ்ஸலாஹு இஹுஸ்காதிரிய்